ஆகஸ்ட் : 2019 | ரூ.20

# நிமிர்வோம்


NIMIRVOOM TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

மலர் : 3 | இதழ் : 08 | ஆகஸ்ட் : 2019 | விலை : 20
VOL : 3 | ISSUE No: 08 | AUGUST : 2019 | PRICE Rs: 20

## காஷ்மீர்: வரலாறும் துரோகமும்
## சிறப்புக் கட்டுரை



- புரோகிதர்கள் மேலாதிக்கம் உருவான வரலாறு
- கடும் நெருக்கடியில் இந்திய பொருளாதாரம் – ஓர் அலசல்
- தேசிய விருது: தமிழ்ப் படங்கள் புறக்கணிப்பு



# ‘இந்து - இந்தியா’ பெயர்களுக்கு சான்றுகள் உண்டா?

இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா என்ற பெயரோ, இந்துக்கள் என்ற பெயரோ, எங்காவது வழங்கப்பட்டு இருந்ததாக உங்களில் யாராவது கூற முடியுமா? கூற முடியுமானால் அதற்கு உங்கள் வேதத்திலோ, சாஸ்திரத்திலோ,இதிகாசங்களிலோ,ஒரே ஒரு ஆதாரமாவது காட்ட முடியுமா? ஆதாரம் கண்டோம் என்று யாராவது சொல்லட்டுமே பார்க்கலாம். யாராவது சொல்வார்களானால் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்; நன்றியறிதலோடு என் தவற்றைத் திருத்திக் கொள்ளவும் தயாராய் இருக்கிறேன்! 230 ஆண்டுகளுக்கு முன் பூகோளத்தின்படி இத் தேசத்திற்கு இந்தியா என்று பெயர் இருந்ததாக யாராவது காட்ட முடியுமா? இந்தியா என்பதும் இந்துக்கள் என்பதும் நடுவாந்திரத்தில், அதுவும் சமீபத்தில் ஆரியர்களால் கற்பித்துக் கொள்ளப்பட்ட பெயர்களே ஒழிய, பழைய மூலப் பெயர்கள் அல்ல. ஆனால் ஆரியர், திராவிடர் என்ற பெயர் மட்டும்- என்று தோன்றினவோ என்று கூட வரையறுத்துக் கூறமுடியாத அளவுக்குப் பழமைப் பெயர்கள். ஆரியர் அல்லாத திராவிடர்களைத்தான்- ஆரியர்கள் 'தஸ்யூக்கள்' என்றும், 'சூத்திரர்கள்' என்றும், இழிவான வேலைகளுக்கே உரியவர்கள் என்றும், அரக்கர்கள்,இராட்சதர்கள் என்றும் கூறி இருக்கின்றனர்: இதை நாம் கூறவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பண்டித நேருகூடத் தம் மகளுக்கு எழுதிய கடிதத்தில், 'இராமாயணத்தில் குரங்குகள், அரக்கர்கள் என்று பழித்துக் கூறப்படுவது திராவிடர்களைப் பற்றித்தான்' என்று கூறியுள்ளார். அதாவது, புல்தரை தேடிவந்த ஆரிய லம்பாடிக் கூட்டம், திராவிடர்களோடு போராடித் தமக்கு அடிமைப்பட்டுப் பணியாட்களாக உழைக்க ஒப்புக்கொண்டவர்களைச் சூத்திரர், பஞ்சமர் என்றும், தம்மை எதிர்த்துத் தம் ஆட்சியை வெறுத்து ஓடியவர்களை அரக்கர்கள், இராட்சதர்கள் என்றும் கூறி வந்திருக்கிறது.

- குடிஅரசு - 08.05.1948

நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
ஆகஸ்டு 2019 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363
வெ. மனோஜ்
7373684049

# ஒற்றை ஆட்சி வழியாக வேத காலத்தை நிறுவ முயற்சி!

இந்தியா என்பது ஒரு தேசமாகவே உருவாகவில்லை. பல்வேறு பண்பாடு, மொழி, பேசும் மாநில மக்கள் வாழும் ஒரு துணைக் கண்டம். அரசியல் சட்டமே அப்படித்தான் கூறுகிறது. ஆனால் பெரும்பான்மை பலத்துடன் அதிகாரத்துக்கு வந்துள்ள பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி, இந்தியாவை ஒற்றை ஆட்சி நோக்கி வேகவேகமாக இழுத்துச் செல்வதற்கான சட்டங்களை அதிரடியாக அமுல்படுத்தி வருகிறது.

இந்தியாவின் ஒருமைப்பாடு என்பதன் அடித்தளம் மாநிலங்களின் தன்னாட்சியிலும் கூட்டாட்சி தத்துவத்திலும் தான் அடங்கியிருக்கிறது. அவைகள் தகர்க்கப்படும்போது இந்தியாவின் ஒருமைப்பாடும் வேகமாக தகரும் நிலைதான் உருவாகும் என்பதை பார்ப்பனியம் உணர மறுக்கிறது.

இனங்களின் அடையாளம், உரிமைகள் பறிக்கப்படும்போதும் அடையாளங்கள் அழிக்கப்படும் போதும் விடுதலைக்கான போராட்டங்களும் போர்களும் தொடங்கி விடும் என்பதுதான் வரலாறு கூறும் படிப்பினை. இந்தியாவிலே தனி மாநிலம் கோரி போராடிய நாகாக்கள், போடோக்கள் இரஷ்யாவிலிருந்து பிரிந்து போக போராடி வரும் செச்சென்ஸ் (Chechens) மக்கள், பாகிஸ்தானிலிருந்து பிரிந்து போக போராடும் பலுசிஸ்தான், இந்தோனேசியாவிலிருந்து பிரிந்து போக விரும்பும் மேற்கு பப்புவா (West Papua) எத்தியோப்பியா, சோமாலி பகுதியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள போராடி வரும் ஒரோமோக்கள், சோமாலியர்கள், துருக்கியிலிருந்து விடுவித்துக் கொள்ளப் போராடும் குர்து இன மக்கள், ஜியார்ஜியாவிலிந்து விடுதலை கோரி போராடும் தெற்கு ஒசேஷியா (South Oseetia) மற்றும் அப்கார்ஷியா (Abkhazia), சிங்கள பேரினவாதத்திலிருந்து விடுவித்துக் கொள்ளத் துடிக்கும் ஈழத் தமிழர்கள், காஷ்மீரிகள் நடத்தி வரும் போராட்டம் எல்லாவற்றுக்குமே அடிப்படை ஒரு இனத்தின் அடையாளத்தை அழித்து உரிமைகளைப் பறித்து ஒற்றை ஆட்சி முறையைத் திணிப்பதுதான். கியூபெக், ஸ்காட்லேண்ட் மாநிலங்களின் மக்களும் தங்களின் அடையாளம், உரிமைகள் மறுக்கப்படுவதற்காகவே முறையே கனடா, பிரிட்டன் நாடுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள போராடி வருகிறார்கள். ஒரு தேசம் ஒற்றுமையாக ஒருமைப்பாட்டோடு உருவாக வேண்டுமானால் அத்தேசத்தில் அடங்கியுள்ள பல்வேறு இனமக்களின் சுயாட்சி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையே தலைசிறந்த அரசியல் ஆய்வாளர்கள் அழுத்தமாக வலியுறுத்தி வருகிறார்கள்.


ஒரு அரசாக இருந்தாலும் சரி; சமூகமாக இருந்தாலும் சரி; மற்ற சமூகத்தவர்களை பாதிப்புக்கோ, இழிவுக்கோ உட்படுத்தக் கூடாது. தாங்களே கடவுளால் சமூகத்தை அடக்கி ஆள பிறப்பிக்கப்பட்டவர்கள் என்று ‘பிராமணர்’ என்ற சமூகம் இங்கே பல நூறு ஆண்டுகளாகக் கூறிக் கொண்டு அதை உறுதிப்படுத்தி வருகிறது. ஒரு நாட்டின் அரசியல் சட்டம், குடிமக்கள் அனைவரும் சமம் என்று கூறினாலும் அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தங்களின் ‘ஆகம விதிகளுக்கு’ உண்டு என்கிறார்கள். நீதிமன்றங்களே அதற்கு பணிந்து போகின்றன. மற்றொரு புறம் சமூகத்தை பிறப்பின் அடிப்படையில் பாகுபடுத்திக் கொண்டு அதுவே ‘தர்மம்’ என்று பேசும் ‘மனுதர்மம்’ அரசியல் சட்டங்களுக்கு சவால் விடுகிறது. அரசியல் சட்டம் உருவாக்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துக் கொண்ட பா.ஜ.க. இப்போது என்ன செய்கிறது?

அரசியல் சட்ட அமைப்பின் வழியாகக் கைப்பற்றிய அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டத்தின் நோக்கத்தை சிதைத்து, ‘மனுதர்ம’ ஆட்சியான இராமராஜ்யத்தை நிறுவத் துடிக்கிறது.

முதற்கட்டமாக இந்தியாவை ஒற்றை ஆட்சி அதிகாரக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது அவர்களின் முன்னுரிமைத் திட்டம். அந்த நோக்கத்தோடு மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அதிகாரமற்றவைகளாக்கப்படு கின்றன. அதற்கான சட்டங்கள் வேகவேகமாக அதிரடியாக வந்து கொண்டிருக்கின்றன.

இந்த ஆபத்துகளை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? மாநிலங்களின் முழுமையான உரிமைக்கான சுயஆட்சி உரிமைகளை வலியுறுத்தி, அதை மக்கள் இயக்கமாக்க வேண்டும். தமிழ் நாட்டை வடவர் மயமாக்கி சமஸ்கிருதம், இந்தி, பார்ப்பனிய வேத கலாச்சார மரபுகளை திணிக்கிறார்கள். இவற்றிற்கு எதிரான இயக்கத்தை மாநில சுயாட்சி முழக்கங்களோடு இணைக்க வேண்டும். தமிழ்நாடு மட்டுமே இதற்காக வழிகாட்டும் மாநிலமாக இப்போது இருக்கிறது!

# காஷ்மீர்: வரலாறும் துரோகமும்



**காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த வரலாற்றுப் பின்னணியையும் 370 சிறப்புப் பிரிவு வழங்கிய உரிமைகளை படிப்படியாக இந்திய அரசு பறித்ததால் அம்மக்களிடையே உருவான எதிர்ப்பையும் சுருக்கமாக விவரிக்கிறது, கட்டுரை.**

தங்கள் வாழ்வுரிமை பறிபோகும் என்ற பதற்றமே காஷ்மீர் மக்களை அலைக்கழிக்கிறது என்பதைப் பார்க்க மறுப்பவர்களால் காஷ்மீர் பிரச்சனையை புரிந்து கொள்ள இயலாது.

இந்தியா விடுதலை பெற்றபோது 601 சமஸ்தானங்கள் இருந்தன. இதில் 552 சமஸ்தானங்கள் இந்தியாவோடும், 49 சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன. மற்ற 3 சமஸ்தானங்கள் எவரோடும் இணைய மறுத்தன.

1. ஜூனாகட் சமஸ்தானம்
2. ஹைதராபாத் சமஸ்தானம்
3. காஷ்மீர் சமஸ்தானம்

ஜூனாகட் சமஸ்தானத்தின் நவாப், தனது சமஸ்தானத்தை பாகிஸ்தானோடு சேர்ப்பதாக அறி வித்தார். இந்துக்கள் அதிகம் இருந்த இங்கு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.1948 பிப்ரவரி 7ல் இந்திய அரசாங்கம் படைகளை அனுப்பி, மக்களிடம் நேர்முக வாக்கெடுப்பு நடத்தி, இதனை இந்தியாவுடன் இணைத்தது.

ஹைதராபாத் சமஸ்தானம் (இன்றைய தெலுங்கானா பகுதி) மிகப்பெரியது. இங்கு மன்னராக இருந்த நிஜாம் இந்தியாவுடன் இணைவதை விரும்பவில்லை. ரஜாக்கர்கள் என்ற பெயரில் வைத்திருந்த தன்னுடைய இராணுவத்தை வைத்து, முஸ்லிம் அல்லாதோரையும், தெலுங்கானா விவசாயிகள் போராட்டத்தையும் ஒடுக்க முனைந்தார்.

இந்திய ராணுவம் 1948 செப்டம்பர் 13இல் ஹைதராபாத் சமஸ்தானத்தில் நுழைந்து, நிஜாமின் இராணு வத்தையும், கம்யூனிஸ்ட்டுகள் தலைமையில் நடைபெற்ற தெலுங்கானா விவசாயிகள் போராட்டத்தையும் ஒடுக்கியது.1949 ஜனவரியில் இந்தியாவுடன் இணையும் ஒப்பந்தத்தில் ஹைதராபாத் நிஜாம் கையெழுத்திட்டார்.

ஜூனாகட், ஹைதராபாத் சமஸ்தானங்கள் பெரும் பான்மையாக இந்து மக்கள் வசிப்பவையாக இருந்தன. ஆனால் மன்னர்கள் முஸ்லிம்களாக இருந்தனர்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் 90 சதவீதம் முஸ்லிம் மக்கள். ஆனால் மன்னன் இந்து. டோக்ரா வம்சத்தை சேர்ந்தவர் ஹரிசிங். ஹரிசிங்கின் மூதாதையர்களுக்கு காஷ்மீர்

அரசுரிமை வந்ததே வேடிக்கையானது, கேவல மானது. அன்று காஷ்மீர் பஞ்சாப் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக சீக்கியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. டோக்ரா வம்சத்தை சேர்ந்த குலாப்சிங், சீக்கியமன்னர் ரஞ்சித்சிங் என்பவரின் இராணுவத்தில் அவரது சதி வேலைகளுக்கு துணை நின்று விசுவாசமாக பணியாற்றியமைக்காக காஷ்மீர் பகுதியை இனாமாகப் பெற்றார். இதன் மூலம் தன்னை வளர்த்துக் கொண்டு, சீக்கியரையே தோற்கடிக்க பிரிட்டிஷாருக்கு துணை போனார்.

பஞ்சாப் சமஸ்தானத்தை கைப்பற்றிய பிரிட்டிஷ்காரர்கள், இழப்பீட்டுத்தொகையாக சீக்கியர்கள் 75 லட்சம் கொடுக்க வேண்டும் எனவும், இல்லையேல் காஷ்மீரை பிரிட்டிஷாருக்கு விட்டுத்தர வேண்டுமெனவும் நிபந்தனை விதித்தனர். 75 லட்சம் தர பஞ்சாப் சமஸ்தானம் ஒப்புக்கொண்டாலும், அதனால் தொகையைக் கொடுக்க முடியவில்லை. குலாப்சிங் தொகையை தர முன்வந்த தால் காஷ்மீர் அரசுரிமை குலாப்சிங் வசம் சென்றது. குலாப்சிங் மகன்தான் ஹரிசிங். காஷ்மீர் குலாப்சிங் வசம் வந்ததற்குப் பெயர்தான் அமிர்தசரஸ் ஒப்பந்தம். 1846ல் இந்த ஒப்பந்தம் போடப்பட்டது.

ஒரு விற்பனைப் பத்திரத்தின் மூலம் அரசுரிமையைப் பெற்ற மன்னர் ஹரிசிங், காஷ்மீர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேர விரும்பாமல் தனியே சுதந்திர நாடாக இருக்க விரும்பினார். 1947 ஜூலை மாதத்தில் மவுண்ட்பேட்டன்- ஹரிசிங் சந்திப்பு நடந்தது. மவுண்ட்பேட்டன் காஷ்மீர் பாகிஸ்தானோடு சேர வற்புறுத்தினார். ஹரிசிங் அதற்கு சம்மதிக்க வில்லை. மறுபக்கம், ஹரிசிங்கின் ஆட்சி மக்கள் விரோத ஆட்சியாக இருந்தது. மன்னரின் கொடுங் கோலாட்சிக்கும், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக மக்கள் போராடிக் கொண்டிருந்தனர். முஸ்லிம்கள் இரண்டாம்தரக் குடிகளாகவும், நிலமானியங்கள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டும், சொத்துக்களை வாங்கவோ, விற்கவோ முடியாமலும், மரங்கள் வெட்டக்கூட முடியாமலும் துன்புறுத்தப்பட்டனர்.

**தேசிய மாநாட்டுக் கட்சி**

1924 முதலே தீவிரமடைந்திருந்த மக்கள் போராட்ட த்தில், 1931இல் முஸ்லிம் மாநாடு என்ற இயக்கம் துவங்கி, 1939இல் தேசிய மாநாட்டுக் கட்சியாக உருவெடுத்தது. தேசிய மாநாட்டுக் கட்சி மன்னருக்கு எதிராகவும், வெள்ளையருக்கு எதிராகவும் போராட்டத்தை தீவிரமாக நடத்தியது.

தேசிய மாநாட்டுக்கட்சி மன்னருக்கு எதிராக போராடிய நிலையில், மன்னருக்கு ஆதரவாக பிரஜா பரிஷத் என்ற அமைப்பு செயல்பட்டது. பிரஜாபரிஷத் என்பது வேறு எதுவுமல்ல; ஆர்.எஸ்.எஸ் அமைப்புதான் அந்தப் பெயரில்தான் காஷ்மீரில் செயல்பட்டது. காஷ்மீர் இந்தியாவுடன் இணையக்கூடாது என ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் அன்று கடுமையாக வலியுறுத்தினர். வெள்ளையர்கள் காஷ்மீர் பகுதியை இந்தியாவுடன் இணைக்க வேண்டுமென இங்கும், பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டுமென அங்கும் பேசி, இருவருக்கும் இடையே ஆயுதப்போரை மூட்டி விட்டார்கள். வெள்ளையர்களால் தூண்டி விடப்பட்ட பட்டாணிய இனக்குழுப்படை 1947 அக்டோபர் 22இல் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலிருந்து காஷ்மீருக்குள் நுழைந்தது. மன்னர் ஆட்சியிலிருந்து மக்களை விடுவிக்கப் போகிறோம் என்ற கோஷத்துடன் நுழைந்த அவர்கள் முசாபர்பாத், டோமல், ஊரி, பாரமுல்லா ஆகிய நகரங்களைப் பிடித்தனர். அக்டோபர் 26இல் பட்டாணியர்கள் படை காஷ்மீர் சமஸ்தான தலைநகர் ஸ்ரீநகரை நெருங்கியது. அதை எதிர்கொள்வதற்கு பதிலாக மன்னர் ஹரிசிங் விலையுயர்ந்த பொருட்களை எடுத்துக்கொண்டு தப்பி ஓடினார்.

மாறாக, ஸ்ரீநகரை பட்டாணியர் படை கைப்பற்றாமல் தடுக்க காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவும், தேசிய மாநாடு கட்சித் தலைமையும் இந்திய இராணுவ உதவியை நாடினர். படையெடுப்பாளர்களுக்கு மறைமுகமாக உதவிய மவுண்ட்பேட்டன் உதவி செய்ய மறுத்தார். காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தால் மட்டுமே படை அனுப்ப முடியும் எனக் கூறினார். இந்த நெருக்கடிக்குப் பிறகுதான் மன்னர் ஹரிசிங் இந்தியாவுடன் இணைய ஒப்புதல் தெரிவித்து கையொப்பமிட்டார். படைகளை விரட்ட உதவி கோரினார். இந்திய அரசு அக்டோபர் 27 அன்று ராணுவத்தை விமானம் மூலம் ஸ்ரீநகரில் இறக்கியது. பாகிஸ்தானின் பட்டாணிப் பிரிவு

படையுடன், பாகிஸ்தானின் இராணுவமும் நுழைந்து, இந்திய இராணுவத்துடன் மோதியது. இதில் கொடுமை என்ன தெரியுமா? இந்திய ராணுவத்திற்கும், பாகிஸ்தான் ராணுவத்திற்கும் தலைமை தாங்கி சண்டையிட்டது ஒரே நபர்தான். அவர்தான் அன்றைய பிரிட்டிஷ் ஜெனரல் ஆக்கின்லேக் என்பவர். ஊடுருவல் படைகளை காஷ்மீரின் பெரும் பகுதியிலிருந்து, இந்திய படைகள் விரட்டிவிட்டன. ஆனால் காஷ்மீரின் வடமேற்கு, வடக்கு, வடகிழக்குப் பகுதியிலிருந்து ஊடுருவல்காரர்கள் வெளியேறும் முன்பு ஐ.நா. மற்றும் மவுண்ட்பேட்டன் தலையீட்டால் போர் நிறுத்தம் ஏற்பட்டது. பாகிஸ்தான் படைகள் கைப்பற்றிய பகுதி "ஆசாத் காஷ்மீர்" என்ற பெயரில் இன்றுவரை பாகிஸ்தான் கட்டுப் பாட்டில் உள்ளது. நாம் அதை 'பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்' என்று சொல்கிறோம். இந்திய-பாகிஸ்தான் பிரச்சனையின் மையப்புள்ளி இந்த ஆசாத் காஷ்மீர்தான்.

காஷ்மீர் பிரச்சனை 1947 டிசம்பர் 31 அன்று ஐ.நா பாதுகாப்புக் குழுவின் பரிசீலனைக்கு இந்தியாவால் கொண்டு செல்லப்பட்டது. ஐ.நா. சபை கமிஷன் ஒன்றை அமைத்தது. அமெரிக்கா வும் - இங்கிலாந்தும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டன. 1948இல் வசந்த காலத்தில் போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. போர்நிறுத்த ஒப்பந்தம் 1949 ஜனவரி 1ல் அமலுக்கு வந்தது. காஷ்மீரில் ஐ.நா நிர்வாகத்தால் பொது வாக்கெடுப்பு நடத்தவும் அமெரிக்க முன்னாள் கடற்படை தளபதி செஸ்டர்நிமிட்ஸ் என்பவரை வாக்கெடுப்பு அதிகாரியாகவும் நியமித்து ஐ.நா தீர்மானம் போட்டது. வருடத்திற்கு 45,000 டாலர் ஊதியமும் அவருக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஐ.நா வின் இந்த முடிவை இந்தியாவும், தேசிய மாநாட்டுக் கட்சியும் நிராகரித்தன. இந்தியா, ஐ.நா. மூலமாக ஏவப்படும் அமெரிக்க சதியை நிராகரித்த பின்பு, 1950 மார்ச் 14இல் ஐ.நா பாது காப்புக் கவுன்சிலில் மற்றொரு தீர்மானம் போட்டது. அதில் காஷ்மீர் பிரச்சனை குறித்து பரிசீலித்து ஆலோசனை வழங்க சர் ஓவன் டிக்சன் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் ஆஸ்திரேலிய உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி, பின்னர் அமெரிக்காவில் ஆஸ்திரேலியத் தூதராக செயல்பட்டுவந்தார். 1950 மே 27 டிக்சன் இந்தியா வந்தார். இந்தியா-பாகிஸ்தான்தலைவர்களுடன்

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஜம்மு - காஷ்மீருக்கு மட்டுமே சிறப்பு அந்தஸ்து தரப்பட்டு விட்டதாகவும் ஆர்எஸ்எஸ்- பாஜக தரப்பில் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது போன்ற சலுகை வேறு சில மாநிலங்களுக்கும் தரப்பட்டுள்ளன. குறிப்பாக 371வது பிரிவின் கீழ் சில மாநிலங்களுக்கு விசேட சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.**

விவாதித்துவிட்டு 1950 செப்டம்பர் 15 தனது அறிக்கையை ஐ.நா.விற்கு அளித்தார். டிக்சன் ஐ.நாவிற்கு கொடுத்த அறிக்கை இதுதான்;

1. காஷ்மீர் சமஸ்தானம் முழுதும் வாக் கெடுப்பு நடத்தாமல், காஷ்மீர் பள்ளத் தாக்குப் பகுதியில் மட்டும் வாக்கெடுப்பு நடத்துவது. அதன்படி முடிவெடுப்பது.

2. காஷ்மீரின் வடபகுதியும், பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதியும் பாகிஸ்தானுடன் இணைக்கப்படும்.

இந்த ஆலோசனையை பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் ஒரு நிபந்தனையுடன் ஏற்றார். என்னவெனில் ஷேக் அப்துல்லா தலைமையிலான நிர்வாகத்தை நீக்கிவிட்டு வாக்கெடுப்பு நடத்தலாம் என்றார். டிக்சன், லியாகத் அலிகான் ஆகிய இருவரின் ஆலோசனை களையும் இந்தியா ஒட்டு மொத்தமாக நிராகரித்து, அமெரிக்க சூழ்ச்சியிலிருந்து தப்பியது.

### ஷேக் அப்துல்லா உறுதி

காஷ்மீர் மக்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள் தான். ஆனால் மதச்சார்பற்ற கொள்கையை உயர்த்திப்பிடித்தவர்கள். மனிதநேயப் பண்பாளர்கள். இதற்கு முதல் காரணம் ஷேக் அப்துல்லாவும், அவரின் தேசிய மாநாட்டுக் கட்சியும்தான். நிலப்பிரபுக்களையும், வெள்ளையர்களையும் எதிர்த்துப் போராடியவர் ஷேக் அப்துல்லா. இந்தியாவுடன் காஷ்மீர் இணைய வேண்டுமென உறுதியுடன் நின்றவர். அவருடைய ஒரு பேட்டி இது: "இந்தியாவுடன் நாங்கள் இணைய முடிவு செய்ததற்குக் காரணம் என்னவெனில், எங்கள் லட்சியமும், கொள்கை களும் இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கை

களுடன் இசைந்தது. பாகிஸ்தானும், நாங்களும் ஒரு நேர் கோட்டில் பயணிக்கமுடியாது. ஏனெனில் பாகிஸ்தான் சுரண்டும் கும்பல்"- (ஹிந்துஸ்தான் டைம்ஸ் - 1948 அக்டோபர் - 16).

இந்தியாவுடன் மன்னர் ஹரிசிங் இணைய ஒப்பந்தம் போட்டவுடன்,ஷேக் அப்துல்லா மாநிலத்தின் பிரதமராகவும், ஹரிசிங்கின் மகன் கரண்சிங் மாநிலத்தின் சார்-ஈ-செரிப் ஆகவும் நியமிக்கப்பட்டனர்.

காஷ்மீர் நிலைமை கருத்து வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்பட வேண்டுமென்ற ஐ.நா.வின் முடிவை நிராகரித்த அன்றைய பிரதமர் நேரு, காஷ்மீருக்கான அரசியல் நிர்ணயசபை அது பற்றி முடிவு செய்யும் என்று நெத்தியடி கொடுத்தார்.

**370வது பிரிவு ஏன் வந்தது?**

ஜம்மு-காஷ்மீருக்கான அரசியல் நிர்ணய சபை தேர்தல் 1951 செப்டம்பரில் நடைபெற்றது. தேசிய மாநாட்டுக் கட்சி 75 இடங்களில் வெற்றி பெற்றது. முதல் அரசியல் நிர்ணயசபைக் கூட்டம் **1951 நவம்பர் 5இல் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:**

1. ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கான அரசியல் அமைப்புச்சட்ட விதிகளை உருவாக்குவது.
2. மன்னராட்சி முறையின் எதிர்காலத்தை பற்றி முடிவு செய்வது.
3. நிலச் சீர்திருத்த திட்டங்களின்படி நிலங்களை இழந்த உடைமையாளர்களின் இழப்பீடு பற்றி பரிசீலிப்பது.
4. இந்தியாவுடன் இணைவது பற்றி முடிவு செய்வது. இதன்படி இந்தியாவுடன் இணைய அரசியல் நிர்ணயசபை முடிவு செய்தது. மன்னர் - நிலபிரபுக்களின் பரம்பரை உரிமை ரத்துசெய்யப்பட்டது. 1952இல் நேரு-ஷேக் அப்துல்லா உடன்பாடு கையெழுத்தானது.

காஷ்மீர் இணைப்பு ஒப்பந்தம் குறித்த, நேரு -ஷேக் அப்துல்லா ஒப்பந்தம் பின்வருமாறு கூறுகிறது:

1. இந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இராணுவம், வெளியுறவு, தகவல் தொடர்பு தவிர, மற்ற அனைத்தும் பிற மாநிலங் களைப் போல் இல்லாமல் காஷ்மீர் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
2. காஷ்மீர் மக்கள் இந்தியக் குடியுரிமை பெறுவர். அங்கு நிலையாக வசிப்பவர்களின் உரிமைகளை காஷ்மீர் சட்டமன்றம் தான் தீர்மானிக்கும்.
3. காஷ்மீர் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் அடிப்படை உரிமைகள் மட்டுமே, உச்சநீதி மன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவை.
4. இந்தியக் கொடியுடன், காஷ்மீர் மாநிலக் கொடியும் பயன்படுத்தப்படும்.
5. மாநில அரசின் வேண்டுகோளின் பேரிலோ, அல்லது அதன் சம்மதத்துடனோதான் இந்திய அரசு தலையிடும்.
6. காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தவிர, வேறு யாரும் அங்கு சொத்து வாங்க முடியாது.

இதுவே பிரதானமாக இடம்பெற்றது. இதை உறுதிப்படுத்துவதே இந்திய அரசியல் சட்டத்தின் 370 பிரிவு.

**370வது பிரிவின் படுகொலை**

இந்தியாவுடன் இணையவேண்டுமானால் காஷ்மீர் மக்களுக்கு தருவதாக இந்தியாவால் ஒப்புக்கொண்ட விசயங்களே, இன்றைக்கு மோடி அரசால் ரத்து செய்யப் பட்டுள்ள 370 வது ஷரத்து. ஆனால் அதில் கூறப்பட்டவை அனைத்தும் 1957 லிலேயே அப்பட்டமாக இந்தியாவால் மீறப் பட்டது.

1. இராணுவம், தகவல்தொடர்பு, வெளியுறவு மட்டுமே மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்ற நிலை மாற்றப்பட்டு, யூனியன் பட்டியலின்படி சட்டமியற்றும் மத்தியஅரசின் அனைத்து அதிகாரமும் காஷ்மீருக்கும் பொருந்தும் என்று 1957 குடியரசுத்தலைவர் புதிய உத்தரவைப் பிறப்பித்தார்.
2. ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற அதிகாரிகளை காஷ்மீரில் நியமனம் செய்ய முடியாது என்ற நிலைமாற்றப்பட்டு, மத்தியஅரசின்

அதிகாரிகள் நேரடியாக அங்கு நியமனம் செய்யும் முறை 1958இல் கொண்டு வரப் பட்டது.

3. மாநில அரசைக் கலைக்கும் 356, 357ஆவது பிரிவுகள் அங்கும் பொருந்தும் என்ற நிலை 1964இல் கொண்டுவரப்பட்டது. நெருக்கடி நிலை பிறப்பிப்பது போன்ற சட்டங்களும் அங்கு விரிவுபடுத்தப்பட்டது.

படிப்படியாக அக்கிரமங்களை மத்திய அரசு செய்த பின்னணியில்தான், 1983 முதல் பிரிவினைவாதம் அங்கு தலைதூக்கியது. மேற்படி பிரிவு 370இன் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சப்பட்டு, தற்போது மொத்தமாக படு கொலை செய்யப்பட்டுவிட்டது.

**370வதின் மூலாதாரமே அழிக்கப்பட்ட பிறகு, எஞ்சி இருந்தது மூன்று விசயங்கள்தான்.**

1. காஷ்மீருக்கான அரசியல் சட்ட விதிகள்.
2. காஷ்மீருக்கான தனிக்கொடி
3. வெளி மாநிலத்தவர் சொத்து வாங்கத் தடை.

மூன்றாவது விசயத்திற்காகத்தான் முதல் இரண்டையும் கையில் எடுத்துக்கொண்டு கூப்பாடு போட்டது காவிக்கூட்டம்.

இந்தியாவுடன் இணையும்போது சொல்லப் பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டன. மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகள் கவனிக்கப் படவில்லை. தொழில்வளம் பெருகவில்லை. வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டது. மத்திய அரசின் மீதான நம்பிக்கையின்மை பிரிவினைவாதத்திற்கு வழிவகுத்தது. இதனால் ஏற்பட்ட மோதல்களில் இதுவரை பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். ராணுவத்தின் அத்துமீறல்கள் நாள்தோறும் பெருகிவருகிறது. இத்தகைய பின்னணியில் காஷ்மீர் சிக்கித் தவிக்கிறது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு ஆதாரமாகவும், பலமாகவும் அமைந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவு அளித்த வாய்ப்பை பயன்படுத்தி சில மிகப்பெரிய சாதனைகளை, காஷ்மீரில் அன்றைய ஷேக் அப்துல்லா அரசாங்கம் அமல்படுத்தியது. அவை:

சுமார் 4 இலட்சம் ஏக்கர் நிலம், நில உடைமை யாளர்களிடமிருந்து எவ்வித இழப்பீடுமின்றி

**காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு ஆதாரமாகவும், பலமாகவும் அமைந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவு அளித்த வாய்ப்பை பயன்படுத்தி சில மிகப் பெரிய சாதனைகளை, காஷ்மீரில் அன்றைய ஷேக் அப்துல்லா அரசாங்கம் அமல்படுத்தியது**

பறிக்கப்பட்டு நிலமில்லாத ஏழைகளுக்கு அளிக்கப்பட்டது.

குத்தகை விவசாயிகள் தாம் உழும் நிலத்தி லிருந்து வெளியேற்றப்படுவது சட்டவிரோதமாக ஆக்கப்பட்டது.

ஒரு ஏழை தான் வாங்கிய கடனில் ஒன்றரை மடங்கு திருப்பி தந்திருந்தால் அக்கடன் முழுவதுமாக இரத்து செய்யப்பட்டது.

வசதி படைத்த நில உடமையாளர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியங்கள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்குள் இந்துக்கள் கணிச மாக வாழும் ஜம்மு பகுதிக்கும் பவுத்தர்கள் அதிகமாக வாழும் லடாக் பகுதிக்கும் சுயாட்சி உரிமை வழங்கப்பட்டது.

இவை காஷ்மீர் மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றது. காஷ்மீர் முஸ்லிம்கள் மட்டு மல்லாது இந்துக்களும், குறிப்பாக அடித்தட்டு இந்துக்களும் பயன் பெற்றனர்.

எனினும் இச்சட்டங்களை எதிர்த்து சங்பரிவார அமைப்பான ஜம்மு பிரஜா பரிஷத் கலகத்தில் ஈடுபட்டது. ஜம்மு பிரஜா பரிஷத் "ஒரே தேசம் ஒரே சட்டம்" எனும் கோஷத்தை முன் வைத்து 370ஆவது பிரிவை நீக்க வேண்டும் என கலகத்தில் ஈடுபட்டது. சுதந்திர இந்தியா வில் காஷ்மீர் வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே சங்பரிவாரம் 370ஆவது பிரிவுக்கு எதிராக கலகம் செய்தும், கூப்பாடு போட்டும் வந்துள்ளது என்பது தெளிவு.

**விசேட சட்டம் காஷ்மீருக்கு மட்டுமல்ல; வேறு மாநிலங்களுக்கும் உண்டு**

காலப் போக்கில் 370வது பிரிவின் முக்கிய அம்சங்கள் அகற்றப்பட்டன. ஆரம்பத்தில் இருந்த 370வது பிரிவு இன்று இல்லை. பெரும் பான்மையான உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன.

எனவே 370வது பிரிவு கணிசமான அளவிற்கு நீர்த்து போய்விட்டது. மீதமுள்ள வற்றையும் நீக்க வேண்டும் என்பதே சங்பரிவாரத்தின் கோரிக்கையாக இருந்தது.

அதுமட்டுமல்ல; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஜம்மு - காஷ்மீருக்கு மட்டுமே சிறப்பு அந்தஸ்து தரப்பட்டு விட்டதாகவும் ஆர்எஸ்எஸ்-பாஜக தரப்பில் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது போன்ற சலுகை வேறு சில மாநிலங்களுக்கும் தரப்பட்டுள்ளன. குறிப்பாக 371வது பிரிவின் கீழ் சில மாநிலங்களுக்கு விசேட சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில:

371 - **குஜராத்** மற்றும் மகாராஷ்ட்ராவிற்கு மட்டும் பொருந்தும்.

371A - **நாகாலாந்**திற்கு மட்டும் பொருந்தும்.

371B - **அசாமி**ற்கு மட்டும் பொருந்தும்.

371C - **மணிப்பூரு**க்கு மட்டும் பொருந்தும்.

371D - மற்றும் E **ஆந்திரா**விற்கு மட்டும் பொருந்தும்.

371F - **சிக்கிமி**ற்கு மட்டும் பொருந்தும்

371G - **மிசோராமு**க்கு மட்டும் பொருந்தும்.

371H - **அருணாசலப்** பிரதேசத்திற்கு மட்டும் பொருந்தும்.

371I - **கோவா**விற்கு மட்டும் பொருந்தும்.

இப்பகுதி மக்களின் நன்மைக்கும் அவர்களது தனிப்பட்ட கலாச்சாரம் பாது காக்கப்படவும் இத்தகைய விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, காஷ்மீருக்கு மட்டும் சலுகை வழங்கப்பட்டுள்ளது போல தவறான பிரச்சாரம் செய்யப்படுவது உண்மை அல்ல.

காஷ்மீரில் பயங்கரவாதம் தோன்றக் காரணம் யார்?

காஷ்மீர் மக்களின் கலாச்சாரம் "காஷ்மீரியத்" எனப்படும் விசேட பண்பு கொண்டதாகும். காஷ்மீர் மக்கள் இசுலாமில் சூஃபி பிரிவை தமது வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டவர்கள். சூஃபி பிரிவு அனைத்து மதங்களையும் சமமாக பாவித்து அர வணைப்புத் தன்மையுடன் இயங்கும் குணம்கொண்டது. அதனால்தான் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பொதுவாக மதக்கலவரம் நடப்பது கிடையாது. 1947ல் தேசமே மதக்கலவரத்தில் பற்றி எரிந்தது. ஜம்மு பகுதியில் கூட மதக்கலவரங்கள் நடந்தன. ஆனால் காஷ்மீர் பள்ளத்தாக்கில் மதக்கலவரம் நடக்கவில்லை.

370வது பிரிவு நீர்த்துப் போனது என்பது காஷ்மீர் மக்களிடையே அதிருப்தியை தோற்று வித்தது. தமது 'காஷ்மீரியத்' கலாச்சாரம் காக்கப்பட வேண்டும் எனக் கோரினர். இப் பிரச்சனையில் காஷ்மீர் மக்களின் மனங்களை வென்றெடுப்பது தேவையாக இருந்தது. ஆனால் தமது சுயநலனுக்காகவும் இந்திய அரசின் கண்மூடித்தனமான மேலாண்மையை காஷ்மீர் மீது திணிக்கவும் மத்திய அரசாங்கங்கள் ராணுவத் தீர்வை நாடின.

இதன் விளைவாக காஷ்மீர் மண்ணில் பயங்கரவாதம் தலை தூக்கியது. வரலாற்றில் முதல் முறையாக காஷ்மீர் பள்ளத்தாக்கில் மதக் கலவரங்கள் தோன்றின. பல காஷ்மீர் பண்டிட் குடும்பங்கள் உயிருக்கு பயந்து உடமைகளை இழந்து ஜம்முவில் அடைக்கலம் புகுந்தனர். சங்பரிவாரம் இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திட தீவிர முயற்சிகளை செய்தது.

மறுபுறத்தில் பாகிஸ்தான் இது தனக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பாக கருதியது. ஆப்கனில் இருந்து திரும்பிய தலிபான் பயங்கர வாதிகள் பலர் காஷ்மீருக்குள் அனுப்பப்பட்டனர். பயங்கரவாதத்தை ஒடுக்க இராணுவம் தனது நடவடிக்கைகளை அபரிமிதமாக அதிகரித்தது. இராணுவ நடவடிக்கைகள் குடிமக்களின் உரிமை மீறல்களுக்கு வித்திட்டது. எனினும் 2000க்கு பிறகு பயங்கரவாதம் மக்கள் ஆதரவை இழந்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி காஷ்மீர் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

காஷ்மீர் மக்களிடையே மனக்குமுறல்களும் அதிருப்தி மேகங்களும் அதிகமாகிக் கொண் டிருந்த பொழுதுதான் 2014ல் மோடி அரசாங்கம் அமைந்தது. காஷ்மீர் பிரச்சனையை தமது இந்துத்துவா நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவாக பயன்படுத்திக் கொள்ளும் வஞ்சகமான சூழ்ச்சியை மோடி அரசாங்கம் உருவாக்கியது. ஜம்மு பகுதியில் வாழும் இந்து மக்களும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழும் முஸ்லிம் மக்களும்

ஜென்ம விரோதிகள் போல உணரும் வகையில் மோடி ஆட்சி பிளவை உருவாக்கியது.

மோடி ஆட்சியில் ஊக்கம் அடைந்த சங்பரிவாரத்தினர் மேலும் அழுத்தமாக 370வது பிரிவை நீக்க வேண்டும் என கூச்சல் போடத் துவங்கினர். காஷ்மீரில் ராணுவ நடவடிக்கைகள் அதிகரித்தன. அத்துமீறல்களும் ஆழமாகின. ராணுவத்தால் இளைஞர்கள் தாக்கப்படுவதும் அவமானப்படுவதும் நாள்தோறும் நடக்கும் நிகழ்வாக மாறியது. காஷ்மீரில் மட்டும் 10 இலட்சம் ராணுவத்தினர் உள்ளனர் எனில் நிலைமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மோடி அரசாங்கம் எடுத்த சில நடவடிக்கைகள் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல அமைந்தது. அவை என்ன ?

- காஷ்மீர் மக்களுக்கு வீடுகள் மறுக்கப்பட்ட அதே வேளையில் பண்டிட்டுகளுக்கு ஆயிரக்கணக்கான தனி வீடுகள் உருவாக்கப் பட்டன.
- இராணுவத்தினருக்கு காஷ்மீர் பள்ளத் தாக்கில் நூற்றுக்கணக்கில் தனி வீடுகள்.
- 370வது பிரிவு மீது தொடரும் தாக்குதல்.
- இராணுவப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் எனும் கொடிய சட்டம்.
- வெளி மாநிலங்களில் படிக்கும் காஷ்மீர் மாணவர்கள் தாக்கப்படுதல்.
- சமூக ஊடகங்களில் காஷ்மீர் மக்களுக்கு எதிராக விஷம் கக்குதல் ஜம்மு - காஷ்மீரில் அமைதி உருவாக்கிட பாகிஸ்தானுடன் நடத்த வேண்டிய பேச்சுவார்த்தை சீர்குலைவு.

இத்தகைய நிகழ்வுகள் காஷ்மீர் மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.


1990இல் நடந்த வன்முறையில் அயல்நாட்டு பயங்கரவாதிகளின் பங்கு இருந்தது. ஆனால் பின்னர் நடக்கும் எதிர்ப்பு இயக்கங்களிலும் வன்முறைகளிலும் காஷ்மீர் இளைஞர்களின் பங்குதான் அதிகமாக இருந்தது. தங்களது எதிர்காலம் பொய்த்துப் போனதாலும் தங்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாடு உதாசீனப் படுத்தப்படுவதாலும் உண்டான கோபத்தின் காரணமாக வழி தவறும் இளைஞர்கள் பயங்கரவாதம் பக்கம் சாய்ந்தனர். மோடி அரசாங்கம் இவர்களை அரவணைத்துப் பேசி, திருத்துவதற்கு பதிலாக மேலும் பயங்கரவாதம் பக்கம் தள்ளிவிட்டது. இதனை தனது இந்துத்துவா நிகழ்ச்சி நிரலுக்கு ஆர்எஸ்எஸ்- பாஜக கும்பல் பயன்படுத்திக் கொண்டது.

**(இணையத்திலிருந்து)**

## *வாசகர்களிடமிருந்து...*

முனைவர் இராமசாமி எழுதிய “இசை நாடகத்துறைகளில் பெரியார் இயக்கத்தின் கலகங்கள்” கட்டுரை பல வரலாற்றுத்தகவல்களை விவரிக்கிறது. பார்ப்பனரல்லாத கலைஞர்களின் சுயமரியாதைக்கு பெரியார் இயக்கம் எவ்வளவு கவலைப்பட்டிருக்கிறது என்பதை உணர வைத்தது. 1930இல் ‘குடிஅரசு’ ஏட்டில் பார்ப்பனரல்லாத ‘சங்கீத வித்வான்’களின் பெயர்ப் பட்டியலையே பெரியார் வெளியிட்டிருக்கிறார். “சங்கீத மாநாட்டை சுயமரியாதை இயக்கம் நடத்துவதற்குக் காரணம் கலையின் மேன்மையை உணர்த்துவதற்காக அல்லவென்றும் பார்ப்பனரல்லாத கலைஞர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்பதே நோக்கம் என்றும் பெரியார் தெளிவுபடுத்துகிறார்.

சுயமரியாதை இயக்கம் சார்பில் நடந்த முதல் நாடகமே ‘தீண்டாமை’ ஒழிப்பை முன் வைத்து தான் என்பது மற்றொரு முக்கியமான செய்தி. செங்கல்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாடு இரண்டு நாளில் முடிவடைந்து விட்டது, அது பலருக்கும் ஏமாற்றமாகி விட்டதால் இரண்டாவது சுயமரியாதை மாநாட்டை ஈரோட்டில் ஒரு வார காலம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக ‘குடிஅரசு’ வெளியிட்ட செய்தி வியப்பூட்டுகிறது. மாநாடுகளை மக்களிடம் சமுதாயப் புரட்சிக் கருத்துகளைப் பரப்பிட பெரியார் எப்படிப் பயன் படுத்தியிருக்கிறார் என்பதை நினைக்கும்போது உண்மையில் மெய் சிலிர்க்கிறது.




**– வைத்தீஸ்வரி, கோவை**

# கும்பல் கொலைக்கு தனிச்சட்டம் கொண்டு வர மோடி தயங்குவது ஏன்?

**பயங்கரவாதத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று நடுவண் ஆட்சி கடும் ஒடுக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்து சமூக செயல்பாட்டாளர்களையும் சிறுபான்மை மக்களையும் குறி வைக்கிறது.**

வடமாநிலங்களில் 'பசு' மாட்டின் பெயராலும் 'தீண்டாமை' ஜாதி வெறியினாலும் தலித் சிறுபான்மை மக்களை கும்பலாகத் திரண்டு அடித்தே சாகடிக்கிறார்கள். (Lyn ching) இதை ஒரு பயங்கரவாதமாகக் கருதுவதற்கு மோடி ஆட்சி தயாராக இல்லை. வெறுப்பின் வெளிப்பாடான இத்தகைய பயங்கரவாதம் ஒரு காலத்தில் கருப்பின மக்களுக்கு எதிராக அமெரிக்காவில் வெள்ளை நிற வெறியர்களால் நடத்தப்பட்டது. நிறவெறிக் கும்பல்களால் அடித்தே கொல்லப்படும் இந்த பயங்கரவாதத்தைக் குற்றமாக அங்கீகரிக்க அமெரிக்காவுக்கு 100 ஆண்டுகள் தேவைப்பட்டன.1918ஆம் ஆண்டிலிருந்து இதைக் கிரிமினலாக்கும் மசோதாக்கள் வந்த போதெல்லாம் அமெரிக்க காங்கிரஸ் நீர்த்துப் போகச் செய்து அமுலாக்காமல் தடுத்து விட்டது. இறுதியாக 2018ஆம் ஆண்டு தான் அனைத்து அமெரிக்க மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடிய சட்டமானது. நிறவெறி வெளிப்பாட்டின் உச்சகட்ட வடிவமான இந்த கும்பல் வன்முறை ஒரு பயங்கரவாதச் செயல் என்கிறது அமெரிக்காவின் சட்டம்.

இங்கே என்ன நடக்கிறது? மதவெறி ஜாதி வெறி கும்பல் ஒருவரை அடித்து சித்திரவதை செய்யும் காட்சிகளை சமூக வலை தளங்கள் வழியாகப் பரப்பி அதை வீரச் செயலாகக் கொண்டாடும் மன நிலையில்தான் 'புண்ணிய பாரதத்தின்' - 'ஆன்மிக சீலர்கள்' இருக்கிறார்கள். இதைவிட ஒரு நாட்டுக்கு வேறு அவமானம் இருக்க முடியாது. இத்தகைய மனிதர்களை அடித்துக் கொல்லும் கும்பல் வன்முறைகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அண்மையில் உச்சநீதிமன்றம் நடுவண் அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்டது. பகுஜன் சமாஜ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குன்வர் டேனிஷ் அலி என்பவர், நாடாளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பியபோது ஆளும் பா.ஜ.க.வினர் கூச்சல் போட்டு அவரது குரலை ஒடுக்கி விட்டனர். இது தான் பா.ஜ.க.வின் 'பயங்கரவாத ஒழிப்பு' போலும்.

உ.பி. மாநில சட்ட ஆணையம், கடந்த ஜூன் மாதம் இது குறித்து ஒரு மசோதாவை தயாரித்து உ.பி. மாநில அரசுக்கு சட்டமாக்கும்படி பரிந்துரைத்தது. இந்தியாவிலேயே மதவெறியர்கள் அடித்துக் கொல்லும் கும்பல் பயங்கரவாதத்துக்கு எதிராக முதன்முதலாக கடந்த 2018ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வந்த ஒரே மாநிலம் மணிப்பூர் தான். மணிப்பூர் சட்டத்தின் அடிப்படையிலேயே உ.பி. சட்ட வாரியமும் இந்த மசோதாவை தயாரித்திருந்தது. இத்தகையக் குற்றங்களைத் தடுக்காது பாதிக்கப்பட்டவருக்கு உரிய பாதுகாப்பு வழங்காத காவல்துறை அதிகாரிகளும் குற்றவாளிகளே என்று மணிப்பூர் சட்டமும் உ.பி. மாநில சட்ட வாரியத்தின் மசோதாவும் கூறுகிறது. உரிய நடவடிக்கை எடுக்காத மாவட்ட ஆட்சி அதிகாரிகளையும் குற்றவாளியாக்கப்பட வேண்டும் என்கிறது இந்த மசோதா. பாதிக்கப்பட்டவருக்கு உரிய இழப்பீட்டை 30 நாட்களில் வழங்கத் தவறிய அரசின் தலைமைச் செயலாளரும் குற்றவாளி என்கிறது மணிப்பூர் சட்டம்.

ம.பி.-இராஜஸ்தான் மாநில காங்கிரஸ் ஆட்சிகள் இதற்கான மசோதாக்களை அறிமுகம் செய்திருக்கின்றன. இதற்காக நாடாளுமன்றக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு உள்துறை அமைச்சர் அமித்ஷா, அதன் தலைவராக உள்ளார். கும்பல் வன்முறைகளால் நடக்கும் கொலைகளுக்கு காவல் துறை அதிகாரிகளையும் மாவட்ட ஆட்சி நிர்வாகத்தையும் பொறுப்பாக்கி குற்றவாளிகளாக்கும் ஒரு மசோதாவைக் கொண்டு வர அமித்ஷா எப்படி முன் வருவார்? மாநில சட்ட ஆணையம் தயாரித்துள்ள இத்தகைய ஒரு மசோதாவை உ.பி. மாநில முதல்வர் ஆதித்யநாத் எப்படி ஏற்பார்? அதிகாரிகளையும் குற்றவாளிகளையும் தப்ப விட்டு மதஜாதி வெறிக் கும்பல் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான ஓட்டைகள் நிறைந்த ஒரு சட்டத்தை வேண்டுமானால் இவர்கள் உச்சநீதிமன்றத்தின் கட்டாயத்துக்காக கொண்டு வரக் கூடும்.

**'இரா'**



# இசை நாடகத் துறைகளில்

# பெரியார் இயக்கத்தின் கலகங்கள் [2]

## "நாடகங்களில் கருத்துகளே வேண்டும்; இசையைத் தவிர்க்க வேண்டும்" என்றார் பெரியார்

முனைவர் வே. இராமசாமி

***இசை நாடகத் துறையில் பெரியார் இயக்கம் நடத்திய கலகம் குறித்து முனைவர் வே. ராமசாமி எழுதிய நூலிலிருந்து இரண்டாம் பகுதி இது.***

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதி, குத்தூசி குருசாமி இரணியனாக நடித்த நாடகத்தில் பெரியாரின் தலைமை உரை. நாடகம் குறித்த அவரது ஆழமான சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதி, குத்தூசி குருசாமி இரணியனாக நடித்த நாடகத்துக்கு தலைமையேற்று சென்னையில் பெரியார் பேசினார்.

பெரியார் தன் தலைமையுரையில்,

"..... இங்கு சங்கீத வித்வான்களே நாடக மேடையைக் கைப்பற்றிக் கொண்டதானது, நாடகக் கலையைச் சங்கீதம் அழித்துவிட்டது என்றும், மக்களது நாடகாபிமானமும் சங்கீதத்தில் திருப்பப்பட்டு விட்டது என்றும்தான் கருத வேண்டும். நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும், தற்கால உணர்ச்சிக்கும் தேவைக்கும் சீர்திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழமையைப் பிரச்சாரம் செய்யவும், மூட நம்பிக்கை, வர்ணாச்சிரமம், ஜாதி வித்தியாச உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, பணக்காரத் தன்மை முதலிய விஷயங்களைப் பலப்படுத்தவும் அவைகளைப் பாதுகாக்கவும் தான் நடிக்கப் படுகின்றதே ஒழிய வேறில்லை... இப்படிப்பட்ட கதைகள் ஒழிக்கப்பட வேண்டும். சுயமரியாதையும் சீர்திருத்த வேட்கையுமுள்ளவர்கள் அதை நடிக்கக் கூடாது.

இரணியன் கதையில்வீர ரசம், சூட்சித் திறம், சுயமரியாதை ஆகியவைகள் விளங்கினதோடு பகுத்தறிவுக்கு நல்ல உணவாகவும் இருந்தது. ஆனால்சில விஷயங்களில் தலை கீழ் மாறுதலாகவும் கடின வார்த்தையாகவும் காணலாம். சீர்திருத்த நாடகம் என்றாலே மாறுதல் இருந்து

தான் தீரும். மாறுதலுக்கு அவசியமானதும் பதிலுக்குப் பதிலானதுமான வார்த்தைகள் இருந்தால்தான் பழமை மாற சந்தர்ப்பம் ஏற்படும். அப்படி இல்லாமல் இருந்தால் தகுந்த மாறுதல் ஏற்பட இடமிருக்காது.... நிற்க, இச்சரித்திரம் உண்டாக்கிய தோழர் புதுவை பாரதிதாசனை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். அவர் உணர்ச்சியுடன் உண்டாக்கி இருக்கிறார். இன்னமும் இதுபோல் பல நாடகங்கள் உற்பத்தி செய்ய வேண்டும். பாத்திரர்களுக்குக் கற்பித்த (இயக்கிய) தஞ்சைத் தோழர் டி.என்.நடராஜன் அவர்களின் ஆசிரியத் தன்மை மிகவும் போற்றத் தக்கது. அவர் 20 வருஷமாய்ப் பொதுநலச் சேவையில் இருந்து வருகிறவர். ஜெயிலுக்கும் சென்றவர்.

அவர்கள் இருவருக்கும் இந்த இரண்டு பதக்கங்களைச் 'சீர்திருத்த நாடக சங்க'த்தார் சார்பாய்ச் சூட்டுகிறேன். ... நாடகத்துக்கு இவ்வளவு தோழர்கள் விஜயம் செய்து கவுரவித்ததற்கும் நாடகப் பாத்திரர்களுக்கும் சபையாருக்கும் ஊக்கமளித்ததற்கும் நான் நன்றி செலுத்துகிறேன்' (பகுத்தறிவு வார இதழ், 16.9.1934) என்று பழைமைக்கு எதிரான கலகக் குரலை, நாடக அரங்கேற்றத்தில் முன்வைக்கிறார். இது தான் திராவிட இயக்க நாடக நிகழ்த்தல் பற்றி, ஒரு நாடக அரங்கேற்றத்தின்போது வழங்கப்பட்ட முதல் விமர்சனப் பதிவாய் இருக்கிறது.

அதன்பின், இந்நாடகத்தின் இரண்டாவது நிகழ்வு ஆறு மாதங்கள் கழித்து, 'ஜெ.என். ராமநாதன் ஞாபகார்த்த நிதிக்காக, கனம் மந்திரி பி.டி.ராஜன் அவர்கள் ஆதரவிலும் முன்னிலையிலும் சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தார் 20.3.1935 புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சென்னை இராயல் தியேட்டரில் நடித்திருக்கிறார்கள். இதில் இரணியனாக நடித்தவர் எஸ். குருசாமி, பி.ஏ., (குத்தூசி குருசாமி), பிரகலாதனாக நடித்தவர் கே.எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.; கங்காதரன் டி. சம்பந்தம்; சேனாதிபதி எஸ். ரங்கநாதன்; கஜகேது டி.என். ராமன்; ரிஷி சி. தங்கராஜ்; லீலாவதி கே. கிருஷ்ணசாமி; சித்ரபானு எம்.எஸ். முத்து. டிக்கட்டு விலை ரூபா 2,1, அணா 8, 4, 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு அரை சார்ஜ். நாடக தினத்தன்று காலை 10 மணி முதல் கொட்டகையில் டிக்கட்டுகள் கிடைக்கும்' என்பதாக விளம்பரம் செய்திருந்தனர். (குடிஅரசு, 03.03.1935)

> **"எனக்கும் இரணியனாக வேஷம் போடலாமா என்ற ஆசை என்னை அறியாமல் ஏற்படுகிறது. ஆனால் தாடி இருக்கிறதே என்று யோசனையைக் கைவிட்டேன்."**
>
> **- பெரியார்**

'இரணியன்' நாடகத்தின் மூன்றாவது நிகழ்வு, இரண்டாவது நிகழ்விற்குப் பின் $1\frac{1}{4}$ ஆண்டுகள் கழித்து, 1936, ஜூலை 4 இல் வாணியம்பாடிக்கு அடுத்த அம்பலூரில் அம்பலூர் நடன விலாசத்தில் பாரதி சபையாரால் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தலைமையில் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் சரித்திரத்தை தோழர் எஸ்.எ.அர்ஜூனன் அவர்கள் உபாத்திமையின் கீழ் நடத்திக் காட்டியுள்ளார்கள். அம்பலூரில் நடன விலாசத்தில் சேலம் ஜில்லா போர்டு மெம்பரும், துவரப் பள்ளி ஜமீந்தாருமான தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் தோழர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் 'நமது முன்னேற்றம்' என்பது பற்றிப் பேசியிருக்கிறார். அதற்கான அறிவிப்பில், 'தோழர்கள் ஊ.பு.அ. சௌந்திரபாண்டியன், சி.டி. நாயகம், வி.வி. ராமசாமி, பொன்னம்பலம் முதலியவர்களும் வரக்கூடும். நாடகத்திற்கு மாத்திரம் டிக்கெட்டுகள் உண்டு. ஆன போதிலும் வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்குச் சாப்பாடு வசதி செய்து கொடுக்கப்படும். சுற்றுப் பக்கப் பிரமுகர்கள் யாவரும் வந்து கேட்டுக் களிக்க வேண்டுகிறேன்' என்று எஸ். அர்ஜூனன்/அம்பலூர்/11.6.1936 என்று விளம்பரப்பட்டுள்ளது. இந்த நாடகத்திற்கான விளம்பரம், 14.6.1936, 21.6.1936, 28.6.1936 என்று மூன்று வாரங்களாகத் தொடர்ந்து 'குடிஅரசு' இதழ்களில் பெரிய அளவில் கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

அம்பலூரில் நடந்த இந்நாடக முடிவில் பெரியார் பேசும் போது, 'இன்று நாடகம் நடத்திய தோழர் அர்ஜூனன் வெகு வீரமுடன் நடந்து கொண்டதைக் காண எனக்கும் இரணியனாக வேஷம் போடலாமா என்ற ஆசை என்னை அறியாமல் ஏற்படுகிறது. ஆனால் தாடி இருக்கிறதே என்று யோசனையைக் கைவிட்டேன். நாடகங்கள் எல்லாம் குறைந்தது 2 மணி நேரத்தில் முடிவுபெற வேண்டும். மத்தியில் பாட்டுக்களைக் கொண்டு வந்து நுழைப்பதால் கதையின்

ஸ்வாரஸ்யம் குறைந்து போகிறது; உணர்ச்சி மத்தியில் தடைப்படுகிறது. நாடகங்களில் இரண்டு விதமுண்டு. ஒன்று பாட்டாக நடத்திக் காண்பிப் பது; மற்றொன்று வசன ரூபமாய் நடத்திக் காண்பிப்பது. வசனரூபமாய்க் காண்பதைத் தான் மக்கள் விரும்புகிறார்கள். பல உபந்யாசங்கள் செய்வதை விட இத்தகைய நாடகம் ஒன்று நடத்தினாலும் மக்களுக்கு உணர்ச்சியையும் வீரத்தையும் மனமாற்றத்தையும் ஏற்படுத்தி ஓர் கவர்ச்சியை உண்டாக்குகிறது. நம் எதிரில் நடந்த மாதிரிதான் ஆதியில் இரணியன் நாடகம் இருந்திருக்க வேண்டும். ஆனால்அதைப் பார்ப்பனர்கள் தமக்குச் சாதகமாகத் திருத்தி உபயோகப் படுத்திக் கொண்டார்கள். பழைய நாடகங்களை நாம் சீர்திருத்திப் புதிய முறையில் நடத்திக் காண்பிக்க வேண்டும். நாடகங்களில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

இந்தப் பழைய நாடகங்கள் மக்களை மூடர் களாகவும், அர்த்தமற்ற கொள்கை உடையவர் களாகவும் செய்து இருக்கின்றன. நாடகத்தின் மூலம் அறிவு வளர இடமிருக்கின்றது. ஆகையால் நாடகங்களைப் புதிய முறையிலே திருத்தி மக்களுக்குப் பயன்படும்படிச் செய்ய நாடகாசிரியர்கள் முன்வர வேண்டும். வெறும் சங்கீதமும் பாட்டும் வேண்டியதில்லை. கருத்து இருந்தால் போதும். இந்த நாடகம் சென்னையில் இரண்டு முறை காண்பிக்கப்பட்டது. இந்த மாகாணத்தில் இதுவே மூன்றாவது முறை. இனி இம்மாதிரி நாடகங்களை நாடெங்கும் நடத்தினால், மக்கள் உணர்ச்சி பெற்று மூட நம்பிக்கைகளையும் அர்த்தமற்ற கொள்கைகளை யும் உடைத்தெறிவார்கள். தோழர் அர்ஜூனன் தலைமையில் நடந்த இந்த நாடகத்தை தான் பாராட்டுகிறேன்' என்று பேசியிருக்கிறார். (குடிஅரசு - 19.07.1936 பக்.5)

நாடகம் அரங்கேறி இரண்டரை ஆண்டு களில் மூன்றாவது நிகழ்வை மட்டுமே சந்தித் திருந்த இந்த நாடகத்தின் வீச்சு 1948இல் வேறு விதமாயிருந்தது, தடையைச் சந்திக்க வேண்டி யிருந்தது என்பதை வரலாறு சுட்டிக்காட்டியிருக் கிறது. அதாவது திராவிட இயக்கத்தின் வளர்ச்சியின் விகிதத்தை! இது, நாடகக் கலையில் திராவிட இயக்கத்தின் முதற்கலகம்! இதற்கான வித்து 1934இல் கலகக்காரர் தோழர் பெரியாரின் தலைமையில் நடைபெற்று இருக்கிறது.

அந்த வகையில் இன்னுமே குறிப்பிட வேண்டிய மிக முக்கிய ஒன்று, 25.8.1935 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் பக்.15இல் திரு அ.இரத்தின சபாபதி எழுதியிருக்கிற 'நாடக மேடைகள் நமக்குப் பயன்பட வேண்டுமானால்..?' எனும் கட்டுரையாகும். கொள்கையைப் பிரச்சாரம் செய்வதற்கு அமைப்பின் ஒரு பகுதியாக நாடகங்கள் அமைய வேண்டியதன் தேவையை ஒரு வேலைத் திட்டமாகவே அக் கட்டுரையானது கூறிச் சென்றிருக்கிறது. அக்கட்டுரையின் முக்கியப் பகுதிகளை அப்படியே தருவதுகூட தவறில்லை என்று கருதுகிறேன். அது ஒரு பதிவு! கட்டுரை இப்படிச் செல்கிறது:-

'தமிழ்நாட்டில் நாடக மேடைகள் என்ன கருத்துடன் யாரால் ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் சரி, அதன் தற்கால நிலைமை எவ்வாறிருந்தாலும் சரி, சீர்திருத்தவாதிகளாகிய நாம், நாடக மேடைகளைக் கைப்பற்றி நமது கொள்கைகளை நாடகங்கள் ரூபமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதும் அதனால் பெரும் பயன் விளையுமென்பதும் நம்மவர்களிற் சிலருக்கு வெகுநாட்களாகவே இருந்து வரும் அபிப்பிராயங்களாகும். எந்தக் கொள்கையைப் பொது மக்களிடையில் பரப்ப வேண்டுமானாலும், அதற்குப் பிரச்சாரம் அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. அம்மாதிரி பிரச்சாரம் செய்வதற்கான வசதிகள் அல்லது மார்க்கங்கள், பொதுக் கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்தல்; துண்டுப் பிரசுரங்கள் பல வழங்குதல், பத்திரிகைகள் வெளியிடுதல்; நாடகங்கள், சினிமாக்கள் முதலியவைகளில் கொள்கைகளைப் புகுத்துதல் முதலியனவேயாம். இவற்றுள் துண்டு பிரசுரங்கள், மேடைப் பிரசங்கங்கள், பத்திரிகைகள் முதலிய எல்லாவற்றையும்விட நாடகங்கள், சினிமாக்கள் முதலியவற்றின் மூலமாய், கொள்கைகளை மக்களிடையே பரப்புவது பெரிதும் சுலபமானதும், கோரும் நோக்கத்தை விரைவில் திருப்திகரமான முறையில் கிடைக்கச் செய்யும் சாதனமாகுமென்பதை நம்மவர் ஓரளவிற்கு உணர்ந்திருக்கிறார்களென்றா லுங்கூட, நடைமுறையில் கொண்டுவருவதில் போதிய அளவு சிரத்தை எடுத்துக் கொள்ள வில்லை என்பதுதான் எனது அபிப்ராயம். நான் இவ்வாறு துணிந்து வெளிப்படையாகக் கூறுவதற்காகத் தோழர்கள் என்னை மன்னிப்பார்

களாக. நமது கொள்கைகளைப் பொது மக்களிடையே பரப்புவதற்கு நாம் தமிழ் நாடகமேடையைக் கைப்பற்ற வேண்டுமென்னும் கருத்தை நான் பலமுறைப் பொதுக் கூட்டங் களிலும், தனித்தனி நபர்களிடத்திலும் பேசியிருக் கிறேன். பத்திரிக்கைகளிலும் பலமுறை எழுதியிருக்கிறேன்.

என்னைப் பொருத்தமட்டில் தனிப்பட்ட முறையில் இவ்வகையில் ஏதோ முயற்சி செய்தே னென்றாலுங்கூட அம்முயற்சிகள் நல்ல பயனை யளிக்கவில்லை. காரணம் நம் இயக்கத் தோழர்கள் இத்துறையில் செயலாற்ற முன்வராததேயாம் என்றாலும், சென்னை, தங்கவயல் போன்ற இரண்டோரிடங்களில் சீர்திருத்த ஸ்தாபனங்கள் அமைத்து ஓரளவிற்குத் தொண்டாற்றி வருவது சற்று ஆறுதலளிக்கிறது. இப்பொழுது நாகப் பட்டினத்திலும் திருச்சியிலும் நம் தோழர்கள் சீர்திருத்த நாடக சபைகள் அமைத்துத் தொண் டாற்ற வேண்டுமென்று தீர்மானித்திருப்பது, இன்னும் சற்று உற்சாக மூட்டுவதாக இருக்கிறது. நாகை, திருச்சி நண்பர்களைப் பின்பற்றி மற்ற இடங்களிலும் வசதிகள் வாய்க்கப் பெற்றுள்ள நண்பர்கள் சீர்திருத்த நாடகங்கள் பல நடத்த முற்படுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

நாம் இவ்வாறு நாடகமேடைகளைக் கைப்பற்றுவோமானால், நாம் இரண்டு காரியங்களை ஏக காலத்தில் வெற்றிகரமாகச் செய்யக் கூடும் என்பதைத் தோழர்கள் கவனிக்க வேண்டும்.

முதலாவது; சீர்திருத்த நாடகங்களை நாம் நடத்த முற்படுவதோடு, தற்காலம் நடைபெறும் நாடகக் கதைகளிலும் அறிவிற்குப் பொருந்தாத வற்றை அவ்வப்போது நாம் கண்டிப்பதால், அக்கதைகளுக்கு ஒரு பலத்த எதிரிடையான அபிப்ராயத்தைப் பொது மக்களிடையில், சிறப்பாகப் படித்தவர்களிடையில் உண்டு பண்ணக்கூடும். இரண்டாவது; நம் கொள்கைகள் கொண்ட நாடகங்களை நடத்துவதால் வெகு எளிதாகப் பாமர மக்களுக்கும் கொள்கைகளை விளங்க வைக்கலாம்; நடிப்புக் கலையும் சீர்படும். நமது கொள்கைகள் கொண்ட நாடகங்களுக்கு நாட்டில் ஆதரவு கிடைக்காதென்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. இது சீர்திருத்தக் காலம். நாம் நாடகங்களை நடத்தினாலும் நடத்தா

**மூச்சு விடக்கூட இடமில்லாமல்
பாட்டுகள் பாடினால் அதற்கும் பெயர்தான்
நாடகம் என்ற எண்ணம் இருக்கிறதே;
அது தொழில் நடிகர்களிடம் மட்டுமல்லாமல்,
அமெச்சூர் நடிகர்களிடமும் தொத்திக்
கொண்டிருக்கிறது.**

விட்டாலும் தற்கால உலகம் என்னவோ சீர்திருத்தத்தையும் நாகரீகத்தையும் நோக்கித் தான் போய்க் கொண்டிருக்கும்.

இனி வருங்கால உலகமும் இம்முறையில் இன்னும் வேகமாகச் செல்லுமே தவிர, இராம ராஜ்ய காலத்திற்குத் திரும்பிச் செல்லுமென்று எண்ணுவது பைத்தியக்காரத்தனமாகும். எனவே இன்றைக்கு நம் நாடகங்களுக்கு வரவேற் பில்லாததுபோல் தோன்றினாலும் எதிர்காலத்தில் நமக்கு நல்ல ஆதரவு கிடைப்பது திண்ணம். இதனை மனதில் வைத்துக் கொண்டு நாம் வேலை செய்வோம். இவ்வழியாகவே நாம் சென்று கொண்டிருப்போமானால், சினிமா உலகமும் நம்மிடம் வந்தே தீரும். இப்பொழுதே சந்து பொந்துகளிலுள்ள புராணக் கதைகளை யெல்லாம் கட்டிப் பிடித்திழுத்து வந்து பேசும்படக் காட்சிகளைக் குட்டிச் சுவராக்கித் தீர்த்து விட்டார்கள். பாவம்! குசேல முனிவர் கூட இனி பேசும்படத் திரையில் வந்து, தனது உடம்பிலுள்ள எலும்புகளையெல்லாம் ‘எண்ணிக் கொள்ளுங்கள்’ என்று காட்டிக் கொண்டு நிற்கப் போகிறார்.

இனி படக்காட்சிகளுக்குப் புதிய நாவல்களைத்தான் தேட வேண்டும் என்னும் அவசியம் வெளிப்பட்டு, அவ்வாறே நாவல்களும் பேசும் படக்காட்சிகளாக மாறி வருகின்றன. ஆதலின் இதனையே நாம் ஏற்ற சமயமாகப் பயன்படுத்திக் கொண்டு சீர்திருத்த நாடகங்கள் பலவாகப் பெருக்கி நடத்த முற்படுவோம். இந்த நாடகங்களையும் தயவுசெய்து பாடல்களாக ஆக்கிவிடாதீர்கள். மூச்சு விடக்கூட இடமில்லாமல் பாட்டுகள் பாடினால் அதற்கும் பெயர்தான் நாடகம் என்ற எண்ணம் இருக்கிறதே; அது தொழில் நடிகர்களிடம் மட்டுமல்லாமல், அமெச்சூர் நடிகர்களிடமும் தொத்திக் கொண்டிருக்கிறது. அத்தொத்து நோய்க்கு நாமும்

இடந்தர வேண்டாம். நம்முடைய முயற்சியில் ‘உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடியாக நாடகமேடையை அமைப்போம்’.

முடிவாக, தோழர்களுக்கு விஷயத்தைக் கூறி இதனை முடிக்கிறேன். நாட்டின் பற்பல இடங்களிலும் தனித்தனியாக நாடக ஸ்தாபனங்களை நாம் அமைத்துக் கொண்டாலும்கூட நமக்கென்று ‘ஒரு பொது சீர்திருத்த நாடக ஸ்தாபனம்’ வேண்டும். அது நல்ல முறையில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அதன்மூலம் நல்ல கவர்ச்சிகரமான சீர்திருத்த நாடகங்களை எழுதி வெளியிட வேண்டும். அந்நாடகங்களுக்கு இன்றியமையாத உடைகளையும், சீன்களையும் இன்னோரன்ன பிறவற்றையும் தயார் செய்ய வேண்டும். இம்முயற்சியில் வெற்றி பெறும் நாடகங்கள் பின்னர் பேசும் படக்காட்சிகளாக மாறி உலவ ஏதுவுண்டாகும். இதற்கான ஒரு மத்திய ஸ்தாபனத்தைக் கூட்டுறவு முறையில் (லிமிடெட் கம்பெனியாக) அமைத்து நடத்தலாமென்று எண்ணுகிறேன்.

பத்து ரூபாய்கள் கொண்ட பங்குகளாக 1000 பங்குகள் சேர்த்து அதனை மூலதனமாக வைத்து தக்க முறையில் நடத்து வோமானால், நமக்கு நல்ல பயன் ஏற்படுமென்பது நிச்சயம். இதனைத் தமிழர் நாட்டிலுள்ள நம் பொறுப்புள்ள தோழர்கள் கவனிக்க வேண்டு கிறேன்’ - ‘இரணியன்’ நாடகத் தலைமையுரையில் பெரியார் பேசியதன் விரிவாக்கமாயும் வேலைத் திட்டமாயும் இது அமைந்திருப்பது கவனத்தில் கொள்ள வேண்டியது.

அங்கங்கு பல குழுக்கள் சீர்திருத்த நாடகங்களைத் தொடர்ச்சியாய் நிகழ்த்தியுள்ள பதிவுகள் குடிஅரசு இதழ்களில் காணப்படுகின்றன. புதுவைக்கடுத்த முத்தியால்பேட்டையில் 27.1.1935 அன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 9.30 மணிக்கு ‘பாலாமணி அல்லது பார்ப்பன விதவை’ என்னும் சுயமரியாதை நாடகம் நடத்தப்பட்டிருக்கிறது. அதற்கு, ஆண்களும் பெண்களுமாக சுமார் 300 பேர் விஜயஞ் செய்திருந்ததாகவும் இதை ஏற்பாடு செய்த தோழர்கள் எஸ்.கே. கோவிந்தசாமி, கே. நடேசன், ஆறுமுகம் என்பதாகவும் குறிக்கப்பட்டுள்ளது (குடிஅரசு, 10.02.1935, பக்.18).


தோழர் ஈ.வெ.ராமசாமி தலைமையில், ‘ஆனந்த கிருஷ்ணன் அல்லது ஆருயிர்க் காதலர்’ எனும் சீர்திருத்த நாடகம், காரைக்குடி ஷண்முக விலாஸ் எலெக்ட்ரிக் தியேட்டரில் 01.05.1935 புதன் கிழமை இரவு 10.30 மணிக்கு ஆனந்த நாடக சபையின் ஆதரவில் நடைபெறும். இந்நாடகத்திற்கு தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள் (குடிஅரசு, 28.04.1935, பக்.15) என்பதாயும், தலைமையேற்றுப் பேசுகையில், ‘இத்தகைய நாடகங்களே இனி நம் நாட்டில் அதிகம் பரவ வேண்டுமென்றும் பொது ஜனங்களும் இத்தகைய நாடகங்களை அவசியம் ஆதரிக்க வேண்டுமென்றும்’ விரிவாகப் பேசியிருக்கிறார் அவர்! நடிகர்களுக்கு நண்பர்கள் மோதிரங்கள் பரிசளித்திருக்கிறார்கள்.

பிறகு தோழர் எஸ். நீலாவதி, தோழர் அ.பொன்னம்பலம் ஆகியோர் தங்கள் அபிப்பிராயங்களைக் கூற, நன்றி கூறலுடன் விடியற்காலை 3.30 மணிக்கு நாடகம் இனிது முடிவடைந்தது (குடிஅரசு, 05.05.1935, பக்.5) என்பதாயும் பதிவுகள் உள்ளன. அதேபோல் ‘மதுரை தெற்கு வாசல் நாடார் வித்தியாசாலைக் கட்டிட நிதிக்கு, மேற்படி, வாசக சாலை மாணவர்களால், 23.6.1935 அன்று மதுரை தாலுக்கா ஜில்லா முன்சீப் எஸ். நடராஜ நாடார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் ‘காதலின் வெற்றி’ என்ற சீர்திருத்த நாடகம் மதுரை எட்வர்ட் ஹாலில் நடத்தப்பட்டிருக்கிறது (குடிஅரசு, 23.6.1935, பக்.15). ●



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org
ஆண்டுக் கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 – periyarmuzhakkam@gmail.com

# ‘குறளு’க்கு ‘குரல்’ கொடுத்த பெரியார்



*– முனைவர் மு.பா. குப்புசாமி*

---

*திருக்குறள் குறித்து பெரியார் தெரிவித்த கருத்துகள் – நடத்திய மாநாடுகள் – மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து ஒரு பார்வை.*

---

*பெரியாரது முக்கியக் கொள்கைகளில் ஒன்று கடவுள் மறுப்பாகும். கடவுள் பெயரால்தான் அனைத்துச் சீர்கேடுகளும் நடைபெறுகின்றன என்பதும் சமூகம் சீர் அடைய வேண்டுமானால் கடவுள் பற்றிய கற்பிதங்கள் உடைபட வேண்டும் என்பதும் பெரியார் கருத்து. சைதாப்பேட்டை திருவள்ளுவர் மன்றத்தில் பெரியார் கடவுளைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:*

1. தமிழனுக்கு எப்போதும் உருவக் கடவுள் இருந்ததில்லை.
2. கடவுள் சக்தியை விஞ்ஞான அறிவு மீறி வருகிறது.
3. அறிவுக்கு மதிப்பு மிகுந்து கடவுளுக்கு மதிப்பு மங்கி வருகிறது.
4. சுகாதார அதிகாரிகளால் மாரியாத்தாள் மதிப்பிழந்தாள்.
5. திருக்குறளின் வெற்றி மெய்மை அறிவொளியின் வெற்றி (‘விடுதலை’ 9.11.1949)

- எனக் குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர் கடவுள் பெயரால் பிரிந்து கிடக்கும் மக்களைப் பற்றிக் குறிப்பிடும் குறளினை பெரியார் மேற்கோள் காட்டுகிறார். “எந்த நாட்டில், சாதிப் பற்றியும், மதங்கள் பற்றியும் கடவுள்கள் பற்றியும் கூட்டங்கள் இருந்து கொண்டு அவைகளின் அடிப்படையில் உண்டாகின்ற அரசியலையும், நாடாள்பவனையும் கெடுக்கின்ற ஐந்தாம் படை உட்பகையாளர்களும் இருக்கின்றார்களோ அந்த நாடு ஒரு காலத்திலும் முன்னேராது.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு (குறள் 735)

என்று குறளைக் கூறி விளக்கமளிக்கின்றார். இதே போன்று வேறொரு இடத்தில் கடவுள் சக்தியைப் பற்றி விளக்கும் பெரியார், "ஒழுக்கம் இல்லாததால் மழை பெய்யவில்லை என்று கூறுவர். ஆனால் வள்ளுவர் மழை இல்லாததால் தான் மக்களிடத்தில் ஒழுக்கம் குறைகிறது என்று கூறுகிறார். நாட்டில் மழை இல்லையெனில் பஞ்சம் ஏற்படும். பஞ்சத்தில் எப்படி ஒழுக்கத் தோடு இருக்க முடியும் எனக் கூறிச், "சிறப்போடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" ('விடுதலை' 23.5.50) என்ற குறளினை மேற்கோள் காட்டுகின்றார்.

மற்றோர் இடத்தில் கடவுளுக்கு நிகராகப் போற்றப்படும் தேவர்களின் கயமைத்தனத்தினை வள்ளுவர் வழிநின்று விளக்குகிறார் பெரியார்.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பர் யாங்கண்ட தில்

தேவரனையர் கயவர் அவருத் தாம்
மேவன செய்தெழுக லான்

மக்கள் உயர்ந்த குணமுடையவர்கள் - எனவே அவர்களுடைய உருவத்தில் இருந்து கொண்டு உள்ளனர். தேவர்கள் இழிந்த குணமுடையவர்கள் - எனவே அந்தத் தோற்றத்தில் இல்லாமல் இருக்கின்றார். குணத்தில் மட்டும் தேவர்களைப்போல அயோக்கியர்களாக உள்ளனர்" ('விடுதலை' 24.12.1948) எனக் குறிப்பிடு கின்றார். இதுபோன்று கடவுளை மறுக்கும் பகுதிகளைப் பெரியார் சான்று காட்டி விளக்கு கின்றார். திராவிட இயக்கத்தினர் கடவுளை மறுப்பதைப் போன்று கடவுளைக் கொண்டு சில நடைமுறைகளை உருவாக்கி வைத்துள்ள சமயக் கொள்கைகளையும் மறுத்துள்ளனர்.

திருக்குறளைப் போன்றே பல சித்தர்கள் கருத்துகள் அமைந்திருப்பதாக பெரியார் கருதுகின்றார். பெரியார் சித்தர்கள் பற்றிக் கூறும் கருத்து வருமாறு:

"வருணாசிரம முறைமையும் கடவுள் மத மூட நம்பிக்கைகளையும் பல சித்தர்கள் வள்ளுவரைவிட இன்னும் பச்சையாக ஆணித்தரமாகக் கண்டித்திருக்கின்றனர். அதையெல்லாம் தேடிப் பிடிப்பது கடினம். இருந்தும் அது சாதாரண மக்களுக்குப் பொருந்தாது. ஞானியருக்கே பொருந்தக் கூடியது" ('விடுதலை' 11.11.1949) எனக் கூறி அதனைக் கடைப்பிடிக்க இயலாது என்று குறிப்பிடு கின்றார்.

**ஆரியத்துக்கு எதிரானது குறள்**

முடிவாக வைதீகத்திற்கு எதிராகத் தோன்றியதுதான் திருக்குறள் என்பதை அனைத்து திராவிட இயக்கச் சிந்தனையாளர்களும் கருதி யுள்ளனர். குறள் எப்படி ஆரியத்திற்கு எதிரானது என்பதை பத்திரிகையாளர் அ.மா.சாமி சிலவற்றைத் தொகுத்துக் கொடுத்துள்ளார். அவற்றின் சுருக்கம் வருமாறு:

- ஆரியம் நான்கு வருணம் பற்றிப் பேசுகிறது. குறள் பிறப்பொக்கும் என்கிறது.
- ஆரியம் ஏர்பிடிப்பது சூத்திரனுக்குரியதாகக் கூறுகிறது. குறள் என்ன வேலை செய்தாலும் உணவுக்கு உழவன் என்கிறது.
- பிராமணன் பிச்சை வாங்கி உண்ண வேண்டும் என்கிறது ஆரியம். இரந்து வாழின் உலகியற்றியவன் கெட்டழியட்டும் என்கிறது குறள்.
- மரணம் வரின் எந்தச் செயலையும் செய்யலாம் என்று ஆரியம் கருத்துகூற வள்ளுவர் மானம்வரின் உயிரையும் துறக்க வேண்டும் என்கின்றார்.
- குழந்தை இல்லாத பெண் யாருடனும் கூடி குழந்தை பெறலாம் என்று வேதம் கூற வள்ளுவரோ பிறனில் விழையாமை பற்றிப் பேசுகிறார்.
- ஆரிய புராணங்களில் சூதாட்டங்கள் வருகின்றன. குறள் சூதாடுவது தவறு என்று கூறுகிறது.
- பசு, குதிரைகளை வேள்வியில் இடலாம் என்று வேதம் கூறுகிறது. குறள் கொல்லாமை பற்றி விளக்குகிறது.

- விதி வலியது என்கிறது வேதம். குறள் விதியை முயற்சியால் வெல்லலாம். எனவே முயற்சி வலியது என்கிறது.
- வேதம் தாழ்ந்த வருணத்தார் கல்வியைப் பக்கத்திலிருந்துகூட கேட்கக் கூடாது என்கிறது. திருக்குறள் கற்றிலனாயினும் கேட்க கற்பதனால் தாழ்ந்தவனும் உயர்வடையலாம் என்கின்றது.

இந்தக் கூற்றுகளின் மூலம் குறள் ஆரியக் கருத்தைத்தான் கூறுகிறது என்கின்ற பழைய வாதங்கள் முற்றிலும் முறியடிக்கப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய குறள் கருத்துகள் இன்று ஏன் தேவைப்படுகிறது என்பதற்கு பெரியார் கூறும் காரணம் வருமாறு:

“சர்வம் புராணமயம் பள்ளியில் புராணப் படிப்பு, கொட்டகையில் புராண நடிப்பு, சங்கீதத்தில் புராணப் பாட்டு, கோயில்களில் புராண காலட்சேபங்கள், பத்திரிகைகளில் புராண விமர்சனங்கள் எல்லாம் பார்ப்பனிய மயம். இவற்றிற்கெல்லாம் சரியான பரிகாரம் சரியான மருந்து நாம் நம் நாட்டைத் திருக்குறள் மயமாக்குவதுதான். திருக்குறள் ஒன்றுதான் பார்ப்பனியத்தின் சவாலை ஏற்று வெற்றி காண வல்லது.” (‘விடுதலை’ 11.11.1949) இவ்வாறு பயன்பாட்டு நோக்கில் இலக்கியத்தை அணுகியிருக்கிறார் பெரியார்.

**மாநாடுகள் – சொற்பொழிவுகள்**

தந்தை பெரியார் தனது பேச்சுக்களின் வழியே கருத்துகளை எடுத்துச் சென்றார். ஊருக்கு ஊர் மாநாடுகளையும் கூட்டங்களையும் நடத்தினார். திருக்குறள் பற்றி அறியத் தொடங்கியதும் குறள் பற்றிப் பேசினார். திருக்குறள் மன்றங்கள் நடத்தும் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு பேசியுள்ளார். குறளுக்குத் தனியாகச் சிறப்பு கொடுக்க வேண்டும் என எண்ணிய பெரியார் திருக்குறள் மாநாடு நடத்தினார்.

சென்னை பிராட்வே டாக்கீசுக்கு அடுத்த மைதானத்தில் 15, 16.1.1949ல் குறள் மாநாட்டை நடத்தினார். இதற்கான காரிய கமிட்டிக் கூட்டம் மவுண்ட்ரோடு மீரான் சாயபு தெருவிலுள்ள கட்டடம் ஒன்றில் நடைபெற்றது. இதில் 100 பேர் கலந்து கொண்டனர். மாநாட்டில் கலந்து கொண்டு உரையைக் கேட்போருக்கு டிக்கெட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| சாதாரணக் கட்டணம் | 1 நாள் | ரூ.1-0-0 |
| | 2 நாள் | ரூ.1-8-0 |
| உயர் வகுப்பு | 1 நாள் | ரூ. 3-0-0 |
| | 2 நாள் | ரூ. 5-0-0 |
| பெண்களுக்கு | 1 நாள் | ரூ. 0-12-0 |
| | 2 நாள் | ரூ.1-0-0 |

மேற்கூறியவாறு விலை கொடுத்து நிறைய கூட்டம் வந்திருந்தது. மேலும் மாநாட்டு விளம்பர அறிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டது. மாநாடு நடக்கும் இடம் மிகச் சிறியது. ஆதலால் குறிப்பிட்ட அளவு டிக்கெட்டுகளே கொடுக்கப்படும். எனவே முந்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இன்று பணம் கொடுத்துக் கூட்டம் சேர்க்கின்றனர். ஆனால் டிக்கெட் வாங்கிக் கொண்டு மாநாட்டைக் கேட்டனர் என்பது மக்களது திருக்குறள் ஆர்வத்தைப் புலப்படுத்துகிறது.

தற்போது கூட்டப்படும் இலக்கியக் கூட்டங்களுக்கு கூட்டம் கூடுவது அரிதாக இருக்கிறது. கூட்டம் கூட்ட உணவு தேநீர் ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் அன்று பணம் கொடுத்து கூட்டத்தில் கலந்து கொண்டதைக் காணும்போது மக்களுக்கு இலக்கியம் மீது இருந்த ஆர்வம் எப்படிப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

இந்த மாநாடு நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்பு விடுதலை இதழில் வெளி வந்த ஓர் உரையாடல் குறள் மாநாடு குறித்த வினாக்களுக்கு விடை காணும் வகையில் அமைந்துள்ளது. அவை வருமாறு:

ஒருவர் : குறள் மாநாடு பிராமணர்களை வைவதற்குத்தானே நடைபெறுகிறது

மற்றவர் : பெரிய புராண மாநாடு இராமாயண மாநாடு - இது யாரைத் திட்டுவதற்கு நடைபெற்றது?

ஒருவர் : குறள் இலக்கிய சம்பந்தமானது

மற்றவர் : குறள் இலக்கியமில்லையா?

ஒருவர் : ஊரில் அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள்.

மற்றவர் : குறளைப் பார்ப்பனர் ஆதரிப்ப தில்லை. குறளில் பார்ப்பனியத்திற்கு எதிராகப் பல கருத்துகள் இருக்கின்றன. அதனால் அவர்கள் குறளைப் பெரிதும் வெறுப்பார்கள். அதை நாம் நடத்துவதால் பார்ப்பனியத்தை வெறுக்கும் விஷயங்கள் பற்றிப் பேசுபவர்களே என்று அடிக்கடிச் சொல்லுகிறார்கள் ('விடுதலை' 12.1.49).

இவ்வாறு குறள் மாநாடு பற்றிய கருத்துகளை மக்களுக்குத் தெரிவிக்க வினா விடை அமைப்பில் ஒரு பக்கம் வெளி வந்துள்ளது. இது மாநாட்டைப் பற்றிய தெளிவினை விளக்குவதாக அமைந்துள்ளது. மேலும் குறள் மாநாட்டுக்கான காரணங்களையும் அன்றைய 'விடுதலை' நாளி தழிலேயே வெளியிட்டுள்ளார். அவை வருமாறு:

1. திராவிடனுக்கு நீதி ஒழுக்க நூல் கிடையாது. இராமாயணம், மகாபாரதம் தான் ஒழுக்க நூல் என்று சொல்லப்படுவது ஒழிய வேண்டும்.

2. சமய நெறி என்பவற்றின் பேரால் திராவிட மக்களுக்கு இருக்கும் மூடநம்பிக்கைகளை யும் காட்டுமிராண்டித்தனமான தன்மைகள் மறையும்படி செய்யவும் மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் ஏற்படுத்தவும் கூட்டுகிறோம்.

3. திராவிடர் கழகத்தார் சுயமரியாதைக்காரர் தமிழ் இலக்கியத்தைக் கலையை அழிக்கிறார்கள். அவர்களுக்கு இலக்கிய உணர்வு, கலை உணர்வு இல்லை என்று சொல்லி மடமைப் பிரச்சாரமும் நீலிப் பிரச்சாரமும் செய்வதைத் தவறு என்று கூறி அயோக்கியர்களும் மடையர்களும் ஆரியர்களும் யார் என்று நிரூபிக்கவும் இம்மாநாடு நடத்தப்படுகிறது.

4. இன்று திராவிடர்களுக்குப் பாமரர்கள் உள்பட எல்லோருக்கும் நல்ல நெறியும் ஒழுக்கமும் ஏற்பட குறளைத் தவிர வேறு நூல் இல்லை. இப்படிப்பட்ட குறளை விட்டுவிட்டு இராமாயண, மகாபாரத, பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் போன்றவவைகளையே சகல திராவிடரும் பிரச்சாரம் செய்கிறார்கள். இதை மாற்றவும் பொது மக்கள் இதை நிரூபிக்கவும் இந்த மாநாடு நடத்துகிறோம். ('விடுதலை' 12.1.1949)

குறள் மாநாட்டில் வந்து கேட்போருக்கு நிழலுக்காகப் பெரிய பந்தல் அமைக்கப்பட்டது. இப்பந்தல் 10,000 பேர் அமர்ந்து கேட்கக் கூடிய வகையில் அமைந்திருந்தது.

**குறள் மாநாடு**

1949ஆம் ஆண்டு ஜனவரி 15, 16ஆம் நாள் பெரியார் திருக்குறள் மாநாடு நடத்தினார். இதனைத் தமிழர் நெறி விளக்க மாநாடு என்றும் குறிப்பிட்டார். இம்மாநாடு மிகப் பிரபலமாக நடைபெற்றது. மாநாட்டுக்கு வருவோர் டிக்கெட் வாங்கிக் கொண்டு தான் வரவேண்டும் என்று இருந்தது. இருப்பினும் கூட்டம் நிரம்பி வழிந்தது. முதல் நாள் மாநாட்டில் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் திருக்குறள் வீ. முனிசாமி, சி. இலக்குவனார் போன்றோர் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் திரு.வி.க., நாவலர் நெடுஞ் செழியன் போன்றோர் கலந்து கொண்டனர். முதல் நாள் இரவு அறிஞர் அண்ணா அவர்களின் நாடகம் நடைபெற்றது.

முதல் நாள் குறள் மாநாட்டில் தெ.பொ.மீ. தலைமை தாங்கினார். திருக்குறள் வீ. முனியசாமி சொற்பொழிவு ஆற்றினார். டி.எஸ். கந்தசாமி முதலியார் திருவள்ளுவரின் உருவப் படத்தினைத் திறந்து வைத்தார். எஸ். முத்தையா முதலியாரும் சி. இலக்குவனாரும் உரையாற்றினர். திரு. பி. சுப்பிர மணியம் அவர்களின் அஷ்டாவதான நிகழ்ச்சி நடைபெற்றது. (குறள் விரிவுரை அவதான நிகழ்வு)

இரண்டாவது நாள் பெரியார் தலைமை தாங்கினார். திரு.வி.க. வரவேற்புரை வழங்கினார். நாவலர் நெடுஞ்செழியன், சோமசுந்தர பாரதியார், கா. அப்பாதுரை, புலவர் குழந்தை, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், அறிஞர் அண்ணா ஆகியோர் உரையாற்றினர். இரவு பத்து மணிக்கு அண்ணாவின் நாடகம் 'சந்திர மோகன்' நடை பெற்றது. இந்த மாநாட்டில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:

1. இப்பொழுதுள்ள கல்வித் திட்டத்தில் முதல் உயர்நிலை வகுப்பு (பாரம்) தொடங்கி

இளங்கலைஞர் (பி.ஏ.,) வகுப்பு முடிய திருக்குறள் முழுதும் படித்து முடிக்கும் வகையில் படிப்படியாகப் பாடத் திட்டம் வகுக்குமாறும், அதற்கென தனி வினாத் தாள் (ஷேக்ஸ்பியர் போல) ஏற்படுத்து மாறும் கல்வித் துறை அதிகாரிகளையும் பல்கலைக் கழகங்களையும் இம்மாநாடு வேண்டுகின்றது.

2. ஆட்சி மன்றங்களில் உறுப்பினராக வரு வோர்க்கும், கல்விக் கூடங்களிலும் கல்லூரி களிலும் தலைவராக வருவோர்க்குரிய தகுதிகளில் திருக்குறள் புலமையும் ஒன்றாக வற்புறுத்துமாறு ஆட்சியாளரை வேண்டு கின்றது.

3. திருவள்ளுவர் விழாவுக்கென ஒரு நாளைக் குறிப்பிட்டு, அரசு விடுமுறை நாளாக்கி, அந்நாளை நாடெங்கும் கொண்டாடுவதற் குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கின்றது.

4. திருக்குறள் பற்றிய விழாக்கள், மாநாடுகள் முதலியவற்றின் நிகழ்ச்சிகளை அறிவிக்கு மாறும், ஒலி பரப்புமாறும் திருச்சி வானொலி நிலையத்தாரைக் கேட்டுக் கொள்கின்றது.

இதுபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி பல சொற்பொழிவுகளைப் பெரியார் நிகழ்த்தி யுள்ளார். மேற்கூறியவாறு திராவிட இயக்கக் கூட்டங்களில் பேசியது மட்டுமின்றி இயக்கம் சாராத கூட்டங்களிலும் பெரியார் உரையாற்றி யுள்ளார். அந்தக் குறிப்புகள் சில வருமாறு:

1949ஆம் ஆண்டு சைதாப்பேட்டை திருவள்ளுவர் மன்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். 1950ஆம் ஆண்டு பெங்களூரு வள்ளுவர் கழக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். இதே ஆண்டு நாகர்கோயில் திருவள்ளுவர் வாலிபர் கழக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

1958ஆம் ஆண்டு முக்கூடல் வள்ளுவர் கழக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றி யுள்ளார். 1961ஆம் ஆண்டு தனிக்கோட்டை வள்ளுவர் படிப்பக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

(திருக்குறளும் திராவிட இயக்கமும் - ஆய்வு நூலிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்)

## திருக்குறளை வெறுத்த பார்ப்பனர்: அயோத்திதாசர் தரும் தகவல்

***திருக்குறள் தாழ்ந்த வருணத்தாரால் இயற்றப்பட்ட நூல் ஆதலால் பிராமணர்கள் அதை வெறுத்தனர். இந்தக் கருத்தினை அயோத்திதாசர், எல்லீஸ் துரையுடன் நிகழ்ந்த சம்பவம் ஒன்றின் மூலம் விளக்குகிறார்.***

1796இல் சென்னைக்கு வந்த எல்லீஸ் துரை தமிழ் கற்க விருப்பம் கொண்டு சில தேர்ந்த ஆசிரியர்கள் மூலம் அதனை நிறைவேற்றிக் கொண்டார். அயோத்திதாசரின் பாட்டனார் எல்லீஸ் துரைக்குத் திருக்குறள் நூல் ஒன்றினைக் கொடுத்து அனுப்பினார். இதைப் படித்த எல்லீஸ் துரை இதற்கு விளக்கமளிக்குமாறு ஆசிரியர்களைக் கேட்க, அப்பிராமணர்கள் அது தீண்டத்தகாத நூல், திருவள்ளுவர் தீண்டத்தகாதவர் என்று கூற எல்லீஸ் அவர்களுக்குத் திருக்குறள் மீது அதிக ஆர்வம் உண்டானது. நூல் கொடுத்தனுப்பியவரை வரவழைத்துப் பிராமணர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்களே ஏன் என்று கேட்க அவர் கூறிய பதில் வருமாறு: “எங்களுக்கும் இவர்களுக்கும் விரோதம். எங்கள் வீதிக்குள் பிராமணர் வந்தால் உங்கள் பாதம் இட்ட இடம் பழுதாகிவிடும் என்று சொல்லிக் கொண்டு இவர்களைத் துரத்தி பிராமணர்கள் வந்த வழியிலும் சென்ற வழியிலும் சாணத்தைக் கரைத்துத் தெளித்துச் சாணச் சட்டியையும் உடைத்து வருகிறார்கள் என்று கூறினாராம்” உண்மையான காரணத்தைப் புரிந்து கொண்ட எல்லீஸ் துரை திருக்குறளை ஆழமாகப் படித்து அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 1819ஆம் ஆண்டு எல்லீஸ் இயற்கை எய்தியதால் அப்பணி முழுமையடையாமல் போயிற்று.

- மேற்குறிப்பிட்ட நூலிலிருந்து

ரிசர்வ் வங்கி தொடர்ந்து நான்காம் முறையாக (repo rate) வட்டி விகிதத்தைக் குறைத்துள்ளது. அதுவும் எதிர்பார்ப்புகளுக்கு மிகையாக 35 புள்ளிகள் குறைத்தது. சரிந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தை வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்ல, ஒட்டுமொத்த பொது மக்களின் தேவை மற்றும் தனியார் முதலீட்டை அதிகப்படுத்தும் நோக்கில் வட்டி விகிதத்தை குறைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்ததாஸ் தெரிவித்தார்.

இதே காரணத்தைக் குறிப்பிட்டுத்தான் கடந்த பிப்ரவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் நடந்த நான்கு நிதிக் கொள்கை கூட்டத்திலும் தொடர்ந்து வட்டி விகிதம் குறைக்கப்பட்டது. இது வரும்காலங்களிலும் தொடரும் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்து வருகின்றது. ஆனால், தனியார் முதலீட்டை ஊக்குவித்து பொருளாதார வளர்ச்சியினை உயர்த்த எடுக்கப்பட்ட இந்த வட்டி குறைப்பு முயற்சிகள் எந்த ஒரு பலனையும் இதுவரை தரவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. சொல்லப் போனால் தனியார் முதலீடும் பொருளாதார வளர்ச்சியும் மேலும் தொடர்ந்து சரிந்து கொண்டேதான் வருகின்றன. வருங் காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கும் என்றே ரிசர்வ் வங்கி மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கணிப்புகள் சொல்கின்றன.




# கடும் நெருக்கடியில் இந்திய பொருளாதாரம்

**சரியும் பொருளாதார வளர்ச்சி**

கடந்த நிதியாண்டில் (2018-19) பொருளாதார வளர்ச்சி 6.8%, அண்மை காலாண்டு வளர்ச்சி விகிதம் 5.8%. முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிர மணியன் கூறுவது போல், இது 2.5% மிகைப் படுத்தப்பட்ட வளர்ச்சி என்பதை ஏற்றுக் கொண்டால், கடந்த நிதியாண்டின் உண்மையான வளர்ச்சி விகிதம் 4.3%, காலாண்டு வளர்ச்சி 3.3% ஆகும். இது நம்முடைய கடந்தகால வளர்ச்சி விகிதங்களுடன் (8-9%) ஒப்பிடுகையில் இந்தியா 30-40 வருடங்கள் பின்னோக்கி சென்றுவிட்டது என்பதுதான் நிதர்சனம். உலகளவில் தனி மனித வருவாய் பட்டியலில் இந்தியா ஏழாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது என்பது சமீபத்திய நிலவரம். ஆனால், 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியாவை உருவாக்குவோம் எனக் கூறி வருகிறது மத்திய அரசு.

ஒரு துறை விடாமல் எல்லா துறையும் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக் கின்றன. தொழில், ஏற்றுமதி/இறக்குமதி, விவசாயம், மக்களின் நுகர்வு என்று அனைத் திலும் பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக் கிறோம். இதனால் வேலையின்மையும் வெகுவாக உயர்ந்துள்ளது. சாதாரண மக்கள் பயன்படுத்தும் நுகர்வுபொருட்கள் தொடங்கி வசதியுள்ளோர் பயன்படுத்தும் கார், இருசக்கர வாகனம் போன்ற அனைத்து பொருட்களின் விற்பனை குறைந்து, இந்த நிறுவனங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கை யும் தொடங்கிவிட்டது. மோட்டார் வாகனத் துறை அதிக சிறு தொழில்களுடன் இணைக்கப் பட்ட ஒன்று என்பதால் அதில் வேலை வாய்ப்புகள் அதிகம். ஆனால், தற்போது வாகன விற்பனை கடும் சரிவைக் கண்டதால் உற்பத்தி குறைப்பும், வேலையிழப்பும் நடந்தேறி வருகின்றன.

வளர்ச்சியின் முக்கிய அங்கம் முதலீடு. முதலீடு இல்லாமல் வளர்ச்சியை அடையவே முடியாது. ஆனால், இந்தியத் தொழில்துறைக்கான முதலீடு கடந்த பத்து ஆண்டுகளாக தொடர் சரிவை சந்தித்து வருகின்றது. கடந்த பத்து ஆண்டுகளில் 34 சதவீதத்திலிந்து 27 சதவீதமாகக் குறைந்துள்ளது. இப்படி தொடர்ந்து தனியாரின் தொழில்துறை முதலீடுகள் சரிந்து வருவதின் விளைவு உற்பத்தி திறன் (excess productive capacity) தேக்கமடைந்து வருகின்றது. உற்பத்தி திறன் தேக்கம் அதிகரித்து வருவதால் புதிய முதலீடுகள் உடனடியாக வர வாய்ப்பில்லாத சூழல் உருவாகி யிருக்கின்றது.

அடுத்து விவசாயத் துறையும், ஒட்டுமொத்த ஊரகத் துறையும் அனைத்து முறைசாரா துறையும், சிறு மற்றும் குறுந்தொழில்கள், சிறு வணிகர்கள் அனைவரும் பல்வேறு கடுமையான சவால்களை சந்தித்து வருகின்றார்கள். விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறையால் வறட்சி எனும் பேராபத்தில் இருக்கிறார்கள். மறுபக்கம் வெள்ளம், புயல் போன்ற இயற்கை சேதங் களையும் சந்திக்கும் நிலை. இதுபோக அதிக உள்ளீட்டு செலவுகள், விளைபொருளுக்கு மிகக் குறைந்த விலை, பொய்த்துப் போகும் விதைகள், செலுத்த முடியாத கடன் என்று அடுக்கிக் கொண்டே போக லாம். இதனால் சிலர் தற்கொலை விளிம்புக்குத் தள்ளப்படுவதையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இரண்டு இலக்கங்களில் உயர்ந்து வந்த கிராமப்புற ஊதியங்கள் 5 சதவீதத்துக்கும் கீழாக வீழ்ச்சி யடைந்துள்ளன. இவை அனைத்தும் அவர்களின் வாங்கும் சக்தியை வெகுவாக குறைத்ததோடு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த பொருளா தாரத்தையும் பாதித்துள்ளன.

**வெளிநாட்டு வர்த்தகம்**

உள்நாட்டு வர்த்தகம்தான் இப்படி எனில், வெளிநாட்டு வர்த்தகமும் குறைந்துவருகிறது. 2007-08 உலக பொருளாதார மந்த நிலைக்குப் பிறகு இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி இறக்குமதி பெரிய வீழ்ச்சியை கண்டுள்ளது. மொத்த தேசிய வருவாயில் 2012இல் 43.04 சதவீதமாக இருந்த ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் 2016இல் 27.57 சதவீதமாகக் குறைந்துள்ளது. உள்நாட்டு தொழில் துறை வளர்ச்சி பாதிக்கப்பட்டதால், தொழில் துறைக்கு தேவையான இயந்திரப் பொருட்களின் இறக்குமதியும் வெகுவாக குறைந்துள்ளது. அதாவது GDPயில் கிட்டத்தட்ட பாதியளவுக்கு பங்களித்த வெளிநாட்டு வர்த்தகம் கால் பங்காக குறைந்துள்ளது. மேலும் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்ததால் நடப்பு கணக்குப் பற்றாக்குறை (Current Account Deficit) GDPயில் 2.6 சதவிகிதத்தை எட்டியுள்ளது.

**சவாலாகும் வேலைவாய்ப்பின்மை**

நாட்டின் வளர்ச்சி விகிதமும், முதலீடும் தொடர்ந்து குறைவதால் வேலைவாய்ப்பின்மை கடுமையாக உயர்வது தடுக்க முடியாததாக இருக்கிறது. NSSO மதிப்பீட்டின்படி வேலை வாய்ப்பின்மையின் உயர் விகிதம் 6.1 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச வேலை யின்மையாகப் பதிவாகியிருக்கிறது. 2019 ஜூன் மாத நிலவரப்படி வேலையின்மையின் விகிதம் மேலும் கடுமையாகி 7.9 சதவீதமாக உயர்ந் துள்ளது என்று C.M.I.E-ன் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

**மத்திய பட்ஜெட்**

2019-20 நிலைமை இப்படி இருக்கும் பட்சத்தில், அரசின் கவனமெல்லாம் எந்தத் திசையில் பயணிக்கிறது என்றே தெரியாமல்தான் இருக்கிறது. சமீபத்திய பட்ஜெட்டில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கவும், மக்களின் வாங்கும் திறனை அதிகப்படுத்தவும் கார்ப்பரேட் வரி, மோட்டார் வாகனங்கள் மீதான உயர் ஜிஎஸ்டி குறைக்கப்படும் என்றும், கிராமப்புற, சாதாரண மக்களின் நுகர்வு செலவை உயர்த்த ஜிஎஸ்டி, பெட்ரோல்/டீசல் போன்றவற்றின் மீதான வரிச் சுமைகள் குறைக்கப்படும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.

அதேபோல் அடிப்படை கட்டுமான செலவுகள், நீர் பாசனங்களுக்கான செலவுகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்ப்பு களுக்கெல்லாம் நேர்மாறாக பட்ஜெட்டில் எந்த சலுகையும் அறிவிக்கப்படாதது மட்டுமின்றி, பெரும்பணக்காரர்கள், வெளிநாட்டு முதலீட் டாளர்கள் மீது புதிய வரிகள் விதிக்கப்பட்டன. வாகனங்களின் பதிவு கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டது.

இதன் விளைவாக, பட்ஜெட்டுக்குப் பின் பங்குச் சந்தை தொடர் வீழ்ச்சியடைந்து 2 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் மேலாக வெளிநாட்டு முதலீடுகள் வெளியேறின. டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பும் சரிந்தது. கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசின் ஒட்டு மொத்த செலவு 14.2 சதவீதத்திலிருந்து 12.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த நிலை கடந்த பட்ஜெட்டிலும் தொடரக் காரணம் பொருளாதார பின்னடைவின் காரணமாக அரசின் வரி வருவாய் குறைந்து நிதிப் பற்றாக்குறை அதிகமானதுதான். 2018-19ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் ஒட்டுமொத்த செலவு ரூ.24.6 லட்சம் கோடி. ஆனால் ஒட்டு மொத்த வருவாய் ரூ.17.3 லட்சம் கோடி.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட கடன் ரூ.6.3 லட்சம் கோடி. பட்ஜெட்டுக்கு வெளியே பொதுத் துறை வாங்கும் கடன் ரூ.5.6 லட்சம் கோடி. அதாவது ரூ.17.3 லட்சம் கோடி ரூபாய் வருவாய் போதாமல், கிட்டத்தட்ட ரூ.12 லட்சம் கோடி ரூபாய் கூடுதலாக கடன் வாங்கித்தான் அரசு தனது செலவினங்களைச் சமாளித்துக் கொண்டிருக் கிறது. இதுபோன்று ஏற்கனவே வாங்கப்பட்ட கடன்கள் மட்டுமே GDP-ல் 50 சதவிகிதத்தை எட்டியுள்ளன. இந்த கடனுக்கு கிட்டத்தட்ட ரூ.6 லட்சம் கோடி வட்டி மட்டுமே செலுத்தப்பட் டுள்ளது. இதுவே மத்திய பட்ஜெட்டில் மிகப் பெரிய செலவாகவும் உள்ளது. இந்நிலையில், வெளிநாடுகளில் பத்திரங்கள் (Sovereign Bonds) வெளியிட்டு டாலரில் கடன் வாங்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. இந்த முடிவு பெருமளவிலான எதிர்ப்பையும் விமர்சனத்தையும் சந்தித்துள்ள இச்சூழலில், மத்திய அரசால் எந்தப் பெரிய முதலீடுகளையும் செய்ய முடியாது. எனவேதான் ரிசர்வ் வங்கியின் வட்டி குறைப்பை மட்டுமே நம்ப வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

**பாஜகவின் அரசியலும் நாட்டின் பொருளாதாரமும்**

2012-லிருந்து இந்தியப் பொருளாதாரம் சரிவை சந்தித்துவருகிறது. 2014 தேர்தலில் ‘வளர்ச்சிப் பாதையில் இந்தியா’ என்று வாக்குறுதியளித்து வெற்றியும் பெற்றது பாஜக. ஆனால், பொருளாதாரத்தை சீர்செய்யும் நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல், மதம் சார்ந்த விவகாரங்களில் முனைப்பு காட்டியது. மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பணபதிப்பு நீக்கத்தையும் அதைத் தொடர்ந்து 6 மாதத்தில் ஜிஎஸ்டியையும் அமல்படுத்தி கீழே விழும் பொருளாதாரத்தின் வேகத்தை மேலும் அதிகமாக்கி அதளபாதாளத்தில் தள்ளியது. வளர்ச்சி இதோ, அதோ என்று சொல்லி சொல்லியே 5 ஆண்டுகள் கடந்து, 2019 நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது.

அப்போதும், தேசத்தின் நிதிநிலை பின்னுக்குத் தள்ளப்பட்டு, தேசப்பற்று பிரதானப் படுத்தப்பட்டது. பாகிஸ்தான் மீதான மோதல் முக்கியத்துவம் பெற்று அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் மறக்கடிக்கப்பட்டன. எல்லோருக்கும் ‘நல்ல காலம் பொறக்குது’ (Achhe din aane waale hain), ‘விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம்’, ‘2 கோடி வேலை வாய்ப்புகள்’ என்ற வாக்குறுதிகள் எல்லாம் முழக்கமாகவே முடிந்து போயின. ஆட்சியைப் பிடித்த பிறகு ‘5 டிரில்லியன் பொருளாதாரம்’ என்ற புதிய முழக்கம் வைக்கப் பட்டது. அதில் கவனம் செலுத்துவதற்குள் காஷ்மீர் விவகாரம் சூடுபிடிக்க மீண்டும் பொருளாதாரப் பிரச்சினைகள் பின்தள்ளப் பட்டன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிபுணர்கள் கணித்திருப்பது போல, மிகவும் மோசமடைவதற்குள் அரசு விழித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நிதியமைச்சர் தொழிலதிபர்கள், உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள், வங்கித் துறையினர் போன்றவர்களை சந்தித்து கலந்தாலோசித்து வருகிறார் என்பது பாராட்டத்தக்க விஷயம். மேலும், சில குறிப்பிட்ட துறைகளுக்கு ஊக்கமும் வரிச் சலுகையும் வழங்க யோசித்து வருவதாக வரும் தகவல்களும் வரவேற்கத்தக்கவையே.

ஆனால், ஆக்கபூர்வமான சீர்திருத்தங்களும், கொள்கை முடிவுகளும்தான் தற்போதைய தேவையே தவிர, வட்டிக் குறைப்பு செய்வது மட்டுமே பொருளாதாரத்தை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்கும் என்று சிந்திப்பது சரியான முடிவாக இருக்காது. நிதி ஆலோசகர் பசந்த் மகேஷ்வரி கூறுவதுபோல, ‘மாரடைப்பால் அவதியுறும் நோயாளிக்கு (இந்திய பொருளா தாரத்துக்கு) இரண்டு பாரசிட்டமால் மாத்திரைகளை மட்டும் கொடுத்தால் போதுமா’ என்றுதான் அரசைப் பார்த்து கேட்கத் தோன்றுகிறது.

**- வணிக மணி**




# தேசிய விருதுகளில் புறக்கணிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்கள்

*திரைப்படங்களுக்காக இந்திய அரசால் வழங்கப்படும் 66ஆவது தேசிய விருதுப் பட்டியல் ஆகஸ்ட் 9 அன்று வெளியாகியிருக்கிறது. எந்த விருது அறிவிப்புக்கு பின்னரும் பாராட்டுகள், கைகுலுக்கல்கள் ஆகியவற்றுக்கிடையே சில சர்ச்சைகளும் எட்டிப்பார்ப்பது வழக்கம். ஆனால் இந்த விருது அறிவிப்பு தமிழ்த் திரையுலகினர், பார்வையாளர்கள் மத்தியில் அதிகப்படியான சலசலப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி யுள்ளது.*

இந்தியாவில் மூன்றாவது பெரிய திரையுலகமாக இருப்பது தமிழ்த் திரையுலகம் தான். அதிகளவிலான கலைஞர்கள், தொழி லாளர்கள் பணியாற்றும் இதிலிருந்து ஆண்டுக்கு சராசரியாக 200 படங்கள் வரை வெளியாகின்றன. பெரும் வணிகத்தை தன்னுள் வைத்துள்ள தமிழ்த் திரைத்துறையில் தரமான படங்களும் மற்ற மொழிகளைவிட அதிகமாகவே வெளியாகி வருகின்றன.

முன்பைவிட சர்வதேச தளத்தில் தமிழ்ப் படங்கள் விருதுகளை அள்ளிவருகின்றன. ஆனால் தேசிய விருது அறிவிக்கும்போது மட்டும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் சினிமா புறக்கணிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுவது வாடிக்கையாகிறது. சிறந்த படம், சிறந்த கதை, சிறந்த திரைக்கதை, சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த நடிகை ஆகிய பிரிவுகளில் இந்திப் படங்களே கோலோச்சுகின்றன. இசை, பாடல், பாடகர், ஆடை வடிவமைப்பு போன்ற இதர துறைகளில் தமிழ் போன்ற பிராந்திய மொழிப் படங்கள் தேர்வாகின்றன. இது வழக்கமாக இருக்கும் குற்றச்சாட்டு. ஆனால் **இந்த முறை எந்தப் பிரிவின் கீழும் ஒரு தமிழ்ப் படம்கூட தேர்வாகவில்லை.** பிரியா கிருஷ்ணஸ்வாமி இயக்கிய ‘பாரம்’ என்ற படத்திற்கு ஒரு விருது வழங்கப்பட்டது.

சிறந்த தமிழ்ப் படம் என்ற பிரிவின் கீழ் கட்டாயம் ஒரு தமிழ்ப் படத்திற்குதான் விருது கொடுக்கவேண்டும் என்பதால் அதற்கு அளித்துள்ளார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. மேலும் பாரம் திரைப்படம் இந்தியன் பனோரமா வில் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.



தமிழ் சினிமாவில் முன்னணி நாயகியாக வலம் வரும் கீர்த்தி சுரேஷ் சிறந்த நடிகைக்கான விருதை 'மகா நடி' என்ற தெலுங்கு படத்திற்காகப் பெற்றுள்ளார். தமிழ்த் திரையுலகைச் சேர்ந்த சண்டைப் பயிற்சி கலைஞர்கள் கூட்டணிக்கும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் தமிழ்ப் படத்திற்காக அல்ல. கேஜிஎஃப் என்ற கன்னட படத்திற்காக.

தமிழ் சினிமா பொழுது போக்கு அம்சத்திற்கே முக்கியத்துவம் அளிக்கிறது என்ற குற்றச்சாட்டை உதறித்தள்ளிவிட்டு தரமான படங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என அனைத்து தரப்பினராலும் சமீப காலமாக பேசப்படுகிறது. அதற்கு வலுசேர்க்கும் விதமாக **பரியேறும்பெருமாள், மேற்குதொடர்ச்சி மலை, 96, வட சென்னை, ராட்சசன் என பல நல்ல படங்கள் கடந்த ஆண்டு வெளியாகி ரசிகர்களிடையேயும் நல்ல வரவேற்பைப் பெற்றன.**

அப்படியிருக்க எந்தப் பிரிவின் கீழும் தமிழ்ப் படங்கள் தேர்வாகாதது ஏன் என விவாதங்கள் கிளம்பியுள்ளன.

"பத்து கோடி மக்கள் வாழும் ஒரு மாநிலத்தை, நல்ல சினிமாவுக்கான முயற்சி நடைபெறும் காலகட்டத்தில் புறக்கணிப்பது வேதனை மட்டுமல்ல,' விருது குழுவின் போதாமையும்கூட. தமிழ் சினிமா துறையினர் ஒற்றுமையாக இந்த பாகுபாட்டிற்கு எதிராக பேச வேண்டும். செயல்பட வேண்டும். பரியேறும்பெருமாள், மேற்குதொடர்ச்சி மலை உள்ளிட்ட படங்கள் கண்டிப்பாக விருதுப் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும்" என்கிறார் மாற்று சினிமாவுக்காக இயங்கிவரும் தமிழ் ஸ்டுடியோ அமைப்பின் நிறுவனர் அருண்.



அறம் படத்தின் இயக்குநர் கோபி நயினார், "விருதுக்கு தேர்வான படங்களின் பட்டியலைப் பார்க்கும் போது மத அரசியல் திரைத்துறைக்குள்ளும் வந்துவிட்டதோ எனத் தோன்றுகிறது. ஒரு கட்சி மத அரசியலை பேசிவிட்டு போகட்டும். ஆனால் ஒரு அரசு அதை முன்னெடுக்ககூடாதல்லவா? இவர்களது இந்த அரசியலையும் நாம் நம் படங்களில் பேச வேண்டும். பொதுவாக தமிழ் சினிமாவில் நிகழ்கால அரசியலைப் பேசும் படங்கள் அதிகளவில் வரவேண்டும். தமிழ் சினிமா புறக்கணிக்கப்படுகிறதா என்று கேள்வி எழுப்புகிறோம்; இது போன்ற பல விஷயங்களுக்கு சேர்ந்து குரல் கொடுக்க இங்கு கலைஞர்கள் மத்தியில் ஒரு ஒருங்கிணைப்பு ஏற்படவேண்டும்" என்றார்.

இந்த விவகாரம் குறித்து நாம் பேசிய பலரும் தேர்வுக்குழுவினரின் ஆதிக்கத்தை குற்றம் சாட்டுகின்றனர். "எந்த மாநிலத்தவர்கள் தேர்வுக் குழுவில் அதிகம் உள்ளனரோ அந்த மாநிலத்தவர்களுக்கு விருதுகள் அதிகம் கிடைக்கின்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தேர்வுக்குழு உறுப்பினர்களாக சென்ற போது நம்மவர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதையும் மறுக்க முடியாது. இது கண்டிக்கப்பட வேண்டிய முறை" என்று அருண் எடுத்துரைத்தார்.



இயக்குநர் அமீர், "கடந்த பத்தாண்டுகளில் தேசிய விருதுகள் வழங்குவதில் ஒரு அரசியல் சார்பு உள்ளது" என்றார். மேலும் அவர், "2007ஆம் ஆண்டு எனது பருத்திவீரன் திரைப்படம் சிறந்த நடிகை, சிறந்த படத்தொகுப்பு என இரு விருதுகளைப் பெற்றது. ஆனால் அப்போது நான் விருதுக்காக எந்த முயற்சியும் எடுக்கவில்லை. என் படமே முட்டி மோதி அதுவே தனக்கான விருதைப் பெற்றுக் கொண்டது. நம்மவர்களும் தேர்வுக் குழுவில் இடம்பெற வேண்டும். சிறந்த நடிப்புக்கான விருது சிவாஜி கணேசனுக்கு வழங்கப்படவேயில்லை. பாலு மகேந்திரா

போய்தான் ஸ்பெஷல் ஜூரி பிரிவின் கீழ் அவருக்கு விருதைப் பெற்றுத் தர முடிந்தது. அதற்காக அவர் தேர்வுக் குழுவில் கடும் வாக்குவாதம் செய்ய வேண்டியிருந்தது.

தயாரிப்பாளர்கள் சங்க ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான ஜே.எஸ்.கே சதிஷ், பரதேசி, தங்கமீன்கள், குற்றம் கடிதல் உள்ளிட்ட தேசிய விருதுபெற்றப் படங்களைத் தயாரித்தவர்.

அவரிடம் பேசும் போது, “நம்மிடமிருந்து நல்ல படங்கள் சென்றுள்ளன. ஆனால் நமது மொழியை, கலாச்சாரத்தை புரிந்து கொள்ளக் கூடிய, உள்வாங்கக் கூடிய தேர்வுக்குழு உறுப்பினர்கள் அமையாமல் போனது துரதிர்ஷ்டவசமானது. இது தேர்வுக்குழுவினரின் போதாமையா என்றால் அதுவும் இல்லை. ஏனென்றால் தேசிய விருது பெற்றவர்கள்தான் தேர்வுக் குழுவுக்கு செல்ல முடியும். எனக்கும் கடந்தமுறை தேர்வுக் குழுவில் கலந்துகொள்ள அழைப்புவிடுக்கப்பட்டது. ஆனால் எதிரபாராத விதமாக கலந்துகொள்ள முடியாமல் போனது. நாமும் அதில் கலந்துகொண்டால் மற்ற உறுப்பினர்களிடம் படம் கூறும் விஷயங்களை எடுத்துச் சொல்லி அடுத்த சுற்றுக்கு கொண்டு செல்ல முடியும்” என்றார்.

“தேர்வுக்குழு உறுப்பினர்களின் முடிவுதான் இந்தப் பட்டியல் என்பது இருக்கட்டும். அவர்கள் எந்த அடிப்படையில் இவர்களை தேர்ந்தெடுத்தார்கள். போட்டியிட்ட மற்ற படங்கள் எதில் தவறியுள்ளன என்பது பற்றியும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அப்போது படத்தைப் பார்த்த மக்களும் தெரிந்துகொள்வார்கள் தானே” என்று தனது பார்வையை வெளிப்படுத்தியுள்ளார் கோபி நயினார்.


**தமிழ் சினிமா பொழுது போக்கு அம்சத்திற்கே முக்கியத்துவம் அளிக்கிறது என்ற குற்றச்சாட்டை உதறித்தள்ளிவிட்டு தரமான படங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என அனைத்து தரப்பினராலும் சமீபகாலமாக பேசப்படுகிறது. அதற்கு வலுசேர்க்கும் விதமாக பரியேறும்பெருமாள், மேற்குதொடர்ச்சி மலை, 96, வட சென்னை, ராட்சசன் என பல நல்ல படங்கள் கடந்த ஆண்டு வெளியாகி ரசிகர்களிடையேயும் நல்ல வரவேற்பைப் பெற்றன.**

தமிழ்ப் படங்களை ஏன் தேர்வு செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டை விடுத்து விருது பெற்ற படங்களின் தரங்களைப் பற்றி பேசலாம் என்றாலும் அதுவும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை என்பதையே பலரும் வலியுறுத்துவதைப் பார்க்க முடிகிறது.

– ‘மின்னம்பலம்’


## *வாசகர்களிடமிருந்து...*

சூழல் ஆய்வாளர் நக்கீரன் பேட்டியில், நாகை மாவட்டம் மாதிரிமங்கலம் என்ற பார்ப்பன ஆதிக்கம் நிறைந்த கிராமத்தில் பெரியார் தொண்டர் என்.டி. சாமி நடத்திய ஜாதி ஒழிப்புப் புரட்சிகளை எடுத்துக் காட்டியிருந்தார். ஊருக்கு வெளியே இருந்த சேரிகளை ஊருக்கு நடுவே குடியமர்த்தியதோடு, சொந்தமாக தேனீர்க் கடை தொடங்கி, தலித் மக்களை ‘பெஞ்சு’களில் அமர வைத்து பொதுக் குவளையில் தேனீர் வழங்கியிருக்கிறார். அக்காலத்தில் இவை மகத்தான புரட்சி. இதன் காரணமாக ஜாதி உணர்வாளர்கள் அவரது கடைகளையே புறக்கணித்திருப்பார்கள் என்பது உறுதி. பொருள் இழப்பையும் ஏற்று, இந்த மாற்றத்தை செய்து முடித்திருக்கிறார். சாவுக்கு தலித் மக்கள் பறை அடிக்கும் அவலம் முதன்முதலாக இந்த கிராமத்தில் தான் நிறுத்தப்பட்டது என்பது மிகச் சிறந்த வரலாற்றுக் குறிப்பு. உள்ளூர்களில் எத்தனையோ பெரியார் தொண்டர்கள் பார்ப்பன ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து நடத்திய




போராட்டங்கள் பதிவுகள் இல்லாமலே போய் விட்டதே என்பது தான் வேதனை அளிக்கிறது.

**– பிரசாந்த், திருப்பூர்**



# சமண-புத்த மதங்களை அழித்தது யார்?

## சைவத்தின் மதமாற்ற வன்முறைக்கான வரலாற்றுச் சான்றுகள்

**கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மதமாற்றங்கள் செய்து வருகின்றன என்று உயர்நீதிமன்ற நீதிபதி வைத்தியநான் ஒரு தீர்ப்பில் கூற கடும் எதிர்ப்பு வந்தவுடன் அப்பகுதியை திரும்பப் பெற்றுக் கெண்டார். உண்மையில் தமிழ்நாட்டில் சமண-பவுத்த மடங்களை அழித்து சைவமாக்கியதோடு அதற்காக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டதும், சைவர்கள்தான் என்பது வரலாறு. அதற்கான வரலாற்றுச் சான்றுகளை முன் வைக்கிறது இக்கட்டுரை.**

கி.பி. அய்ந்து ஆறு ஏழாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சமண சமயமும் பவுத்த மதமும் பெரிதும் செழித்து வளர்ந்திருந்தது. சைவ வைணவ மதங்கள் முடங்கிக் கிடந்தன. மக்களில் பெரும்பாலோர் சமணராகவும் பௌத்தராகவும் இருந்தனர். நாட்டை ஆண்ட மன்னர்களும் சமண பவுத்த மதங்களைத் தழுவியிருந்தனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சைவ அடியார்களான நாயன்மார்களும், வைணவ அடியார்களான ஆழ்வார்களும் ‘பக்தி’ இயக்கத்தை ஆயுதமாகக் கொண்டு சமண பவுத்த மதங்களை அழித்திட முற்பட்டனர்.

‘சமண சமயம் பலவிதத்தில் தாக்கப்பட்டது. கொடுமைப்படுத்துதல், கழுவேற்றுதல், கொலை செய்தல், கலகம் விளைவித்தல், நில புலங்களைக் கவர்தல் முதலிய செயல்கள் நிகழ்ந்ததைக் காண்கிறோம். இந்துக்கள் சமண மதத்தை அழித்த செய்திகள் பல உள்ளன.

- மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக்கம் 68.

‘வெறுப்போடு சமணர் முண்டர் வீதியில்
சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரியன்கள் பேசில் போவதே
நோயதாகிக்
குறிப்பெனக் கடையுமாகில் கூடு மேல்
தரையை ஆங்கே
அறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமா
நகருளானே!’

- தொண்டரடிப் பொடியாழ்வார், திருமலை, எட்டாவது பாடல்.

ஆழ்வாரின் இந்தப் பாடலின் மூலம் அக்காலத்தில் சமயப் போர் எவ்வளவு வேகம் கொண்டிருந்தது என்பது விளங்குகிறது. இங்கு சாக்கியர்கள் என்று வருவது பவுத்தர்களைக் குறிக்கும்.

### திருநாவுக்கரசர்

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பாடலிபுத்திரத்தில் சிறப்புப் பெற்றிருந்த சமணப்பள்ளி இருந்தது. இங்கிருந்து தான் சர்வநந்தி என்பவர் ‘லோகவிபாகம்’ என்னும் நூலை எழுதினார். கி.பி. 458இல் சிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் காஞ்சிபுரத்தை அரசாண்டிருந்தபோது அவ்வரசனது இருபத்திரண்டாவது ஆட்சி ஆண்டில் ‘லோகவிபாகம்’ பாகத மொழியிலிருந்து வட மொழியில் மொழி

பெயர்க்கப்பட்டது. இதன் பிறகு நூற்று அறுபது ஆண்டுகளுக்கு பின்னர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழானார், மாதினியார் புதல்வராகப் பிறந்தவர் மருணீக்கியார். இவரது சமய அறிவால் சமணர்கள் 'தருமசேனர்' என்னும் பெயர் கொடுத்து அவரைப் போற்றினார்கள். நெடுங்காலம் சமணகுருவாக பாடலிபுத்திர சமணப் பள்ளியில் இருந்த தருமசேனர் சமண சமயத்தை விட்டு சைவ சமயத்திற்கு வந்த போது தான் திருநாவுக்கரசர் என்ற பெயர் மாற்றம் பெற்றார்.

- மயிலை சீனி. வேங்கடசாமி,
மகேந்திரவர்மன், சென்னை, பக். 37-29
-Mysore Archaeological Report, 1909-10, Page 112

**சமண மதம் துடைக்கப் படுதல்**

சமண சமயத்தவனாக இருந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மனைச் சைவ சமயத்தில் திருநாவுக்கரசர் சேர்த்தார். அத்தோடு நின்று விடாமல், தாம் அப்பர், தருமசேனர் என்னும் பெயருடன் தங்கியிருந்த பாடலிபுத்திர சமணப் பள்ளியை இடித்துத் தள்ளவும் ஏற்பாடு செய்தார்.

பல்லவ அரசனும் சமணக் கல்லூரியை ஒழித்தான். பள்ளிகளையும் பாழிகளையும் அழித்தான். அவற்றின் சிதைவுகளைக் கொண்டு வந்து திருவதிகையிற் 'குணதரஈச்சரம்' என்று தன் பெயரால் கோவில் ஒன்று கட்டினான்.

இங்கு சமணர் கோவில் இருந்தது என்பதை உறுதிப்படுத்த மஞ்சக் குப்பம் சாலையில் யாத்திரிகர் பங்களாவுக்கு அருகில் இன்றும் சமணத்திற்கு உருவம் காணப்படுகிறது.

-South Arcot District, Gazetter, Page 369.

**பெரிய புராணம் தரும் செய்தி**

வீடறியாச் சமணர் மொழி பொய்யென்று
மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின் கட்கண்ணுதற்குப்
பாடலிபுத்திரத்தில் மண் பள்ளியொடு
பாழிகளுங் கூட
இடித்துக் கொணர்ந்து குணதரவீச்சரம்
எடுத்தான்.

- தெய்வப் புலவர் சேக்கிழாரடிகள்
அருளிய திருத்தொண்டர் மாக்கதை,
ப.இராமநாதபிள்ளை - திருநாவுக்கரசு நாயனார்
புராணம், பாடல் 146, பக்கம் 289.

**திருஞான சம்பந்தருக்கனுப்பிய தூது!**

'மங்கையர்க்கரசியும் குலச்சிரையாரும் ஒரு பிராமணன் மூலமாக திருஞான சம்பந்த மூர்த்திக்கு ஒரு திருமுகம் அனுப்பி, மதுரைக்கு வந்து சமண இருளைப் போக்கி சைவப் பயிர் முன் போல் தழைக்க அனுக்ரஹிக்கும்படி வேண்டினர்.'

-கா.சு. சேஷகிரி அய்யர், சிவபிரானது 64
திருவிளையாடற் சுருக்கம், பக்கம் 84.

**கழுவிலேறிய சமணர்கள்!**

'பாண்டியவரசர் குலச்சிறை நாயனாரை நோக்கி சமணரைக் கழுவிலேற்றி முறை செய்யுமாறு பணித்தார். பிள்ளையார் அவர் செய்த சிவா பராதங்கருதி விலக்காதிருந்தார். குலச்சிறை நாயனார் முறை செய்யச் சமணர் யாவரும் கழுவிலேறி மாண்டார்கள்.'

- சதாசிவ செட்டியார், தேவாரப்
பதிகங்கள், சென்னை 1925, பக் 18

'அரசர் குலச்சிறையாரை நோக்கி, 'சமணர் களைக் கழுவிலே ஏற்றுக' என்று ஆஞ்ஞா பித்தார்..... திடபக்தியுடைய அமைச்சர் குலச் சிறையார் கழுத்தறிகளை நிறையாக நாட்டு வித்து அவைகளில் ஏற்ற, அதிபாதகர்களாகிய சமணர் கள் எண்ணாயிரவரும் தானாகவே ஏறினார்கள்.'

- ஏ.ஜி.கோமதி அம்மாள், திருத் தொண்டர்
பெரிய புராணம், சைவம் வளர்த்த அரசி,
கோவில்பட்டி, 1948, பக்.18

'அமைச்சர் குலச்சிறையார் கழுத்தறிகளை நாட்டிய பின் தோல்வியுற்று நின்ற சமணர் அனைவரும் அத்தறிகளில் ஏறி உயிர் துறந்தனர்.'

க. வெள்ளைவாரணன், பன்னிறு திருமறை
வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
1972, பக்.144

(கழுவில் ஏற்றப்பட்டனர் என்பதே உண்மை)

**சமணர்கள் அனுபவித்த கொடுமை!**

'மன்னன் சமண விரோதியாகி, பாண்டிய நாட்டிலுள்ள சமணர்களை வெட்டி வீழ்த்தி, அவர்கள் சொத்து, சுதந்திரம், கோயில், குளம், மடம் முதலியவைகளைக் கைப்பற்றும்படி தன் சைன்யங்களை ஏவியதோடு, தன் முன்னிலை யிலேயே அநேக ஆயிரக்கணக்கான சமண முனிவர்களை வலியப் பிடித்து கழுமரத்திலேற்றி பதைக்கப் பதைக்கக் கொன்றான்.'

-அ. பொன்னம்பலம், அப்பரும் சம்பந்தரும்,
சென்னை, 1983, பக். 28

‘கழுவிலேறாத சமணர்களை எல்லாம், சைவாச்சாரத்தைக் கொண்டவர்கள் ஒவ்வொருத்தராகப் பிடித்து அந்த முத்தலைக் கழுமரங்களிலே ஏற்றியிருத்திக் கொன்றார்கள். அந்த சமணர்களுக்குப் பாரம்பரியாக அடியார் களானவர்கள் சாவப்பயந்து மனங்குலைந்து விபூதி பூசிக் கொண்டார்கள். அந்த விபூதி கிடையாமல் பசுவின் கோமயத்தை எடுத்திட்டுக் கொண்டார்கள். அதுவும் கிடைக்காத சிலர் பசுவின் கன்றைத் தோள் மேலே தூக்கிப் போட்டுக் கொண்டார்கள்.’

‘விபூதி, கோமயம், பசுவின் கன்று இந்த மூன்றுங் கிடையாத சிலர் விபூதி பூசின நெற்றியுடனே நெற்றியை மோதிப் பூசிக் கொள்ள கோமயத்திலுமப்படியே மோதியிட்டுக் கொண்டும் இப்படியாகத் தங்கள் பாசங்களை வென்று பிழைக்க எண்ணினவர்களைக் கொல்லாமல் விட்டு விட்டனர்.’

- பூவை கலயாண சுந்தர முதலியார் பொழிப்புரை, திருவிளையாடற் புராணம்,சென்னை, 1925, பக். 494.

**நாய் நரி தின்ற சமணர் உடல்கள்!**

விபூதி பூசியவர்கள் உயிர் தப்பினர். அதற்கு உடன்பட மறுத்ததால், கழுவிலேற்றிக் கொல்லப் பட்டவர்களின் உடல்கள் என்ன ஆயிற்று தெரியுமா?

‘கழுவிலேறி இறந்தவர்களெல்லாம் சுற்றப்பட்ட பருந்துகளும், காக்கைகளும், நரிகளும், நாய்களும், தொடர்ந்து கௌவிப் பிடித்திழுத்துத் தின்னக் கிடந்தார்கள்.’

‘மற்றிவர் தம்மை யூற்றஞ் செய்திலர் யாருஞ் சுற்றிய சேனங்காக நரிகணாய் தொடர்ந்து கௌவிப் பற்றிநின் றிர்த்துத் தின்னக் கிடந்தனர்.’

- பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம், உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1937, பக். 1195.

‘கூன் பாண்டியன் சைவத்திற் புகுந்த நாளே சமணமும் வீழ்ந்த நாளாகும். அதன்பின் புத்தமதம் திரும்பத் தலை தூக்கவே இல்லை. நம்பியாண்டார் நம்பி காலமாகிய பதினோறாவது நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து அவை அழிந்து போயின.’

- பெ. சுந்தரம் பிள்ளை எழுதிய ‘திருஞான சம்பந்தர் காலம்’ என்ற ஆங்கில நூல்.

‘திருஞான சம்பந்தர் மதுரையில் எட்டு ஆயிரம் சமணரைக் கழுவில் ஏற்றினார் என்று சைவ சமய நூல்களாகிய பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், தக்கயாகப் பரணி முதலிய நூல்கள் கூறுவதும் இவற்றை நினைவுபடுத்த மதுரைப் பொற்றாமரைக் குளத்து மண்டபத்தின் சுவற்றில் சமணரைக் கழுவேற்றும் காட்சியைச்சித்திரம் தீட்டி வைத்திருப்பதும், மதுரைக் கோவிலில் நடை பெற்று வரும் உற்சவங்களில் ஐந்து நாள் கழுவேற்று உற்சவம் ஆண்டுதோறும் நடைபெற்று வருவதும் இவை நடைபெற்றதற்கு முதன்மையான சான்றுகளாகும்.’

- மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக்கம் 68.

**திருமங்கையாழ்வார்**

தொள்ளாற்றுப் போர் வென்ற நந்தியின் பாட்டனான பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் திருமங்கையாழ்வார் வாழ்ந்திருந்தார். அவர் சமண பவுத்த சமயங்களைத் தாக்கி வைணவ சமயத்தை நிலை நிறுத்தினார்.

- மாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, சென்னை, பக்கம் 277.

கி.பி. எட்டாம் நூற்றாண்டினரான இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோழ நாட்டின் ஒரு பகுதியான ஆலி நாட்டை ஆண்ட குறுநில மன்னர் திருமங்கை ஆழ்வார்.

இவர் நாகப்பட்டினத்துப் பவுத்த விகாரத்தில் இருந்த பொன்னால் வேயப்பட்ட புத்தர் சிலையைக் கவர்ந்து வந்து அதைக் கொண்டு பல கொவில் திருப்பணிகள் செய்தார். பவுத்த சமண சமயங்கள் மீது நாயன்மாரைப் போலவே மிக்க வெறுப்புற்றவர் என்பதை இவரது பாடல்களைக் கொண்டு நன்கு உணர முடிகிறது.

-மயிலை சினி வேங்கடசாமி, மூன்றாம் நந்திவர்மன், சென்னை, பக்கம் 52.
- மா.இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, பக்கம் 277.

‘திருமங்கை ஆழ்வார் திருவரங்கம் பெரிய கொவில் விமான மண்டப கோபுராதி கைங் கரியங்கள் செய்யத் திருவுள்ளமாய்ப் பொருள் தேட எண்ணுகையில் நாகப்பட்டினத்தில் ஒரு பொன்னாலான புத்த விக்ரஹமிருப்பதை அறிந்து அதை அறுத்துத் திருப்பணி செய்ய நினைத்து நாகப்பட்டினம் சென்று புத்தன் கோயிலுக்குச்

*சென்று விக்ரஹத்தை எடுத்து வந்துடைத்துச் சுட்டுரைத்து நன் பொன்னாக்கித் திருமதிள் கைங்கர்யத்துக்கு உபயோகப்படுத்தினர்.'*

*- நாலாயிர திவ்விய பிரபந்தம், சென்னை, பக்கம் 26.*

*கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை திருமூர்த்தி மலையிலுள்ள சமணர் கோவில் அமணலிங்கேசுவரர் என்று ஹிந்து மதக் கோவிலாக மாற்றப்பட்டது.*

*- புலவர் செந்தலை ந. கவுதமன், சூலூர் வரலாறு, பக்கம் 199.*

*'நாகராஜர் கோவில் தூண்களில் சமண சமயத் தீர்த்தங்கரர்களான பார்வத நாதரும், மகா வீரரும் தவக் கோலத்தில் நின்றும் அமர்ந்தும் காட்சி தருகின்றனர்.'*

*'கிபி பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் நாகராஜர் கோவில் இந்து சமய கோவிலுக்குரிய மாற்றங் களைப் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.'*

*- எஸ். பத்மநாபன்,குமரி மாவட்ட கொவில்கள், நாகர் கோவில், பக்கம் 51, 52*

*செஞ்சியை ஆட்சி செய்து வந்த வேங்கட பதி நாயக்கர் சமணர்களுக்கு மிகுந்த கொடுமை களைச் செய்தார். அதனைத் தாங்க முடியாத சமணர்கள் தப்பியோடினர். செஞ்சி அரசன் அந்நாட்டுச் சமணர் தலையை வெட்டிய காலத்தில் வேறு நாடுகளுக்குத் தப்பிப் போய் விட்ட சமணர்களில் காங்கேய உடையாரும் ஒருவர்.*

*- மயிலை சீனி. வேங்கட சாமி, சமணமும் தமிழும், பக்கம் 74.*

**திருவாரூர் திருக்குளம்**

*தமிழ்நாட்டிலே பெரிய அளவிலானதும் பதினெட்டு ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது மான திருவாரூர் திருக்குளம் இப்போதும் இருக்கிறது. திருவாரூரில் சமணர்கள் செல்வாக் குடன் இருந்த காலத்தில் அந்தத் திருக்குளம் சிறியதாக இருந்தது. அத்துடன் அந்தக் குளத்தின் நான்கு பக்கங்களிலும் சமண சமயத்தவருடைய நிலங்களும், மடங்களும், பள்ளிகளும், பாழிகளும் இருந்தன. அப்போது 'தண்டியடிகள்' என்னும் சைவ நாயனார் அந்தக் குளத்தைப் பெரிய குளமாக்கிட முயற்சி செய்தார். அங்குள்ள அரசன் சமணரை ஊரை விட்டுத் துரத்திய பின்னர் அவர் களுடைய கட்டிடங்களையும் நிலங்களையும் அழித்துப் பறித்து அந்தச் சிறிய குளத்தை இப்போதுள்ள பெரிய குளமாகத் தொண்டினான்.*

*'பன்னும் பாழிப் பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து'*

*- திருத்தொண்டர் புராணம், தண்டியடிகள், பக். 69*

*கும்பகோணம் தாலுகாவைச் சேர்ந்த திருநாகேச்சுவரர் கோயிலின் மண்டபக் கற்றூணில் உள்ள சாசனம் தென்கரைத் திமூர் நாட்டில் இருந்த மிலாடுடையார் பள்ளி என்னும் சமணக் கோவிலைக் குறிப்பிடுகிறது. திருக்கோவ லூரில் இருந்த 'மிலாட்' அரசனால் கட்டப்பட்ட இந்தச் சமணக் கோவில் பின்னால் இடிக்கப்பட்டது. அக் கோயிற் கற்களைக் கொண்டு இப்போதுள்ள திருநாகேசுவரத்துச் சைவக் கோயில் கட்டப்பட்டது. இவ்வூருக்கு அருகிலுள்ள வயல்களில் சமண உருவங்கள் இன்றும் காணப்படுகின்றன.*

*- சமணமும் தமிழும், பக்கம் 139.*

*நன்னிலம் இரயில் நிலையத்திற்கு கிழக்கே வர்த்தமானீச்சுவரர் கோயில் இப்போது உள்ளது. ஸ்ரீவர்த்தமானர் (மகாவீரர்) 24 வது தீர்த்தங்கரர். இவரத பெயரைக் கொண்டே இது பழங்காலத் தில் சமணக் கோயிலாக இருந்ததைத் தெரிந்து கொள்ள முடிகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே சைவரால் கைப்பற்றப்பட்ட இச் சமணக் கோவில் சைவக் கோவிலாக்கப்பட்டது.*

*- சமணமும் தமிழும், பக்கம் 140.*


*அய்யகோ கிறித்தவர்கள் இந்துக்களை மதமாற்றம் செய்கிறார்கள் என்று மாரடித்து ஒப்பாரி வைக்கும் பி.ஜே.பி. சங் பரிவார்கள் கூட்டம் சமணர்களைக் கொன்றொழித்த கொடுமைக்கு என்ன பதில்? திருநீறு பூசச் செய்து உயிர்ப் பிச்சை செய்த அச்சுறுத்தலை எந்தப் பட்டியலில் சேர்ப்பது! சமணர்களைக் கழுவேற்றும் காட்சிகள் செய்யாறு கோயிலுக்குச் சென்றால் சிற்பங்களாக இன்றும் பார்க்கலாமே!*

*மேலே எடுத்துக்காட்டப்பட்டவை எல்லாம் ஆதாரப் பலங்களைக் கொண்டது என்பதை மறக்க வேண்டாம்.*

**நன்றி : விடுதலை ஞாயிறு மலர்**

### கீதையின் வஞ்சகப் பின்னணி

# புரோகிதர் மேலாதிக்கம் – உருவான வரலாறு



பிரேம் நாத்பசாஸ் ஆங்கிலத்தில் எழுதிய நூலை – தமிழில் 'இந்திய வரலாற்றில் பகவத் கீதை' எனும் தலைப்பில் விடியல் பதிப்பகமும், சூலூர் வெளியீட்டகமும் இணைந்து வெளியிட்டுள்ளன. 1975ம் ஆண்டு, இந்நூலை எழுதிய பிரேம்நாத் பசாஸ் – ஒரு காஷ்மீரி. தந்தை பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு – கடவுள் மறுப்புக் கொள்கைக் கண்ணோட்டத்தோடு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது இதன் தனிச் சிறப்பாகும்.

பெரியார் இயக்கத்துக்கான வர லாற்று ஆவணம் என்று கூறுமள வுக்கு, ஏராளமான வரலாற்றுச் செய்திகளை உரிய ஆதாரங்களுடன் தொகுத்தளித்துள்ளது. அதிலிருந்து சில முக்கிய பகுதிகள்:

- *700 சமஸ்கிருத கவிதைகளைக் கொண்டது பகவத்கீதை.*
- *கீதை - இந்துமதத்தின் புனித நூலாகவும் - வழிகாட்டியாகவும் லட்சிய நூலாகவும் போற்றப்படுகிறது. அது மிகச் சிறந்த லட்சிய நூலாக இருந்திருக்குமானால், அந்த நூல் வெளிவந்த காலத்தில் நிலவிய மனித குலத்தின் சிக்கலான பிரச்சினைகளையும், கடும் துயரங்களையும் முன்னிலைப்படுத்தி விவாதித்திருக்க வேண்டும். கீதை அதைச் செய்ய வில்லை.*
- *கீதைக்கு ஏராளமான விளக்க உரைகள் வந்துள்ளன. அவை அனைத்தும், கீதையைப் புகழ்ந்து புகழேணியின் உச்சியில் ஏற்று வதற்கே போட்டி போட்டன. கீதையின் முரண்பாடுகளைப் பூசி மெழுகி, சப்பைக் கட்டு கட்டுவதற்கான முயற்சிகளிலே அவைகள் இறங்கின.*
- *கீதை உலகத்துக்கே வழிகாட்டக் கூடியது என்றும் சமூகத்தின் தலைசிறந்த ஒழுக்க நெறிகளைக் கூறுகிறது என்றும் கூறுகிறார் கள். அது உண்மையானால் பகவத்கீதையின் கோட்பாடுகளை முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்ட இந்தியர்கள் - அறிவாற்ற லிலும், தார்மீக நெறியிலும் ஏன் தாழ் நிலையை அடைந்தார்கள்? ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மனித முன் னேற்றத்தைப் பாழ்படுத்துவதற்கும் சமூகத் தீமைகளை வளர்ப்பதற்குமே கீதையின் போதனைகள் பயன்பட்டன.*
- *கருத்து முதல்வாதத்தை முன் வைக்கும் - ஆன்மீகச் சிந்தனைதான் வேத காலத்தி லிருந்து இந்தியாவில் இருந்து வரும் ஒரே சிந்தனை மரபு என்று கூறுவது வரலாற்று உண்மைகளை இருட்டடிப்பதாகும். கி.மு. 500 லிருந்து கி.பி. 500 வரை இந்தியா முழுதும் பகுத்தறிவு அடிப்படையிலான பொருள் முதல்வாத சிந்தனை மரபே நிலவியது. கீதை வலியுறுத் தும் கோட்பாடுகளையும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் ஆய்வு செய்ய வேண்டுமானால், திட்டமிட்டே மறைக்கப்பட்ட இந்த வரலாறுகளை முதலில் நாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும்.*

- பவுத்தத்தை ஒழிப்பதற்கு - 9ம் நூற்றாண்டில் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டது, இந்தப் பகவத் கீதை தான்.

- பார்ப்பனர்கள் - வரலாற்றை எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தார்களோ அதையே கடந்தகால இந்திய வரலாறாக்கி விட்டனர். பொது மனிதர்களின் பார்வையில் வரலாறை எழுத முயற்சிக்கவே இல்லை? வரலாறுகளை பார்ப்பனர்கள் எழுதிக் கொண்டார்கள்.

- கைபர் போலன் கனவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த பார்ப்பனர்களின் குறிக்கோள் - நல்ல இன்பமான வாழ்க்கை - நல்ல உடல்நலம் நோக்கியதாக மட்டுமே இருந்தன. ரிக் வேதப் பாடல்கள் இதைத்தான் வலி யுறுத்தின.

- ஆரியர்கள் - தங்களின் சிந்தனைத் தரத்துக்கு ஏற்றவாறு கடவுள்களை உருவாக்கிக் கொண்டனர். அறிவாலும், பண்பாலும், சமூகம் வளர்ச்சி பெறும் போது, இத்தகைய கடவுள்கள் தூக்கி எறியப்பட்டு விடுகின்றன. ஆனால் இந்தியர்கள் தங்களது மூட நம்பிக்கை காரணமாக, இந்தக் கடவுள் களை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

- வேதகாலக் கடவுள்கள் எப்படி கற்பிக்கப் பட்டன? கடவுள்களும் மானுடர்களில் ஒருவராகவே கருதப்பட்டு, நண்பர்களாக வும், உண்டு, குடித்து, உடன் வாழும் நண்பர்களாகவும் கருதி, வேதப்பாடல்களை பாடினார்கள்.

- சக மனிதர்களில் ஒருவனாகக் கருதப்பட்ட கடவுள். பிறகு “விண்ணுலக மாந்தராக” ஏற்றம் தரப்பட்டது. அப்போது, சடங்கு களையும், படையல்களையும், மேல் உலகுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நம்பியதால், அதைச் செய்வதற்கு “புரோகிதர்” என்ற பிரிவு உரு வானது. இந்தப் புரோகிதர்களுக்கு மட்டுமே கடவுளின் ‘சக்தி’ ‘ரகசியம்’ எல்லாம் தெரியும் என்றும், யாகப் பொருள்களையும் மந்திரங்களையும் அவர்களிடம் மேலே கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் புரோகிதர்களுக்கு மட்டுமே உண்டு என்ற கருத்து பரவியது.

- இந்தக் கருத்தை நம்பிக்கையாக மாற்றுவதற்கு புரோகிதர்கள் மாயாஜாலக் கதைகளை உரு வாக்கினார்கள்.

- இயற்கையின் விதிகளையும் - அதற்கான விஞ்ஞான ரீதியான காரணங்களையும் அறிந்திடாத மனிதன், கடவுளை மகிழ்வித்து, அதன் மூலம் - இயற்கை விதிகளைத் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள முடியும் என்று நம்பினான். இந்த நம்பிக்கையைப் பயன் படுத்திக் கொண்டு இடைத்தரகர்களாக மாறிய புரோகிதப் பார்ப்பனர்கள் - சகல அதிகாரம் படைத்தவர்களாக மாறினர். சக மனிதனாகக் கருதப்பட்டு, முதலில் ரிக் வேதத்தின் மூலம் கூறப்பட்ட பல கடவுள் கள், இப்போது புரோகிதர்களுக்கும் பயன் படாததால, அந்தக் கடவுள்களை புரோகி தர்கள் கைகழுவினார்கள். தியோசன், மித்திரன், சாவித்திரி, பூசன், ஆதித்தியன், மாருத்தியன், அதிதி, திதி, ஊர்வசி போன்ற கடவுள்களை பார்ப்பனர்களே ஒதுக்கி விட்டார்கள். (இது வேத காலப் பார்ப்பனர் களின் கடவுள் மறுப்பு). மகாதேவன் என்ற நிலைக்கு, ‘ருத்திரன்’ என்ற கடவுள் உயர்த்தப் பட்டு ‘சிவன்’ என்று பெயர் பெற்றான். இந்த ‘சிவன்’ யாக சாலையில் கறுப்பு உடையில் தோன்றி, யாகத்தில் படைக்கப்படும் பொருள்கள் எல்லாம் தனக்கே சொந்தம் என்று கேட்டதாக, புரோகிதர்கள் கதைகளைப் பரப்பினர். ருத்தரனுக்கு அடுத்த முக்கிய கடவுளாக விஷ்ணுவை உருவாக் கினார்கள். அனைத்து முக்கிய யாகங் களிலும், சிவனே நேரடியாக வந்து கலந்து கொள்கிறான் என்று புரோகிதர்கள் கதை கட்டினார்கள்.

- மக்கள் யாகங்களை நம்பி, உற்பத்திப் பொருள்களில் தங்கள் உயிர் வாழ்வதற்குப் போக, எஞ்சிய பெரும் பகுதியை யாகத்துக்கே அளித்தார்கள். பார்ப்பனர்கள் - பெரும் கொள்ளை அடித்து, பண்பாட்டுக் காவலர்களாக தங்களை மாற்றிக் கொண் டனர்.

- வேத காலத்தில் - பார்ப்பனர்கள் மதிக்கப்படு கிறவர்களாக மாறினர். பிறகு இந்த மதிப்பைப் பயன்படுத்தி, மக்களை

**சக மனிதர்களில் ஒருவனாகக் கருதப்பட்ட கடவுள். பிறகு "விண்ணுலக மாந்தராக" ஏற்றம் தரப்பட்டது. அப்போது, சடங்குகளையும், படையல்களையும், மேல் உலகுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நம்பியதால், அதைச் செய்வதற்கு "புரோகிதர்" என்ற பிரிவு உரு வானது.**

அச்சுறுத்தி, புரோகிதர்களாக மாறினார்கள், அடுத்தகட்டமாக ஆதிக்கவாதிகளாக மாறினார்கள். பிறகு - இந்த ஆதிக்கத்தைத் தொடர்ந்து காலம் காலமாகத் தக்க வைத்துக் கொள்வதற்கான திட்டங்களைத் தீட்டத் துவங்கினர். இதற்காகவே தங்கள் முழு நேரத் தையும் பார்ப்பனர்கள் செலவிட் டனர்.

- தனது தேவைக்கு ஏற்ப இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பி, அதற்காகக் கடவுளைத் திருப்தி செய்த மனிதன், சிந்தனை வளர்ந்து, இயற்கையின் மாற்றத் துக்கான காரண காரியங்களைப் புரிந்து கொண்ட பிறகு உலகின் ஏனைய பகுதிகளில், இத்தகைய சடங்குகள் அறிவியலுக்கு ஏற்ப மாற்றம் பெற்று விட்டது. ஆனால், இந்தியா வில் மட்டும், இந்த மாற்றம் ஏற்படவே இல்லை. காரணம், இந்த மந்திரங்களையும், சடங்குகளையும், தங்களிடமே தக்க வைத்துக் கொண்டுவிட்ட பார்ப்பனர்கள் - இவை களை தங்களுக்கான மந்திரங்களாகக் காப்பாற்றி, மக்கள் முன்னேற்றத்தைத் தடை செய்து, சமூகத்தில் தேக்க நிலையை ஏற்படுத்தி விட்டனர்.

- இதற்காக - யாகங்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான நூல்களை எழுதி, அதைத் தங்களுக்குள் ரகசியமாக வைத்துக் கொண்டனர். இதற்குப் பெயர் "பிராமணங்கள்" யாகங்களைப் புரியாத புதிராக்கி - யாருடைய நலனுக்காக, எந்த நோக்கத்துக்காக யாகங்கள் நடத்தப்படு கின்றன என்பதற்கு எந்த விளக்கமும் தராமல், "பிராமணங்களை" உருவாக்கிக் கொண் டனர். இதன் மூலம் பிராமணங்களைப் படித்தவர்கள் கூட - யாகங்களை செய்ய முடி யாது; பார்ப்பனப் புரோகிதர்களால் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஆதிக்க வாதிகளாக மாறிய பார்ப்பனர்கள், இதன் மூலம் - மூன்றாவது கட்டமாக - தங்களைக் கடவுளுக்குச் சமமாக அடுத்தக் கட்டத்துக்கு உயர்த்திக் கொண்டுவிட்டனர்.

- இதன் மூலம் - பார்ப்பனப் புரோகிதர்கள் கடவுளின் ஒரு பிரிவு; மற்ற கடவுளர்கள் ஒரு பிரிவு என்ற நிலை வந்தது. யாகங்கள் - இந்த இரண்டு பிரிவினருக்கும் பங்கிடப்பட்டன. சுலோகங்களும், சடங்குகளும் கடவுளுக்கும் யாகப் பொருள்கள் மற்றொரு கடவுளான பார்ப்பனர்களுக்கும் என்று பங்கீடுகளை உருவாக்கினார்கள்.

- படிப்படியாக - பார்ப்பனர்கள் தங்களை உயர்த்திக் கொண்டே போனதற்கு, சமூகத்தில் எதிர்ப்புகளும் வரத் துவங்கின. இந்த எதிர்ப்புகளை சமாளிக்க - பார்ப் பனர்கள், அடுத்த கட்டத்துக்கு தங்களை உயர்த்திக் கொண்டார்கள். கடவுளுக்கும் மேலாக, படைப்பில் முதன்மையானவர் களாகத் தங்களை அறிவித்துக் கொண்டனர். இதற்காக 'பிராமணங்களில்' சில இடைச் செருகல்களைச் செய்து கொண்டனர். அப்படி இடைச் செருகலாக வந்தவைகளில் ஒன்று தான் 'சதபதபிராமணம்'. "ரிஷிகளின் மரபுகளில் வந்த புரோகிதப் பார்ப்பான் - கடவுளுக்கு எல்லாம் கடவுள்; அனைத்துக் கடவுள்களும் அவனுக்குள் அடக்கம்" என்று 'சதபத பிரமாணம்' கூறுகிறது.

- பார்ப்பனப் புரோகிதக் கும்பலின் இந்த மூர்க்கமான கொடுங்கோல் ஆதிக்கம், மத்திய காலத்துக்கு முந்தைய இந்திய வரலாறு முழுதும் நிலவியது. மன்னர்களே பார்ப்பனர்களைக் கட்டுப்படுத்த முடியாது. மன்னர்கள் பதவி ஏற்கும் போது புரோகிதன் கூறுவான்: "மக்களே, நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்த மனிதன் உங்களுக்குத் தான் அரசன். ஆனால் சோமன் தான் பார்ப்பனர்களுக்கு அரசன்".

- வேதங்கள் - மனிதர்களால்தான் பாடப் பட்டன. இதற்கு வேதங் களிலேயே சான்றுகள் உண்டு. ஆனால் பார்ப்பனர்கள் வேதங்கள் கடவுள்களால் பாடப்பட்டவை என்று பச்சையாகப் பொய் கூறினார்கள். எனவே கடவுளே பார்ப்பனர்கள்தான் என்று சாதித்தார்கள்.

- எதிர்ப்புகள் நசுக்கப்பட்டன; அதற்காகவே 'மனுதர்மம்' வந்தது. வேதத்தைக் கேட்க சூத்திரர்களுக்கு தடை போட்டார்கள். "வேதங்கள் விவாதங்களுக்கு அப்பாற் பட்டது" என்று மனுதர்மம் கூறியது. எனவே வேதங்களை இயற்றியது கடவுள் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். வேதத்துக்குப் பணிய மறுத்தால், சமூகத்தை விட்டு விரட்டப்பட்டு விடுவார்கள் என்று 'மனு'வின் சட்டம் மிரட்டியது.

- கி.பி.7 அல்லது 8 ஆம் நூற்றாண்டுகளிலேயே மரப்பட்டைகளிலும், ஓலைகளிலும் எழுதி வைக்கும் எழுத்து வடிவங்கள் வந்துவிட்டன. ஆனால் பார்ப்பனர்கள் - எழுத்து வடிவம் வந்த பிறகும்,வேதங்களை எழுத்து வடிவில் பதிவு செய்யவே இல்லை. காரணம் இவைகள் மற்றவர்களிடம் பரவினால், தங்கள் ஆதிக்கம் தகர்ந்துவிடும் என்பதால் தான். இதன் காரண மாகத் தான் மரப்பட்டை, ஓலைகளில் கண்டு பிடிக்கப்பட்ட இந்திய எழுத்து வடிவங்கள் எதிலும், வேதங்கள் கிடைக்கவே இல்லை. இந்தியாவில் இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் அனைத்துமே பவுத்த மதத்தைச் சார்ந்தவைகளாக மட்டுமே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பவுத்தத் துறவிகள் இயற்றிய "வசிஷ்ட தர்ம சாஸ்திரம்" தான் முதன் முதலில் எழுத்து வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டதாகும்.

## ஊடுறுவல் எனும் சதி

- பார்ப்பனர்களின் சடங்கு - யாகங்களில் வெறுப்பும், சலிப்புமடைந்த ஒரு கூட்டம் - காடுகளை நோக்கி, 'தபசு' செய்யப் புறப்பட்டது. பார்ப்பனர்களிலே சிலரும் - பெருமளவு சத்தியர்களுமே, இப்படிக் காட்டை நோக்கிக் கிளம்பியவர்கள். தங்களை வருத்திக் கொண்டு, வாழ்க்கையின் துயரங்களுக்கு விடை தேடும் முயற்சிகளில் இவர்கள் இறங்கினார்கள். இவர்கள் யாகங்களை எதிர்த்தனர். அதைவிட 'தியானமே' சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள். இவர்கள் அப்போது எழுதிய நூல் தொகுதிகளுக்குப் பெயர் "ஆரண்யகங்கள்". யாக மந்திரங்களின் மோசடிகளையும், புரோகிதர்களின் நயவஞ்சகத்தையும், இந்த 'ஆரண்யகங்கள்' தோலுரித்தன. இயற்கையின் புதிர்களுக்கான விடைகளை பகுத்தறிவின் அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கினர்.

- முதலில் வந்த 'ஆரண்யகங்கள்' பிராமணங் களின் 'கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டன. பிறகு பிராமணங் களை முற்றாக ஒதுக்கிவிட்டு ஆரண்யகங்களை விரிவுபடுத்தி எழுதினார்கள். அதுதான் 'உப நிஷத்துக்கள்'. புத்தமதம் தொடங்கப்படும் காலம் வரை, இந்த உபரிஷதங்கள் புதிது புதிதாக வந்து கொண்டே இருந்தன. உபரிஷதங்களின் காலம் - புத்த மதம் தொடங்கிய கி.மு. நான்காம் நூற்றாண்டோடு முடிவடைந்து விட்டது. உபநிடதங்களின் காலம் முடிவுக்கு வந்தாலும் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை உபநிடதங்கள் எழுதப் பட்டுக் கொண்டே இருந் தன. உபநிடதங்களில் வேதத்துக்கு எதிரான கருத்துகளும் உண்டு. ஆனால் பார்ப்பனர்கள், வேதங்களின் இறுதி வடிவமே உப நிடதங்கள் என்று கூறுகிறார்கள். இதில் அடங்கியுள்ள கருத்துகளுக்கு 'வேதாந்தம்' என்று பெயர்.

  200க்கும் மேற்பட்ட உபநிடதங்கள் இருக்கின்றன. ஆனால் வேதத்தோடு இணைத்துப் பார்க்கப்படுவது 108 உபநிடதங்கள் தான். ஆனால், புரோகிதக் கலாச்சாரத்துக்கு, சத்திரியர்களிடமிருந்து (அரசாளும் பிரிவு) எழுந்த முதல் எதிர்ப்பை உபநிடதங்களில் காண முடிகிறது.

- அரசர்களாக இருந்த சத்திரியர்களுக்கும், புரோகிதப் பார்ப்பனர்களுக்கும் சமூகத்தில் யாருக்கு அதிக அதிகாரம் என்பதில், பகைமை முற்றிக் கொண்டே வந்தது. சில சத்திரிய மன்னர்களே, பார்ப்பனர்களின் வேதங்களை யும், யாகங்களையும் கற்றுக் கொண்டு, புரோகி தர்களைப் புறக்கணித்தனர். உதாரணமாக ஜனமே ஜெயன் என்ற மன்னன், புரோகிதர் களை அழைக்காமலே யாகம் நடத்தினான்.

- உபநிடதங்களில் மறுபிறப்பு - மறு உலகம் - கடவுள் - ஆன்மாவை மறுக்கும் கருத்துக்கள் அங்குமிங்குமாக காணப்படுகின்றன. 'சுவம் சவேதம்' என்ற ஒரு உபநிடதம் பகுத்தறிவுக் கருத்துக்களைக் கூறுவதோடு மூடநம்பிக்கை களைச் சாடுகிறது.

- ஆனால், ஒரு திட்டமிட்ட வர லாற்று மோசடி அரங்கேற்றப் பட்டது. பகுத்தறிவைப் பேசிய உபநிடதங்களைப் பார்ப்பனர்கள் முழுமை யாகப் புறக்கணித்தார்கள். கருத்து முதல்வாத அடிப்படையில் ஆன்மீகம் பேசிய உப நிடதங்களை மட்டுமே பார்ப்பனர்கள் பிரகடனப்படுத்தினார்கள். இப்போது தொகுக்கப்பட்டுள்ள 'வேதாந்தத் தில்' கருத்து முதல்வாதத்தை முன்னிறுத்தும் - 'ஆன்மீகம்' பேசும் உபநிடதங்கள் மட்டுமே இடம் பெற் றுள்ளன. இந்திய தத்துவ இயலில் இதுவே அதிகார பூர்வமானது என்று உறுதியாக்கி விட்டார் கள். முதலில் வேதங்கள் - பிறகு பிரா மணங்கள்; இதிலிருந்து ஆரண்யங்கள்; இறுதி யாக உபநிஷத்துக்கள் என்று வந்து, 'வேதாந் தம்' என்று இறுதி வடிவம் எடுத்தது. சக மனிதனாக வேதங்களில் பாடப்பட்ட கடவுள் களை விண்ணுலகத்தவராக மாற்றி, பார்ப் பனர்கள் முதலில் மதிக்கப்பட்ட மனிதர்கள் என்ற நிலையிலிருந்து, புரோகிதர்களாக மாறி ஆதிக்கவாதிகளானார்கள். அடுத்த கட்டமாக, தங்களையும் கடவுளுக்கு சமமாக்கிக் கொண்டார்கள். இறுதியாகத் தங்களையே கடவுளுக்கும் மேலானவர்களாக்கிக் கொண் டனர்.

  இப்படித்தான் புரோகிதர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொண்டனர்.

- வேதங்களில் துவங்கி - வேதாந்தம் வரை பல்வேறு மாறுதல்களுக்குட்பட்ட சிந்தனைப் போக்குகளில் - வேத எதிர்ப்புக் கருத்துக்களும் உள்ளடக்கமாக இருந்தாலும் - வேதச்சார்பு சிந்தனைகளை மட்டுமே பார்ப்பனர்கள் வேதாந்தமாக்கி - மற்றவைகளை ஒதுக்கி விட்டதையும் பார்த்தோம். இதனைத் தொடர்ந்து மேலும் பல சிந்தனைகளும் இருந்தன. பூர்வ மீமாம்சம், உத்திர மீமாம்சம் அல்லது வேதாந்தம், வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் - எனும் 6 சிந்தனை மரபுகள் தோன்றின. இவைகளில் வைசேஷிகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய நான்கு மரபுகளும் பகுத்தறிவை நோக்கியே சிந்தித்தன. ஆனாலும் நாட்கள் செல்ல செல்ல - பழமைப் போக்குடன், இவைகள் சமரசம் செய்து கொண்டன.

**பரிவிராஜகர்களின் நாடு தழுவிய பிரச்சாரமும், சார்வாகரின் லோகாயதமும் - பவுதத சமண சிந்தனைகளுக்கு அடித்தள மிட்டன.**

- சாங்கியம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க - பகுத்தறிவுச் சிந்தனையாகும். இந்தச் சிந்தனைக்கு வடிவம் கொடுத்தவர் கபிலர் என்ற பார்ப்பனரல்லாதவர் இவரை 'அசுரர்' என்று குறிப்பிடுகிறார்கள். சாங்கியச் சிந்தனை களை 'அசுரர்களுக்கு' கற்றுத் தந்ததாக, 'பாகவதம்' குறிப்பிடுகிறது. உலகம் படைக்கப் பட்டது அல்ல; அது பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டது என்ற பகுத்தறிவு அடிப்படை யிலான பரிணாமக் கோட்பாடு சிந்தனைக்கு ஏற்ப இதன் கோட்பாடுகள் அமைந்திருந்தன. ஆனாலும், இதிலும் பார்ப்பனியக் கருத்துகளைப் பார்ப்பனர்கள் தந்திரமாக நுழைத்து விட்டார்கள். "சாங்கியம் - கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டது; வேதப் புரட்டுகளுக்கு எதிரானது. பின்னாட்களில் இதில் வேதங் களுக்கு ஆதரவான கருத்துகள் இடைச் செருகல்களாக சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளை எல்லாம் வெட்டி எறிந்து விட்டால்கூட, சாங்கிய மூலக் கருத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை; இதிலிருந்தே இவை இடைச் செருகல் என்பதை உறுதி செய்ய முடியும்" என்கிறார், ஆய்வாளர் கார்பே. வைசேஷி யகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய சிந்தனைகளின் பகுத்தறிவுக் கருத்துக்களை பார்ப்பனர்கள் ஊடுருவி சிதைத்த பிறகு, வேண்டா வெறுப்பாக, இவை களையும் பார்ப்பனர்கள் அங்கீகரித்தார்கள்.

- கபிலரைப் போலவே - மற்றொரு சிந்தனை யாளர் கணாதர். இவர் தோற்றுவித்தது வைசேஷிகம். இவர் கூறிய 'அணு' பற்றிய கொள்கைகள் - தாராள சிந்தனைக்கு தூண்டுதலாக இருந்தது. கபிலர், கணாதர் வழிவந்த சிந்தனையாளர்கள் - எவ்வித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமல் வேதக் கடவுள்கள், யாகங்கள், மந்திரங்கள், சடங்கு கள், உபநிடதங்கள், உட்பட அனைத்தையும் ஒட்டு மொத்தமாக நிராகரித்து, தூக்கி எறிந்தார்கள்.

- கி.மு. 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யில் ஒரு சமயத் தொண்டு அமைப்பு உருவானது. இந்த அமைப்பில் இடம் பெற்றவர்களின் பெயர் 'பரிவிராஜகர்' என்பதாகும். இவர்கள் - நாடோடிகள். வீட்டை விட்டு வெளியேறி ஊர் ஊராகச் சென்று மக்களை சந்தித்து, வைதீகப் பார்ப்பனியத்துக்கு எதிரான மதமறுப்புப் பிரச்சாரங்களை செய்தனர். பார்ப்பன புரோகிதர்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வந்தாலும், அது பற்றிக் கவலைப்படவில்லை. அறிவுப் புரட்சி நடப்பதற்கான களம் அமைத்துக் கொடுத்தவர்கள் இவர்கள் தான்.

  "இவர்களில் பார்ப்பனர்கள் எவரும் இல்லை. இவர்களின் கருத்துக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. மன்னர்கள், சான்றோர்கள், அரசு அலுவலகர்கள், வணிகர்கள், கைவினைஞர்கள், உழவர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் பரிவிராஜகர்களை வரவேற்று பெருமதிப்புச் செய்தனர்" - என்று ரைஸ்டேவிட்ஸ் என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இவர்களுக்காக - மக்கள் ஊர் தோறும் மேடைகளை அமைத்துக் கொடுத்தார்கள்.

- வேத - யாகங்களில் நம்பிக்கை இல்லாமல், வீட்டை விட்டு வெளியேறி காடுகளுக்குச் சென்று, 'தவம்' செய்த கால கட்டத்தைத் தொடர்ந்து - காடுகளுக்குச் செல்லாமல், ஊர்தோறும் சென்று மக்களை சந்தித்து சிந்தனை களைப் பரப்பும் அமைப்பு உரு வாகி, அறிவுப் புரட்சிக்கு அடித்தளமிட்டது. பரிவிராஜகர்கள் - துறவிகளின் கூட்டமைப்பு ஒன்றையும் உருவாக்கினார்கள். இதிலிருந்து முகிழ்த்தது தான், பவுத்தம், சமணம்.

- சுய சிந்தனையாளர்களின் வளர்ச்சி, பார்ப்பனர்களுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. இவர்கள் மீது வெறுப்பைத் தூண்டிவிடும் பிரச்சாரத்தைப் பார்ப்பனர்கள் மேற்கொண்டார்கள். வேதத்தை மறுப்பவர்களை 'நாத்திகர்கள்' என்றும் வேதத்தை நம்புகிறவர்களை 'ஆத்திகர்கள்' என்றும் பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆத்திகம்-நாத்திகம் என்பது பார்ப்பனர்கள் உரு வாக்கிய சொற்றொடர்களே! (கடவுளை மறுப்பவர்கள் நாத்திகர்கள் அல்ல; வேதத்தை மறுப்பவர்களே நாத்திகர்கள் என்று இறந்து போன சங்கராச்சாரியும் கூறியிருக்கிறார்.)

- பவுத்த - சமண மதங்களுக்கு அடித் தளமிட்ட மற்றொரு சிந்தனை 'லோகாயதா'. இந்தச் சொல்லுக்கு 'மக்களிடையே பரவி இருப்பது' என்பது பொருள். இது முழுமையான கடவுள் - வேத மறுப்பு சிந்தனைகளைக் கொண்ட அமைப்பு. ரிக்வேத காலத்திலேயே - இது தோற்றம் கொண்டுவிட்டது. ஆனால் லோகாயதவாதிகளின் நூல்கள் முழுவதையும் பார்ப் பனர்கள் - அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அழித்துவிட்டார்கள். இவர்களின் முக்கிய இலக்கியமான 'பிரகஸ்பதி சூத்திரம்' (கி.பி.600) முழுதுமாக அழிக்கப்பட்டு விட்டது. பார்ப்பனர்களின் 'இதிகாசங்களிலும்', புத்தரது உரையாடல்களிலும் லோகாயதவாதம் பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. "இந்தியப் பொருள் முதல் வாத சிந்தனைகளை (பார்ப்பன வேத - எதிர்ப்பு சிந்தனை) அவற்றின் எதிர்ப்பு இலக்கியங்களிலும், திறனாய்வு நூல்களிலும் காணப்படும் மேற்கோள்களிலிருந்து மட்டுமே அறிய முடிகிறது" என்கிறார், முன்னாள் குடியரசுத் தலைவரும் - இந்து மத ஆய்வாளருமான பார்ப்பனர் இராதா கிருஷ்ணன்.

- லோகாயதக் கருத்துக்களை எளிமையாக விளக்கியவர் - சார்வாகர். இதனால் பார்ப்பனர்களின் பழிப்புக்கும், தூற்றுதலுக்கும் உள்ளானார். 'சார்வாகம்' என்ற சொல்லுக்கு 'இனிமையான பேச்சு' என்று பொருள்.

  இப்படி பரிவிராஜகர்களின் நாடு தழுவிய பிரச்சாரமும், சார்வாகரின் லோகாயதமும் - பவுதத சமண சிந்தனைகளுக்கு அடித்தளமிட்டன.

- உபநிடதங்களில் கூறப்பட்ட சிந்தனைகள்; கணாதர், கபிலர் போன்ற சிந்தனையாளர்களின் புரோகித எதிர்ப்பு கருத்துக்கள்; பரிவிராஜகர்கள் எனும் நாடோடிப் பிரச்சாரகர்களின் வேத மத எதிர்ப்புப் பிரச்சாரம்; எல்லாவற்றுக்கும் மேலாக சார்வாகர்களின் பகுத்தறிவுக் கருத்துகள் - எல்லாம் சேர்ந்து, பார்ப்பனர்கள் சமூக மேலாதிக்கத்தைக் கேள்விக்குறியாக்கின. பார்ப்பனர்களின் ஆதிக்கப்பிடி குலையத்

துவங்கியது. சமூகம் ஒரு சிந்தனைப் புரட்சிக்கு தயாராகிக் கொண்டிருந்தது.

- பார்ப்பனர்களுக்கு எதிரான இந்தப் புதிய சிந்தனைகளைப் பிரச்சாரம் செய்தவர்கள் - அரசு அதிகாரத்தில் இருந்த சத்திரியர்கள்கள் தான். உபநிடத காலத்துக்குப் பின்பு, வணிக சமூகத்தின் துணையுடன், சத்திரியர்கள் பார்ப்பன புரோகித ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள்.
- பார்ப்பன வேத மரபுகளுக்கு எதிரான மெய்யியல் சிந்தனை மரபுகளை நிறுவியவர்கள் அனைவருமே பார்ப்பனரல்லாதார் என்பதில் எவ்வித அய்யமும் இல்லை. சிலர் பிற்படுத்தப் பட்டவர்கள், சிலர் அடிமைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள்; சிலர் "தீண்டத்தகாதவர்கள்".
- புத்தர் சத்திரிய இனத்தைச் சார்ந்தவர். சாக்கிய குல மன்னர் வம்சத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை சுத்தோதனன் நேபாளப் பகுதியில் கபிலவஸ்து என்ற நகரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். அரசரின் துணைவி மாயாதேவி. இருவருக்கும் கி.மு.543இல் லும்பினி என்ற சிற்றூரில் சித்தாந்த கவுதமன் மகனாகப் பிறந்தார்.
- இளவரசராக வளர்ந்தும் - அரண்மனையை விட்டு வெளியேறிய சித்தார்த்தன் - முனிவர்களிடம் பாடம் கற்பது - ஆழ்ந்த தியானம் செய்வது என்று பல ஆண்டுகளைக் கழித்தார். பரிவிராஜகர் என்ற நாடோடிப் பகுத்தறிவுப் பிரச்சாரகர்களுடன் இணைந்து, பல இடங்களில் சுற்றித் திரிந்து விவாதித்தார். இறுதியில் அவர் உருவாக்கிய புத்த மார்க்கம் - சமூகத்தில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது.
- பிக்குகளின் சங்கம் ஒன்றை உருவாக்கி அவர்கள் வழியாக நாடு முழுதும் பவுத்தக் கொள்கைகளைப் பரப்பச் செய்தார். பெண்கள் முன்னேற்றத்தை புத்தக் கொள்கை வலியுறுத்தியது. அவர்களும் துறவியாகும் உரிமை வழங்கப் பட்டு, பிக்குளிகளாக நியமிக்கப்பட்டனர். அதுவரை - பார்ப்பன வீடுகளுக்குள் மட்டுமே நடந்து வந்த குருகுலக் கல்விமுறை மாற்றப் பட்டன. கல்விக் கூடங்கள் - பவுத்த கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டன. புரோகிதர்களின் மொழியான சமஸ்கிருதம் மறைந்து, மக்கள் மொழியான பாலி பிரபலமடைந்தது. வறட்சி மற்றும் பஞ்சத்தைப் போக்குவதற்கு யாகங்களை நடத்தும் முறை கைவிடப்பட்டு, பாசனத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. சமூகத்தை வர்ணாஸ்ரம அடிப்படையில் பிரிந்ததை புத்தர் கடுமையாக எதிர்த்தார். புத்தர் மிகச் சிறந்த ஒருங்கிணைப்பாளராக செயல் பட்டார். சாதி, ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். தனது எண்பதாவது வயதில் - கி.மு.483அல் புத்தர் இறந்தார்.
- புத்தர் தனது கொள்கைகளை ஏற்றுக் கொண்ட பார்ப்பனர்களையும் தனது மார்க்கத்துக்குள் சேர்த்துக் கொண்டார். அதைப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனர்கள் புத்த மார்க்கத்தை ஊடுருவி அழித்துவிட்டனர். நாகார்ஜூனன் என்ற பார்ப்பான் 'மகாயானம்' என்ற பவுத்தப் பிரிவை உருவாக்கினான். 'சூன்யவாதம்' என்ற கோட்பாட்டை, புத்தமார்க்கத்துக்குள் வெகுநுட்பமாக இவன் நுழைந்துவிட்டான். உறுதிப்படுத்த முடியாததை 'வெறுமை' என்று சூன்யவாதம் கூறியது. நாகார்ஜூனன் 'வெறுமை'க்கு புதிய வியாக்யானம் தந்தான். 'வெறுமை' என்பது 'இல்லா ஒன்று' அல்ல. எல்லாவற்றுக்குமே இதுவே ஆதாரனமானது என்றான். இந்த 'வெறுமை'யை 'பிரம்மம்' என்று கூறி - அதை பவுத்தத்துடன் இணைத்து 'பவுத்த பிரம்மம்மே' அறுதியான உண்மை என்று வியாக்யானம் செய்தான். புத்தர் என்பவரை மாமனிதராகக் கருதாமல், உலகத்துக்கு அப்பாற்பட்டவர்' என்று கூறி, புத்தர் உலகில் தோன்றி மறைந்தார் என்றும் - புத்தராக அவர் வலம் வந்தது மாயத் தோற்றம் என்றும் நாகார்ஜூனனின் மகாயானம் கூறி - புத்த மார்க்கத்தின் அடிப்படையையே தகர்த்தது. புத்த மார்க்கம் நிறுவனப் படுத்தப்பட்ட மதமாகியது. ஏராளமான பார்ப்பனர்கள் மகாயான புத்த மதத்தில் சேர்ந்தனர்.

**பவுத்தர்களைப் படுகொலை செய்த பார்ப்பனர்கள்!**

- பவுத்தத்தை முற்றிலுமாக ஒழித்து, மீண்டும் வேதத்தை அரியணையில் ஏற்றத் துடித் தார்கள் பார்ப்பனர்கள். இதற்கு - முதலில்

கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் படைப்பு இலக்கியங்களை எல்லாம் அழித்து ஒழிக்கும் வேலையைத் துவக்கினர். குறிப்பாக நாத்திகத்தை வலியுறுத்திய லோகாயத வாதிகளின் இலக்கியங்களை முழுமையாக மீட்கவே முடியாதவாறு அழித்து ஒழித்து விட்டனர். இந்த லோகாயதர்களின் வேத-கடவுள் மறுப்பு சிந்தனைகளை எதிர்த்தும், இகழ்ந்தும் பார்ப்பனர்கள் எழுதிய நூல்களி லிருந்து தான் துண்டுதுண்டாக லோகாயத வாதம் பற்றிய கருத்துகள் காணக் கிடக் கின்றன. இதுபற்றி பிரபல ஆய்வாளர் தேவி. பிரசாத் சட்ட பாத்யாயாயா இவ்வாறு கூறுகிறார்:

“பிற சிந்தனை மரபுகளின் படைப்பிலக்கியங் களாவது ஓரளவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் லோகாயதர்களின் உன்னதப் படைப்பிலக்கியங்களின் மூலப் படிகள் மீட்கவே முடியாதவாறு அழிக்கப் பட்டு விட்டன. துண்டுதுண்டாக வெட்டப் பட்ட சில வரிகள் காணக் கிடைக்கின்றன. அவை கூட லோகாயத எதிர்ப்பாளர்களின் நூல்களில் தான் உயிர் வாழ்கின்றன.”

- படைப்பிலக்கியங்களை மட்டுமல்ல; புத்தகக் கலைகளையும் - பண்பாட்டையும் அழித்து ஒழித்தனர்; புத்த மடலாயங்களை எல்லாம் அழித்தார்கள்.
- நயவஞ்சகமாக படுகொலைகளைப் புரிந்து ஆட்சிக்கு வந்த புஷ்யமித்திரன் என்னும் பார்ப்பன அரசன், அசோக மன்னர் நிறுவிய 84,000 கல்வெட்டுத் தூண்களை இடித்தான். இந்தக் கல்வெட்டுத் தூண்களில் அசோகர் பிறப்பித்த சமூக சீர்திருத்த அரசு ஆணைகளும், புத்தரின் சிந்தனைகளும், மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.
- பவுத்த பிக்குகளும், பிக்குனிகளும், பவுத்தத்தைத் தழுவிய பாமர மக்களும், ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பவுத்தத்தை வேரும் வேரடி மண்ணோடும் அழிக்கும் வரை, இந்தப் படுகொலைகள் தொடர்ந்தன.
- காஷ்மீரத்தைச் சார்ந்த பிரபல வரலாற்று ஆசிரியர் கல்கணன் கூறுகிறார். “பிறர் பற்றி பழி கூறுவோர் சிலரின் தூண்டுதலால் ஜாலுக்கண் என்ற காஷ்மீர மன்னன், பவுத்த மடாலயங்களிலிருந்து எழுப்பப்படும் சங்கொலி, தனது தூக்கத்தைக் கெடுப்பதாகக் காரணம் கூறி அவற்றை இடித்துத் தள்ளினான்.”

**வேதங்களில் துவங்கி - வேதாந்தம் வரை பல்வேறு மாறுதல்களுக்குட்பட்ட சிந்தனைப் போக்குகளில் - வேத எதிர்ப்புக் கருத்துக்களும் உள்ளடக்கமாக இருந்தாலும் - வேதச்சார்பு சிந்தனைகளை மட்டுமே பார்ப்பனர்கள் வேதாந்தமாக்கி - மற்றவைகளை ஒதுக்கினர்**

- ஆய்வாளர் கல்கணன் மற்றொரு அதிர்ச்சி யான தகவலையும் தருகிறார். அபிமன்யு என்ற காஷ்மீரை ஆண்ட பார்ப்பன மன்னன், பவுத்தர்களை இனப் படுகொலை செய்தான் அது இனப்படுகொலை அல்ல என்றும், கடும் பனிப் பொழிவினால், இறக்கிறார்கள் என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்தான்; இந்தப் படுகொலைகள் நடக்கும் குளிர்காலமான 6 மாதங்களில் - தனது நாட்டைவிட்டு அவன் வெளியேறி விடுவான். தன்வ பிஷாரா என்ற பள்ளத்தாக்குப் பகுதியில் தங்கி விடுவான்; பவுத்தர்கள் படுகொலைகள் நாட்டில் திட்ட மிட்டபடி நடக்கும். கடும் பனியினால் பவுத்தர்கள் மட்டும் தான் இறப்பார்களா? பார்ப்பனர்கள் ஏன் இறப்பதில்லை? “பார்ப்பனர்கள் இறக்காததற்குக் காரணம் அவர்களிடம் உள்ள ஆன்ம சக்தி; அந்த ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தி, அவர்கள் கடவுளுக்கு யாகங்களையும், படையல்களை யும் செய்ததால், அவர்கள் சாவதில்லை. பவுத்தர்கள் அவ்வாறு செய்யாததால் மரண மடைந்தனர்” என்று விளக்கம் கூறினான், அந்தப் பார்ப்பன மன்னன்.
- பவுத்த மதத்தினர், ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றார்கள் என்று கூறி, ஆத்திரமடைந்து, ஆயிரக்கணக்கான பவுத்த மடாலயங்களைத் தீக்கிரையாக்கினான், காஷ்மீர் மன்னராகிய நரன் என்ற கின்னரன். பவுத்த மதத்தினர் வாழ்ந்த அந்தக் கிராமங்களில் மத்தியமாதா

> "பிற சிந்தனை மரபுகளின் படைப்பிலக்கியங்களாவது ஓரளவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் லோகாயதர்களின் உன்னதப் படைப்பிலக்கியங்களின் மூலப் படிகள் மீட்கவே முடியாதவாறு அழிக்கப்பட்டு விட்டன.

எனும் பகுதியிலிருந்து பார்ப்பனர்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். இவை எல்லாம் ஆய்வாளர் கல்கணன் தரும் தகவல்கள்.

- காஷ்மீர் பகுதியில் மட்டுமல்ல; இந்தியாவின் பிற பகுகளிலும், பவுத்தர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சிராவஸ்தியை ஆண்ட விக்கிரமாதித்தன் பவுத்தர்களைக் கொடுமைப் படுத்தினான். வங்காள மன்னன் சசாங்கன் பவுத்தர்களைத் தனது பிறவி எதிரிகளாகக் கருதினான். புத்தர் அறிவொளி பெற்றதாகக் கூறப்படும், போதி மரத்தை வெட்டி வேரோடு சாய்ப்பதற்குப் பலமுறை முயன்றான். கேரளாவை ஆண்ட குமாரிலபட்டன் கொடுமை தாங்காமல், பவுத்த மதத்தினர் அனைவரும் கேரளாவை விட்டு வெளியேறினர். சுதன்வனன் எனும் மன்னன், தனது குடிமக்களுக்கு இவ்வாறு ஆணையிட்டான், "தனுஷ்கோடிப் பாலத்திலிருந்து (இலங்கைக்கு ராமர் கட்டியதாகக் கூறப்படுவது) இமாலயம் வரை, பவுத்த மதத்தினரைக் குழந்தைகள், முதியவர்கள் என்று பாராது அனைவரையும் கொன்றுவிட வேண்டும். அவ்வாறு செய்யாதவர்கள் கொல்லப்படுவர்கள்." இத்தகவலை 'சங்கர விஜயம்' என்ற நூல் தெரிவிக்கிறது, புத்த மார்க்கத்தை விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் பி. லட்சுமிநரசு, தனது ஆய்வுகளில், இந்தப் படுகொலைகள் பற்றிய தகவல்களைக் கூறியுள்ளார்.

- ஆய்வாளர் டபிள்யூ.டி. வில்கின்ஸ் இவ்வாறு கூறுகிறார்: "பவுத்தருடைய சீடர்களும் பவுத்த மதத்தைச் சார்ந்த பாமர மக்களும் ஈவு இரக்கமின்றிக் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். வெட்டிக் கொல்வது, நாடு கடத்துவது அல்லது வாள்முனையில் இந்து மதத்துக்கு மாற்றுவது என்று ஏராளமான கொடுமைகள் செய்தார்கள். பிற மதத்தினர் மீது அடக்குமுறையை ஏவி விடுவதும், அட்டூழியங்கள் புரிவதும் உலகம் முழுதும் நடந்துள்ளது. ஆனால் பவுத்த மதத்தை இந்தியாவை விட்டுத் துரத்துவதற்காக, செய்யப்பட்ட அடக்குமுறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் ஈடான வேறு ஒன்று உலகின் எந்த மூலையிலும் நடந்தது இல்லை.

**தொகுப்பு : இராசேந்திரன்**
**(தொடரும்)**


## *வாசகர்களிடமிருந்து...*

சங்க காலத்தில் ஜாதி இல்லை என்று புலவர் செந்தலை கவுதமன் கட்டுரையையும் சங்க காலத்திலேயே வர்ணாஸ்ரமம் தலைதூக்கத் தொடங்கிவிட்டது என்று கவிஞர் தணிகைச் செல்வன் கட்டுரையையும் 'நிமிர்வோம்' வெளியிட்டது மிகவும் சிறப்பு. இத்தகைய அறிவுபூர்வ விவாதங்கள் பார்ப்பன எதிர்ப்பு சிந்தனையை மேலும் கூர்மைப்படுத்துவதற்கே உதவும்.

**– சபரி, பொள்ளாச்சி**

இந்தியா என்பது பிரிட்டிஷ்காரர்களால் உருவாக்கப்பட்டது என்பதை மிக சிறப்பாக 'இராவணன்' எழுதிய கட்டுரை விளக்கியது. இளைய தலைமுறையினருக்கு இந்த வரலாறுகள் அவசியம் விளக்கப்பட வேண்டும்; நிமிர்வோம் இதழுக்குப் பாராட்டு.

**– ஆனந்த், சேலம்**



பெரியார் இயக்க மேடைகளின் தனித்துவம் குறித்து பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியம் பேட்டியை வெளியிட்டதற்கு மகிழ்ச்சி; பாராட்டு. கடவுளையே விமர்சிக்கலாம் என்ற சூழலை உருவாக்கியதன் மூலம் எதையும் விமர்சிக்கலாம் என்று கருத்துச் சுதந்திரத்தின் எல்லையை திராவிட இயக்க மேடைகள் விரிவுபடுத்தின. பத்து, பன்னிரண்டு வயது பையன்கள் எல்லாம் தீவிரமான பத்திரிகைகளைப் படிக்கும் சூழல். இந்தப் பின்னணியில்தான் உருவானது என்ற பேராசிரியரின் கருத்து மிகச் சிறப்பு.

**– விஜய், நாமக்கல்**

# நமஸ்காரம் சொன்னதற்காக நாக்கை வெட்டிய பேஷ்வா பார்ப்பனர்கள்

*மராட்டியர் ஆட்சியில் பார்ப்பனர்களைத் தவிர வேறு எவர் ஒருவர் வேத மந்திரத்தை உச்சரித்தாலும் அவருடைய நாக்கு அறுக்கப்படும். உண்மையாகவே பல பொற்கொல்லர்களின் நாக்கு அவர்கள் வேதத்தை உச்சரித்தார்கள் என்பதற்காகவே அறுக்கப்பட்டது.*

*மும்பை மாகாணத்தில் மிகவும் உயர்வான குலத்தினரான சோனார்கள் (பொற்கொல்லர்கள்) பஞ்சகச்சம் வேட்டி (ஐந்து மடிப்பு) கட்டக் கூடாது என்று தடுக்கப்பட்டார்கள். வணக்கம் தெரிவிக்கும்போது நமஸ்காரம் எனும் சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அவர்கள் தடுக்கப்பட்டார்கள். இதன் பொருட்டு அரசு செயலாளர் பொற்கொல்லர்கள் குலத் தலைவருக்கு எழுதிய மடலின் வாசகம் வருமாறு:*

*“மாண்புமிகு ஆட்சி மன்றக் குழுவின் தலைவர், பொற்கொல்லர்கள் வணக்கம் தெரிவிக்கும் வேளையில் நமஸ்கார் என்னும் சொல்லை பயன்படுத்துவதைத் தடுப்பது முறை என்று கருதி இந்த ஆணையையும் அரசின் தீர்மானத்தை உங்களுடைய மொத்த சமூகமும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு முன்னதாக தெரிவிக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். இதைப் பின்பற்றுவதில் கவனம் எடுத்துக் கொள்ளவும்.*

*ஆணைப்படி*
*அரசு செயலாளர் (ஒப்பம்)*
*டபிள்யூ பேஜ்*

*மும்பை, 1779, ஆகஸ்ட் 9*

*அரசின் தீர்மானம்*

*1779, ஜூலை 28*

*“சில காலமாக பார்ப்பனர்களுக்கும் பொற்கொல்லர்களுக்கும் வணக்கம் தெரிவிக்கும் பொருட்டு நமஸ்கார் என்னும் சொல்லைப் பயன்படுத்துவது தொடர்பாக அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டு வருகின்றன. பொற்கொல்லர்களுக்கு அந்த உரிமை இல்லையென்றும் அவர்களுடைய இந்தச் செயல் மாபெரும் உரிமை மீறல் என்றும் இந்துமதப் புனிதக் கேடு என்றும் பார்ப்பனர்கள் வாதம் செய்கிறார்கள்; எங்களிடம் மீண்டும் மீண்டும் முறையிடுகிறார்கள். பீஷ்வாவும் (மன்னர்–பார்ப்பனர்) பொற்கொல்லர்கள் நமஸ்கார் என்னும் சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்றும் தடுக்கப்பட வேண்டுமென்றும் தலைவரை வேண்டிக் கொண்டு பலமுறை மடல்கள் எழுதியுள்ளார். இது தேவையென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தகராறை நாங்கள் முடித்து வைக்க வேண்டும். இதற்கு நாங்கள் முடிவு செய்ய வேண்டியுள்ளது. பொற்கொல்லர்கள் நமஸ்கார் என்னும் சொல்லைப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டுமென்று பார்ப்பனர்கள் முறையிடுவதில் காரணம் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்தச் செய்தி கிழக்கிந்திய கம்பெனியின் நலன்களுக்குத் தொடர்பு இல்லாதது. எனினும் தலைவர் தம்முடைய நல்லெண்ணத்தின் செயலாக பீஷ்வாவுக்கு இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்.*

(ஆதாரம்: டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 21 பக்கங்கள் அடங்கிய கைச்சுவடியிலிருந்து)

# நிமிர்: அதுவே மனித அடையாளம்

தொட்டில் தொடங்கிச்
சுடுகாடு வரைக்கும்
சடங்குகளாலே
வாழ்க்கை கனத்தது.

ஒவ்வொரு சடங்கிலும்
உருவிய பூணூலுடன்
பணத்தையும் மலத்தையும்
பறிமுதல் செய்தான்.

அதிகார மாதிரி
அறிவு மாதிரி
ஆதிக்கம் அனைத்துக்கும்
அவன் முன்மாதிரி.

எந்த ஒரு புயலிலும்
வேர் பெயராத் தர்ப்பையாய்
ஒவ்வொரு மூளையிலும்
பார்ப்பான் வளர்ந்தான்.

வேதம் படித்தாலும்
மறுக்கப்பட்டாலும்
பூணூல் போட்டாலும்
போடாவிட்டாலும்

ஆதிக்கக்காரன்
ஒவ்வொருவனுக்குள்ளும்
ஆணவம் பிடித்த
பார்ப்பான் இருக்கிறான்.

அடங்கிக் கிடக்கும்
ஒவ்வொரு அடிமைக்கும்
அந்த பார்ப்பானே
குறிக்கோள் ஆகிறான்.

நந்தனின் குறிக்கோள் பார்ப்பனியம்
நமக்கும் குறிக்கோள் பார்ப்பனியம்
இந்தச் சூழலில்
தந்தை பெரியார்.....

****



மானுடம் சுமந்த துயரம் அனைத்தையும்
வரித்துக் கொண்டதுபோல்
கறுத்த சட்டையுடன்
தள்ளாடும் உடம்பைத் தாங்கும் கைத்தடியால்
தள்ளாடும் மானுடத்தைத்
தாங்க வந்ததுபோல்.



**கவிஞர் இன்குலாப்**

நிமிரவே மறந்து
நெடுநாள் கிடந்தேன்...
முதுகில் அந்தக் கைத்தடி தட்டத்
திரும்பினேன்... அந்த
ஞாயிறு சுட்டது.

“நிமிர்
நிமிரத் தெரியாதது விலங்கு
மனித அடையாளம் நிமிர்வது”


தோளில் போட்ட துண்டை எடுத்துக்
கக்கத்தில் வைத்துக்
கைகட்டி நின்றேன்...
“துண்டை எடுத்துத் தோளில் போடு
வீசு கைகளை...
தேவைப்பட்டால்
கட்டச் சொன்னவன் முகத்தில் வீசு.”

(கவிஞர் இன்குலாப் - ‘ஒவ்வொரு புல்லையும்’
கவிதைத் தொகுப்பிலிருந்து)

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN

**நீங்கள் அச்சுக்கு கொடுக்க வேண்டியவை**
புத்தகத்தின் உட்பக்கங்களை குறுந்தகடுகளில் (CD / DVD)
பிடிஎ.்ப் (PDF) ஃபைலாகவும், மேலட்டையை கோரல்ட்ரா
(Corel Draw) ஃபைலாகவும் தரலாம்.

பழைய புத்தங்களை அப்படியே ஸ்கேன் செய்து அச்சிட்டுத் தருகிறோம்.



அளவு
கிரௌன், டிம்மி, டபுள் கிரௌன், A4 மற்றும்
உங்களுக்கு விருப்பமான அளவுகளில்...

| | |
|---|---|
| கிரௌன் 7"x4.75" | டெம்மி 8"x5.1/5" |
| டபுள் கிரௌன் 7"x9 1/5" | A4 8.25"x 11*.7" |


**ARUNA ENTERPRISES**

No.9, Sunkurama Chetty Street, Opp. High Court, Parrys, Cenai - 600 001.
Email: asxpod@gmail.com | salesarune.com | www.szindia.com

XEROX | PRINT | SCAN | COLOR | DESIGN | CADD | CARD | BIND | LAMINATE

CALL CUSTOMER CARE 42113030

# அச்சிடும்
முறையில் ஓர்
# மாற்றம்



**பதிப்பாளர்களுக்கு ஓர் அறிய வாய்ப்பு**

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2017/76313


SHANKAR IAS ACADEMY™

Admissions Open

**TNPSC Group I & II Prelims Coaching -2019**

Class starts on
10th September @ Annanagar

01st September @ Namakkal

**TNPSC Group II-A/OT Prelims Test Batch - 2019**

Classroom | Online

Starts from
2nd Week of September 2019

25 Extensive & Well Structured Tests with Discussions

State Level Ranking & More

Our Centers

Chennai Annanagar & Adyar | Salem | Madurai
Trichy | Coimbatore | Namakkal | Thiruvarur

044 4353 3445 | 4554 3082

www.shankariasacademy.com | www.tnpscthervupettagam.com